No. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الاسلام

HIFAZATH - UL - ISLAM

உயர்தர செந்தமிழ் மாத சஞ்சிகை

மலர் 3. | ஹிஜ்ரி 1350 ஷஅபான் 1932 ஜனவரி மீ | இதழ் 1

5 JAN 1932

உள்ளடக்கம் — பக்கம்

1. ஸூரத்துத்தீன் 1
2. நாயக வாக்கியம் ... 3
3. நமது மூன்றும் மலர் ... 5
4. ஸீரத்துன்னபியும் ஐரோப்பிய நூலாசிரியர்களும் 6
5. நோன்பின் தத்துவம் ... 9
6. இஸ்லாமியப் பெரியார்கள் ... 11
7. சமூக உண்மை சீர்திருத்தம் ... 13
8. ஆப்கனிஸ்தான் முன்னேற்றம் ... 15
9. பொன்மொழிகள் ... 20
10. ரமலான் நோன்பு ... 23
11. பாபர் சக்ரவர்த்தி ... 26
12. ரசூலுல்லாஹ்வும் சமத்துவமும் ... 31
13. ஹிந்துஸ்தான் மகுடமணி ... 33
14. பள்ளிவாசலின் ஒழுக்கங்கள் ... 36
15. பெண்கல்வி ... 39
16. இஸ்லாத்தின் மேன்மை ... 41
17. நிரூபம் ... 44
18 ஹாஸ்யங்கள் ... 45
19. ஆசிரியர் குறிப்பு ... 48
20. சந்தா நேயர்கட்கு ... 48

சென்னை, ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தாரின் வெளியீடு.

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு	... ரூபா	3 0 0
பினங்கு, சிங்கப்பூர், மலாய் முதலிய வெளிநாடுகளுக்கு	... ,,	4 0 0
தனிப் பிரதி	... ,,	0 4 0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரேபக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

48, அங்கப்ப நாய்க்கன் தெரு,

G. T. மதராஸ்.

حفاظة الإسلام مدراس

15 JAN 1932

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம் [குர்ஆன்]

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்ரஹீம் ஸாஹிப் (பாக்கவீ)

மலர் 3	ஹிஜ்ரி 1350 ஷஅபான் மீ 1932 ௵ ஜனவரி மீ	இதழ் 1

ஸூரத்துத்தீன்

நிகரற்ற அருளாளனும் அளவற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் (நான் இதனை ஆரம்பிக்கின்றேன்)

1. அத்திமரத்தின் மீதும், ஜைத்தூன் மரத்தின்மீதும் பிரமாணமாக

2. மேலும் சீனாமலையின் மீதும் (பிரமாணமாக)

3. கார்மானமாக்கப்பட்ட இந்நகரத்தின் மீதும் (பிரமாணமாக)

4. நிச்சயமாக மானிடனை மகா மேலான அந்தஸ்தில் படைத்தோம்.

5. பிறகு அவனை எல்லாவற்றைப் பார்க்கினும் தாழ்ந்த நிலைமையில் ஆக்கிவிட்டோம்.

6. (ஆனால்) நன்னம்பிக்கை (ஈமான்) கொண்டு நற்கருமங்கள் புரிந்தோர்களைத்தவிர, ஆதலின் அவர்கட்கு மட்டிலடங்கா சன்மானமுண்டு.

7. எனவே (இதன்) பிறகு மறுமையைக் குறித்து உம்மை எந்த வஸ்து பொய்யாக்கி வைக்கக்கூடும்?

8. நியாயாதிபதிகளுக்கெல்லாம் அல்லாஹ் மகா மேலான நியாயாதிபதியாக இருக்கவில்லையா?

இவ்வத்தியாயம் மக்கீயாம். ஆண்டவன் இவ்வத்தியாயத்தின் ஆரம்பத்தில் மாபெரும் நான்கு வஸ்துக்களின்மீது பிரமாணஞ்செய்து மானிடன் படைக்கப்பட்டதின் விபரமும் பிறகு அவன் சீதேவித்தனத்தையோ அன்றி மூதேவித்தனத்தையோ தேடிக்கொள்வதின் முடிவையும் தெரிவித்துள்ளான். ஆரம்பத்தில் தீன், ஜைத்தூன், தூர்ஸைனா, பல்தஅமீன் என்னும் நான்கு வஸ்துக்களின்மீது பிரமாணஞ் செய்யப்பட்டிருக்கிறது. அதில் தூர்ஸீனா என்பது ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் ஆண்டவனை தெரிசித்து திருவசனம்புரிந்த மகாப்பருவதமாகுமென்பது யாவருமறிந்ததே. இரண்டாவது கார்மானமாக்கப்பட்ட நகரமென்பது திருமக்கமாநகராகும். அதன் எல்லைக்குள் நுழைகின்றவர்கள் கார்மானத்திலாய் விடுகின்றனர். உலகத்திற்கெல்லாம் மாபெருங் காருண்யமாகவும் அமானத்தாகவும் அனுப்பப்பெற்ற நபிய்யகரீம் (ஸல்) அவர்கள் இவ்வூரினிடமே ஒப்புவிக்கப்பட்டிருந்தார்கள். ஆங்குள்ள முஷ்ரி

கின்கள் எத்தனையோ முறை நாயகம் (ஸல்) அவர்களை இல்லாது செய்துவிட வேண்டுமென்று முயற்சித்தும் அந்நகரமானது தன்னிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்த அமானிதத்தைக் காத்து நல்லவிதமாக மதீனா முனவ்வராவினிடம் ஒப்புவித்துவிட்டது. இதனால் தான் இந்நகருக்கு பிரதானமாக கார்மானமாக்கப்பட்ட நகர மென்பதாக பெயர் கொடுக்கப்பட்டது.

தீன், ஜைத்தூன் என்பவைகள் யாதென்பதிற் பற்பலவாறான அபிப்பிராயப்பேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் மாபெரும் மேதாவிகளான உலமாக்களிலநேகர் இவ்விரண்டும் குறிப்பிட்ட இருவிருக்ஷங்களுக்குச் சொல்லப்படுமென்கின்றனர். அவ்வாறாயின் ஆண்டவன் இவ்விருக்ஷங்களைக்கொண்டு பிரமாணஞ் செய்வதற்கு இதில் என்ன விசேஷம் ஏற்பட்டிருக்கிறதென கேட்கப் படுபவைகளுக்கு பற்பல காரணங்கள் இருப்பதாகக் கூறுகின்றனர். அதாவது தீன் என்னும் அத்திப் பழமானது மற்றப் பழங்களில் காணப்படுவதைப்போல் உரித்தெறியப்படும் தொலிகளும் எடுத்தெறியப்படும் வித்துக்களு மில்லாதபடி இருப்பதுடன் உணவாக உபயோகிக்ககூடியதாயும் சில வியாதிகளுக்கு மருந்தாகவும் அதிசீக்கிரத்தில் ஜீரணிக்கக்கூடியதாகவும் கோளையை போக்குபவையாயும் திரேகத்தை பருமனுக்கக்கூடியதாகவும் ஈரலை சுத்தப்படுத்தக் கூடியதாகவுமிருக்கிறது. தவிர மானிடன் அதை எவ்வித கஷ்டமுமின்றி சாப்பிடக் கூடியதாகவும் இருக்கிறது. அதன் மரத்தில் முள் கிடையாது; பறிப்பதற்கு கஷ்டங் கொடுக்கக் கூடியவிதமாக உயரமுடையதாகவும் இல்லை. எவ்வாறு மகான்கள் உள்ளும் புறமும் ஒன்றுபோலிருக்கின்றனரோ அவ்வாறு இச்செடியும் உள்ளும் புறமும் பிரயோசனமுடையதாய் இருக்கிறது. வருஷத்தில் பலமுறை கனி அளிக்கக்கூடியதாயும் சௌகரியமாக கிடைக்கக்கூடியதாகவும் இருக்கிறது. ஆதலின் நிறைபூர்ணமான—சாலிஹான மனிதர்கட்கு இது ஒப்பாக இருக்கிறது. இவ்வத்தியாயத்தில் சாலிஹான மனிதர்கள் விஷயமாகக் கூறப்பட்டிருப்பதால் அவர்களுக்கு ஒப்பான மரத்தைக்கொண்டு சத்தியம் செய்திருக்கின்றான்.

ஜைத்தூன் மரத்தினாலும் அநேக பிரயோசனமுண்டா யிருப்பதுடன் விசேஷமாக அத்திமரத்திற்காணப்படாத மற்றுமோர் பிரயோசனமும் இதிலுண்டு. அதாவது இதில் உண்டாகும் எண்ணெய்யினால் அநேக பிரயோசனமிருக்கிறது. அதை விளக்கிற்கு உபயோகிப்பதால் மிகுதமான பிரகாசம் ஏற்படுகிறது. அவ்வாறான பிரகாசத்தை மற்ற எந்த எண்ணெய்யினாலும் பெற்றுக்கொள்ள முடியாது. இவ்வாறு பிரகாசம் கொடுப்பதிலும் கமால்—நிறைபூர்ணமானவர்களுக்கு ஒப்பாய் இருக்கிறது. முடிவாக இந்த இரண்டு மரங்களை உண்டாக்குவதிலும் பெரும் கஷ்டம் ஏற்படுவதில்லை. மலைக்காடுகளில் தானாகவே முளைத்து தானே உற்பத்தியாகிவிடுகின்றது. இதுதான் நிறைபூர்ணமான—ஸாலிஹான மனிதர்களின் விசேஷித்த குணநிசயமாகும். அவர்களின் ஆரம்பத்திலேயே இத்தியாதி சற்குணத்தன்மைகள் அமைந்துவிடுகின்றன. இதற்காகத்தான் ஆண்டவன் அவ்விரு மரங்களைக்குறித்து, பிரமாணம் செய்தான்.

தீன் என்பது திமஷ்க் என்னும் பட்டணத்தின் பெயராகும். ஜைத்தூன் என்பது பைத்துல் முகத்தஸிற்குச் சொல்வது. இவ்விரண்டு ஊர்களிலும் அநேக பிரக்கியாதி பெற்ற அன்பியா அலைஹிஸ்ஸலாம் ஜனித்து மரணித்துப் போயிருப்பதினால் அவர்களின் பிறப்பிடங்களைக் குறிப்பிட்டு சாலிஹீன்கள்—கமாலுடையவர்கள் விஷயமாக சொல்லவேண்டியதாயிற்று எனச்சிலர் கூறுகின்றனர்.

இதன் நான்காவது வாக்கியத்தில் மானிடனை மகாமேலான அந்தஸ்தில் படைத்திருக்கின்றேன் எனக்கூறப்பட்டிருக்கிறது. அதாவது மானிடன் அழகான சொரூபத்திலும் விதத்திலும் படைக்கப்பட் டிருக்கின்றான். அவனது உயரத்திற்குத்தக்க பருமனுடன் படைக்கப்பட்டிருப்பதோடு ஒட்டகத்தைப்போல் கழுத்து நீண்டில்லாமலும், யானையைப்போல் மூக்கு நீண்டில்லாமலும் இவ்வாறே மற்ற அவயவங்களையும் நோட்டமிட்டுப் பார்ப்போமாயின் மிகமேலான உன்னதமாக மானிடன் படைக்கப்பட்டிருக்கிறான் எனத்தெரிந்துக்கொள்கிறோம். ஹஸ்ரத் இமாம் ஷாபிஈ (றஹ்) அவர்களின் காலத்தில் ஒரு மனிதன் தன் பெண்சாதியைப்

பார்த்து "சந்திரனைவிட நீ அழகாக இருக்க வில்லையாயின் நீ தலாக்காக இருக்கும். அதாவது நான் உன்னை தலாக்கு சொல்லிவிட்டேன்." எனக்கூறினான். இதுகேட்டு மற்ற உலமாக்கள் யாவரும் ஆச்சரியமுற்று என்ன செய்வதென திகைத்து தலாக் ஏற்படும் விஷயத்தில் யோசித்து தலாக் உண்டாய் விட்டதாகக் கூறினர். இது செய்தி இமாம் ஷாபிஈ (றஹ்) அவர்கட்குத் தெரிந்தவுடன் தலாக் ஏற்படவில்லை எனச் சொல்லி அதற்குக் காரணம் தெரிவித்ததாவது தலாக் சொன்ன மனிதனின் பெண்சாதி மனிதர் இனத்தைச் சேர்ந்தவளாகும்; மானிடனை ஆண்டவன் அழகான ரூபத்தில் படைத்திருப்பதாகக் கூறியிருக்கிறான்; சந்திரனுடைய சொரூபமானது அம்மாதைவிட அழகாக இருக்குமாயின் மானிடனை அழகாக படைத்திருக்கிறேன், என ஆண்டவன் கூறியிருக்க மாட்டான் என்பதாகும்.

இதன் ஐந்தாவது வாக்கியத்தில் இவ்வாறு மேலாக படைத்த மானிடனை அவனது புத்தித் தவறினாலும் சிற்றின்பம் கோபம் கெட்ட எண்ணம் முதலிய துர்க்குணங்களின் காரணமாகவும் மிகத் தாழ்மையாக ஆக்கி விட்டோம் எனக் கூறுகின்றான். அதாவது மானிடன் மிருகத்தைப் பார்க்கினும் மிக மிக கீழான அந்தஸ்தில் ஆய்விட்டான் என்பதாகும். ஆனால் தன் மன இச்சையை அடக்கி பெரும் பிரயாசையோடு நற்கருமங்களை புரிந்தோருக்கு மட்டிலடங்கா நற்கூலி உண்டாய் இருக்கிறது.

ஏ மானிடனே! உன்னை ஆண்டவன் மிக அழகான ரூபத்திற் படைத்து பிறகு வெளிரங்கத்தில் அவ்வழகை எல்லாம் மாற்றி உன்னை கிழவனாக ஆக்கி கண்பார்வை இல்லாமற் செய்து முகத்திலுள்ள வஜீகரத்தையும் போக்கி கூனனாக ஆக்கி பற்களெல்லாம் அசைந்து ஆடும்படி செய்தும் இன்னும் இவைபோன்ற பின்னங்களை அளித்ததைப் பார்த்த பிறகும் மறுமைநாளை பொய்யாக்கி வைக்கக் கூடிய யாது வஸ்து உன்னிடமிருக்கிறது?

இதன் எட்டாவது வாக்கியத்தில் ஆண்டவன் மாபெரும் நியாயாதிபதியாக இருக்க வில்லையா? என்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆம், நியாயாதிபதிகளுக் கெல்லாம் நியாயாதிபதியாக இருக்கின்றான் என்பதை நாம் யாவரும் ஒப்புக்கொள்வதுடன் அகக்கண்ணைக் கொண்டும் தினந்தோறும் அதைப் பார்த்தும் வருகிறோம். அவனது கட்டளையானது நம் யாவர் மீதும் செல்லுபடியாய்க் கொண்டிருக்கிறது.

ஹஸ்ரத் அமீருல் மூமினீன் உமர் (ரலி) அவர்கள் மிகுதமாக இந்த அத்தியாயத்தை கஃபாவுக்கு முன்பாக பர்லு தொழுகையில் ஓதுவார்கள். அதன் கருத்தாவது ஆரம்பத்தில் ஆண்டவன் கஃபதுல்லாவை உத்தேசித்துத்தான் இப்பட்டினத்தைக் கொண்டு பிரமாணம் செய்திருக்கின்றான் என்பதை விளக்குவதற்காகவேயாம். அல்லாஹ் அஃலம்.

நாயக வாக்கியம்.

"உமக்கு என்னோடு சம்பந்தம் வைத்துக்கொள்ள விருப்பமிருப்பின், உலக வாழ்க்கையில் ஒரு வழிப்போக்கனுக்கு தேவையுள்ள அளவே உமக்குப் போதியதாகும். சீமான்களுடன் கூடியிருப்பதை விட்டுத் தவிழ்ந்துக் கொள்ளவேண்டும். உடுபிடவைகளை ஒட்டுப் போட்டு உபயோகிக்காது அதை நீக்கி விடவேண்டாம்." என உம்முல் மூமினீன் ஹஸ்ரத் ஆயிஷா ஸித்தீகா (ரலி) அவர்களைப் பார்த்து நபிய்யகரீம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள்.

இஸ்லாத்தின் ஆரம்பத்தில் ஏழ்மைத்தனம் சாதாரண வாழ்க்கை இவைகளின்காரணமாக நாயகம் (ஸல்) அவர்களினுடையவும் மற்றும் அஹ்லெபைத் களினுடையவும் வாழ்கையானது வெகு சாதாரணமாகவே இருந்தது. அதிலும் நாயகம் (ஸல்) அவர்க

ளின் இயற்கையிலேயே ஆடம்பர வாழ்கை, உலக இன்பங்களை அனுபவிப்பது இவைகள் மீது பெரும் வெறுப்பு ஏற்பட்டிருந்தது. இக்காரணம் பற்றியே அருமை நாயகி ஹஸ்ரத் ஆயிஷா ஸித்தீகா (ரலி) அவர்களைப் பார்த்து 'என்னோடு கூடி வாழ்வதற்கு உமக்கு விருப்பமிருப்பின், உலகத்தின் சுக போகங்களிலிருந்து ஒரு வழிப்போக்கனுக்குத் தேவையான அளவே உமக்குப் போதுமானதாகும் எனக் கூறினார்கள். அதாவது உலகப்பற்றானது மானிடனைத் தன் பக்கல் இழுத்துக்கொள்ளக் கூடிய சக்தியுடையதாக இருக்கிறது. எது பொழுது அதன் இன்பத்தை அனுபவிக்க விரும்புகின்றானோ அது பொழுது தன் நிலையை மறந்து விடுகின்றான். மானிடனாகிய வழிப்போக்கன் இவ்வுலகத்தில் பிரயாணஞ்செய்து மறுமையின் பக்கல் செல்வதற்காகவே படைக்கப் பட்டிருக்கின்றான். ஆதலின் பிரயாணஞ்செல்லுமிடத்தில் சொகண்டி அனுபவித்துக் கொண்டிருப்பது, தான்போய்ச் சேரவேண்டிய மறுமையை மறக்கச்செய்து விடுகிறது. நாயகம் (ஸல்) அவர்களின் அருமையான வாழ்கையில் ஏற்பட்ட இருகாலத்தின் சம்பவமும் நம் கண்முன் இருக்கிறது. அதாவது இஸ்லாத்தின் ஆரம்பத்தில் எத்தனையோ தடவை தங்களுக்கு சங்கட மேற்பட்டிருக்கிறது. பிறகு இஸ்லாம் உன்னத நிலைமை எய்தியபின் பைத்துல்மாலானது அளவற்ற திரவியங்களாலும் சாமான்களாலும் நிரப்பப்பட்டு போயிருந்தது. அதிலிருந்து தாங்கள் பெரும் மனச்சந்தோஷத்தோடு தேள்வையுள்ளார்க்கு நன்கொடை அளித்துக் கொண்டிருந்தார்கள். பைத்துல் மாலிலுள்ளவைகளைத் தாங்கள் பங்கிட்டுக் கொடுக்காதவரை வீடு செல்லமாட்டார்கள். அதுபொழுதும் நபிய்யகரீம் (ஸல்) அவர்கள் தங்கள் பழையநிலைமையை மறந்து விட்டார்களில்லை. அவர்களது ஊண்தின் உடையாவும் பழைய நிலைமையிலேயே இருந்தது. ஆதலால் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதானது கஷ்ட நிலைமையை உத்தேசித்து கூறியவையல்ல. அவர்கள் தற்சுபாவமே ஆடம்பரத்தையும் சுவண்டி பெறுவதையும் வெறுத்திருந்ததென நன்கு புலனாகின்றது. இதனால்தான் பீபீ ஆயிஷாசித்தீகா (ரலி)அவர்களைப் பார்த்துக்கூறி நம்மனைவோருக்கும் எச்சரிக்கை செய்திருக்கின்றார்கள்.

இரண்டாவது தனவந்தர்களுடன்கூடி உறவாடுவதை விட்டும் விலகி இருக்கும்படியும் கட்டளைப் பிறப்பித்திருக்கின்றார்கள். சதா அவர்களுடன் கூடி இருப்பதைக்கொண்டு அவர்களது தனத்தையும் சுகண்டியையும் பார்த்துக்கொண்டே இருக்கும்படி நேரிடுகிறது. அதனால் ஐஸ்வரியம் தேடவேண்டுமென்னும் விருப்பம் ஏற்பட்டு விடுவதினால் சில சமயம் ஆண்டவனை மறந்துவிடுவதற்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டு விடுகிறது. பிறகு அபரிமிதமான பொருளாசைகொண்டு தன் போலொற்றவர்களை விட மேலாவதற்கு எண்ணம் ஏற்பட்டு சமமானவர்களுடன் பகைமை கொள்வதற்கும் வழி உண்டாகி அவர்களுக்கு இடர் செய்யவேண்டு மென்னும் எண்ணம் மனதில் உதித்து விடுகிறது. இதற்காகத்தான் சீமான்களுடன் சதா கூடி உறவாடிக்கொண்டிருப்பது தகைமை உடையதாகாதென்று கூறினார்கள்.

மூன்றாவது பிடவைகளைத் தைத்து அல்லது ஒட்டுப்போட்டு உபயோகிப்பதற்குமுன் அதை நீக்கிவிடுவது வீண் விரயம் செய்வதாகுமாதலின் அதையும் விலக்கி இருக்கின்றார்கள். எம்பெருமானார் (ஸல்.) அவர்களே தங்கள் கைப்பட ஒட்டுப்போட்டுத் தைத்து அவைகளை அணிந்திருக்கின்றார்கள். அவ்வாறு அணிவதினால் மனதில் அகம்பாவம் ஏற்படாமல் ஏழ்மைத்தனத்தின் ஞாபகம் ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது. ஆனால் உடுக்க உடையின்றி கஷ்டப்படும் ஒரு ஏழைக்குக் கொடுப்பதற்காக அதை உபயோகிப்பது மேலாகும். ஆனால் ஒட்டுப் போட்டதையோ அல்லது தைத்ததையோ அணிவது அந்தஸ்திற்கு தகுதியல்லவென நினைத்து அதை நீக்கி விடுவது சரியல்ல. சிலர் புதிது புதிதாக வாங்கி அணிந்து கொள்வதற்கு சக்தியற்றவர்களாய் இருக்கின்றனர். ஆனால் சிநேகிதர்களிடம் சேர்ந்து இருக்கவேண்டுமென்பதைக் கருதியோ அன்றி யாவரும் ஒன்றாகக்கூடும் சங்கத்திற்குப் போகவேண்டும் என்பதை உத்தேசித்தோ புதிது புதிதாக வாங்கும்படி நேரிடுகிறது. அவர்களிடம் அதற்குள்ள காசு பணம் கிடையாததால் கஷ்டப்பட்டு கடன் வாங்கி அவ்வாறு செய்யும்படி நேரிடுகிறது. ஆதலின் இவர்கள் மேலே கூறப்பெற்ற ஹதீதின்படி நடந்துக் கொள்ளவேண்டியது மிக மிக அவசியமாகும்.

حفاظة الإسلام مدراس

நமது மூன்றும் மலர்.

இவ்வகிலத்தின் கண் தோன்றியுள்ள யாவற்றையும் படைத்து ரெக்ஷித்துக் காப்பாற்றி வருபவனுகிய எல்லாம் வல்ல ஆண்டகையின் கிருபா கடாக்ஷத்தாலும், உலக ரக்ஷகர் எம் பெருமானுர் நபிகள் திலகம் (ஸல்) அவர்களது திருவருளாலும் முஸ்லிம் சகோதரர்களாகிய தங்களனைவர்களின் அன்பான ஆதரிப்பாலும் நம் அரும் மாசிகையாம் உங்கள் இஸ்லாமிய பாதுகாவலனுகிய "ஹிபாஜத்துல் இஸ்லாம்" என்னும் அரும்மாசிகையின் இரு ஆண்டு பூர்த்தியுற்று மூன்றும் ஆண்டு இத்தோடு ஆரம்பமாகிற தென்பதை வெகு சந்தோஷத்தோடு தங்களுக்குத் தெரிவிக்க சந்தர்ப்பம் வாய்ந்ததற்கு அவ்வாண்டகையை மிக மிகப்போற்றிப் புகழ்கின்றோம். உலக சக்கரம் அதிவிரைவில் சுழன்று வருவதின் பயனுக மக்களின் நடை உடை பழக்க வழக்கங்கள் தீவிரமாக மாறுபட்டும் மனப்பான்மை வேறுபட்டும் வருகிறதென்பது உலகறிந்த இரகசியமாகும். இம்மாறுதலெனும் சுழற்காற்றில் நமது முஸ்லிம் சமூகத்தினரிற் பல்லோர் சிக்குண்டு போயிருக்கின்றூர்களென்பது எவராலும் மறுக்கமுடியாத உண்மையாகும். அவ்வாறு சிக்குண்டுழல்பவர்களின் இஸ்லாமியக்கொள்கை நடை உடை ஒழுக்க நாகரீகம் முதலியவைகள் ஒருவாறு மாறுபட்டு வருகிறதென்பது வெள்ளிடை. இம்மாறுதல்கள் நமது நபிகள் திலகம் (ஸல்) அவர்களின் நடை ஒழுக்கங்கட்கும், ஹிதோபதேசங்களுக்கும் முற்ற முற்ற மாறுபட்டனவாகவே காணப்படுகின்றன. இவைகளை சீர்படுத்தி இஸ்லாமிய நாகரீகத்தை நிலைநாட்டவும் இஸ்லாமிய உண்மைக் கொள்கைகள் மாறுபடாமல் பாதுகாக்கவும் முற்படல் உண்மை முஸ்லிம்களின் மார்க்கக் கடமையாகுமென்பதை யாரே மறுக்க வல்லார். நம் பாதுகாவலனுகிய ஹிபாஜத்துல் இஸ்லாமானது கடந்த இரு ஆண்டுகளாக நம் தூய்மை வாய்ந்த பரிசுத்த மார்கத்திற்கும் சமூகத்திற்கும் ஆற்றியுள்ள அருந்தொண்டை பொதுவாக நந்தென்னுடும் குறிப்பாக ஹிபாஜத்துல் இஸ்லாம் வாசகர்களும் நன்கறிந்தே இருக்கின்றனர்.

நம் தென்னுட்டில் சிறிது காலமாகத் தோன்றியுள்ள மாறுபட்ட கொள்கைகளும் வழிகெட்ட தீயப்பிரசாரங்களும் மேனுட்டு நாகரீக பழக்கவழக்கங்களும் நம்மிலே சிலரை தன் வயப்படுத்திக் கொண்டுள்ள தென்பது நேயர்கள் அறிந்ததே. அவைகளை சீர்திருத்தி ஒழுங்கு படுத்துவதிலும், ஷிர்க், பித்அத், ரித்தத் முதலிய அனுச்சாரங்களை ஒழிப்பதிலும் தீயபிரசாரம் பரவாமல் தடுப்பதிலும் நம் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" பெரும் முயற்சி எடுத்துக்கொண்டிருப்பது நாம் சொல்லாமலே நன்கு புலனுகும். ஓர் சமூகம் ஒரு தேசம் முன்னேற்றமடைய வேண்டுமாயின் அல்லது ஒரு தீய கொள்கை மக்களிடையே பரவாமல் தடுக்கப் படவேண்டுமாயின் அதற்கு பத்திரிகைகளே இன்றியமையாத சாதனமென்பது அறிஞர்களின் அனுபவ சித்தாந்தமாகும். இதற் காதாரமாக கேவல நிலைமையிலிருந்த பற்பல தேசங்களும் சமூகங்களும்

பத்திரிகையின் பிரசார வன்மையின் காரணமாக சீர்திருத்தம் பெற்று முன்னேற்றமடைந்திருப்பதைக் கொள்ளலாம். நம் தென்னாட்டிலும் முஸ்லிம் அல்லாதாரின் பத்திரிகைகள் — தினசரி, வார மும்முறை இருமுறை வாராந்தம் முதலியவைகள் நூற்றுக்கணக்கில் வெளிவந் துலவுவதையும் அந்தந்த சமூகத்தினர்களின் ஆதரிப்பினால் நாளடைவில் அவைகள் அபிவிருத்தி அடைந்து வருவதையும் நாம் கண்கூடாகக் காண்கின்றோம். நம் தென்னிந்திய தமிழ் முஸ்லிம்களுக்காகவென்று ஒரு சில மாசிகைகளும் பத்திரிகைகளும் காணப்படினும் அவைகள் நம் சமூக ஜனத்தொகைக்குப் போதிய அளவாகாதென்பது திண்ணம். இதுவன்றி இன்னும் அநேக நூற்றுக்கணக்கான பத்திரிகைகள் நம் முஸ்லிம் சமூகத்திற்கு வேண்டற்பாலதாகுமென்பதே முஸ்லிம் தலைவர்களுடையவும் மேதாவிகளுடையவும் ஆழ்ந்த அபிப்பிராயமாகும். அவ்வாறு நம் சமூகம் பத்திரிகை உலகத்தில் பெருக்கமேற்படாம லிருப்பதற்கு நம் சமூகத்தவரின் பத்திரிகா அபிமானக் குறைவே காரணமாகும். தூக்கத்திலிருக்கும் நம் சமூகத்தினரைத் தட்டி எழுப்புவதும் விஷய மறியாதாருக்கு விஷய மறிவிப்பதும் உணர்ச்சி அற்றோர்க்கு உணர்ச்சி உண்டுபண்ணுவதும் பத்திரிகைகளாலேயே சாத்தியமாகுமென்பது வெள்ளிடை. ஆனது பற்றியே மேனாட்டார் பத்திரிகைகளை வியாபாரங்கட்கும் அரசாங்கங்கட்கும் பேருதவியாகக் கொண்டு அவைகளை ஆதரித்து வருகின்றனர். மார்க்கத்திற்கும் நம் சமூகத்திற்கும் மிக நெருக்கடியான சந்தர்ப்பத்தில் நமது அபிமானிகளி லனேகர் நம் சங்க சார்பாக ஒரு மாசிகை வெளியிடவேண்டுமென்று வேண்டிக்கொண்டதை முன்னிட்டே இம்மாசிகை ஆரம்பிக்கப்பட்டது. நேயர்களின் ஆதரிப்பிற் கேற்ப இதை அபிவிருத்திசெய்ய நோக்கங் கொண்டுளோம். கடந்த இரண்டு ஆண்டுகளாக பல அபிமானிகள் நம் அரும் மாசிகைக்கு சந்தாதாரர்களாகச் சேர்ந்தும் பலர் பற்பல சந்தாக்களைச் சேர்த்தனுப்பியும் பேருதவி புரிந்திருக்கின்றனர். அன்னவர்கட்கு எங்களின் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்திக்கொள்வதோடு மென்மேலும் முன்போல் உதவி புரியுமாறும் வேண்டுகின்றோம். நேயர்களனைவரும் இதனை அன்புடன் ஆதரித்து மனமகிழ்வார்களென எதிர்பார்க்கின்றோம்.

ஸீறத்துன்னபியும், ஐரோப்பிய நூலாசிரியர்களும்

ஐரோப்பிய நூலாசிரியர்கள் இஸ்லாத்தைப் பற்றி நீண்டநாளாகவே தவறாக எண்ணிக்கொண்டிருந்தனர். பின்னர் 17-வது நூற்றாண்டின் மத்தியில் ஐரோப்பாவுக்குப் புதிய வாழ்வு ஆரம்பமாயிற்று. ஆகவே ஐரோப்பாவின் முயற்சியாலும் சுதந்தர உணர்ச்சியாலும் கீழ்நாட்டுப்பாஷைகளை அறிந்த பலர் தோன்றினர். இவர்களின் ஊக்கத்தால் அரிய பல அறபி நூல்களின் மொழிபெயர்ப்புகள் ஐரோப்பாவில் பிரசுரமாயின. அறபிப் பாஷையைப் போதிக்கும் பள்ளிக்கூடங்கள் ஐரோப்பாவில் நிறுவப்பெற்றன. பின்னர் இஸ்லாம் சம்பந்தமாக முஸ்லிம்களிடமிருந்து சிறிது விவரங்களைத் தெரிந்துகொள்ளும் காலமும் இப்பொழுது ஏற்பட்டிருக்கின்றது.

சென்ற பதினேழாவது நூற்றாண்டில்தான் கிறிஸ்தவ வைதீகர்களின் வலையிலிருந்து ஐரோப்பா விடுதலைபெற்றது. அர

சாங்கம் வேறு, மதம்வேறு என்று பிரிக்கப் பெற்றது. ஆகவே சனங்கள் இஸ்லாத்தைப் பற்றி தடையின்றி ஆராய்ச்சிசெய்யவும் நூல் எழுதவும் தலைப்பட்டனர். அவர்களில் மத துவேஷமற்றவர்களும், உண்மையை அறியும் ஆர்வமுள்ளவர்களும் மத துவேஷமுள்ளவர்களும் இருந்தனர். இவர்களின் முயற்சியால் எழுதப்பட்ட இஸ்லாம் மதத்தொடர்பான நூல்கள் இக்காலத்திலும் பல இருக்கின்றன. அவைகளைப் பார்த்து நாம் அந்நூலின் தன்மையை ஒருவாறு நிதானித்துக்கொள்ளல் கூடும்.

இவ்வாறு எழுதிய நூலாசிரியர்களில் மார்கோலியோ, எட்வர்ட்பூகாக் ஹாட்டின்ஜர், முதலியவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாகும். எனினும் துர்அதிர்ஷ்ட வசமாக கீழ்நாட்டுப் பாஷை அறிஞர்களாகிய இவர்களுக்கு இஸ்லாமிய நூல் எழுத உதவியாக வாய்ந்த நூல்களில் பெரும்பாலும் இஸ்லாமிய அரசாங்கத்தின் கீழ் இருந்த கிறிஸ்துவர்கள் எழுதியவைகளாகவே இருந்தனவாகையால் இவர்களின் நூல்கள் நேர்மையாக அமைவதற்கில்லாமற் போயின.

பின்பு 18-ம் நூற்றுண்டில் ஐரோப்பாவின் ராஜீய வலிமை இஸ்லாமிய நாடுகளிலும் பரவத் துவங்கிற்று. ஆதலால், கீழ்நாட்டு மொழிகளைக் கற்கும் வெள்ளையர்களின் கூட்டமும் பெருகிற்று. இக்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் அவ்வவ் அரசாங்கங்களின் அனுமதி பெற்றுக் கீழ்நாட்டுப் பாஷைகளைப் போதிக்கும் பள்ளிக்கூடங்களை நிறுவினர். கீழ்நாட்டு மொழிகளாலமைந்த நூலாலயங்களை ஏற்படுத்த அஸ்திவாரமிட்டனர். ஏஷியாட்டிக் சொஸைட்டிகளை (ஆசியா சங்கங்கள்) ஏற்படுத்தினர். கீழ்நாட்டு மொழிகளில் ஏற்பட்ட நூல்களை மொழிபெயர்த்தனர்.

ஆகவே, முதல் முதலாக ஹாலண்டு அரசாங்கத்தார் கிழக்கிந்தியத் தீவுகளில் 1778-ல் ஏஷியாட்டிக் சொஸைட்டியை ஏற்படுத்தினர். அதன்பின் ஆங்கிலேயர் கல்கத்தாவில் 1784-ல் ஜெனரல் ஏஷியாட்டிக் சொஸைட்டியை ஏற்படுத்தினர். பின்னர் 1788-ல் பெங்கால் ஏஷியாட்டிக் சொஸைட்டியும் ஏற்பட்டது. பின்பு 1795-ல் பிரான்சுதேசம் அறபி, பார்ஸீ, துருக்கி பாஷைகளைப் போதிக்கக் கல்விச்சாலையை ஏற்படுத்தியது. இறுதியாக ஐரோப்பிய அரசாங்கங்களில் பல சங்கங்களும் கல்விச்சாலைகளும் ஏற்பட்டன. சர்வகலாசாலைகளில் அறபிபாஷை போதிக்க அறபி ஆசிரியர்களும் நியமிக்கப்பெற்று அறபி நூல் நிலையங்களும் அமைக்கப்பெற்றன.

முஸ்லிம்களால் அறபிப்பாஷையிலெழுதப்பட்ட அநேக நூற்கள் ஒன்றன்பின் ஒன்ருக ஐரோப்பாவில் அச்சடிக்கப்பெற்றுப் பிரசுரமாயின. அவைகளில் பல ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்க்கவும் பெற்றன. இவ்வாருக, ஐரோப்பாவில் இஸ்லாமிய சரித்திர ஆசிரியர்களும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை நூல் வறைபவர்களும் பல்கி விட்டனர். இதனுற்ருன் ஆக்ஸ்போர்ட்டிலுள்ள ஓர் அறிஞர் "முஹம்மதின் வாழ்க்கைச் சரித்திரத்தை எழுதுவோரின் தொகை மிகவும் விரிவாக இருக்கிறது; அத்தொகை முடிவடைவது முடியாத காரியமாகத் தோன்றுகின்றது. அத்துடன் அக்குழுவில் அங்கம் பெறுவதும் பெருமையாகவும் இருக்கிறது" எனக்கூறி இருக்கின்ருர்.

ஐரோப்பாவில் இஸ்லாமிய சரித்திரங்களையும் ஸியர்களையும் எழுதுவோர் அபரிமிதமாக இருந்தாலும் அவர்களை மூன்று பாகமாகப் பிரிக்கலாம். அதாவது, அறபிப்பாஷையை அறியாதவர்கள்; இவர்கள் மொழிபெயர்ப்புகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு இஸ்லாம் மத சம்பந்தமாக நூல் எழுதத் தலைப்பட்டவர்கள் இவர்கள் தங்களுக்குச் சந்தேகமாகத் தோன்றுமிடங்களிலெல்லாம் தங்கள் சொந்த அபிப்பிராயங்களைப் புகுத்தியிருக்கின்றனர்.

அறபிப்பாஷை, சரித்திரம், இஸ்லாமிய தத்துவம் ஆகியவைகளில் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் மற்ருெருவகை. ஆனுல் இவர்கள் மதசம்பந்தமாகத் தெரிந்துகொள்ளாததோடு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வீரத் முதலியவைகளைச் சிறிதும் கற்றறியாதவர்கள். இவர்கள் வீரத்தைப் பற்றியோ இஸ்லாம் மதத்தைப்பற்றியோ தனியாக நூல் எழுதவில்லை எனினும், இதர நூல்களில் சமயம் கிடைத்தபோது தங்களின் அறபிப்பாஷா ஞானவன்மையால் நபிகள்நாயகம் (ஸல்) அவர்களையும் இஸ்லாம் மதத்தையும்பற்றி வாலாயமாக வறைந்து வைத்திருக்கின்றனர்.

இஸ்லாம்மத நூல்களை நன்ருக படித்தவர்கள் மூன்ருவது வகையினராவர். இவர்கள்

அறபிப்பாஷையை நன்கு கற்றதுடன் இஸ்லாம் மத நூல்களையும் படித்திருப்பதால் இவர்களால் அநேக நன்மைகள் ஏற்படக் கூடும் என்று நாம் எதிர்பார்க்க இடமுண்டாயினும், இவர்கள் படிப்பது ஒன்றும் அறிவது வேறென்றுமாகவே காணப்படுகின்றது. எனவே, இவர்கள் கண்ணிருந்தும், குருடர்களாவர்.

இதனால் இம்மூவகைக் குழாத்தினராலும் இஸ்லாத்திற்கு நன்மை ஏற்பட வழியில்லாமற்போனதோடு இவர்களால் பல தப்பெண்ணங்களுக்கும் இடமுண்டாயிற்று. இதற்குக் காரணம் யாதெனில் :—

1. வாக்கிதி முதலியவைபோன்ற ஸீறத்துகளும் முகாஸிகளுமே இவர்களுக்கு முக்கிய ஆதாரநூல்களாய் அமைந்திருக்கின்றன. முஸ்லிமல்லாத ஒருவர் நபிகள்நாயகம் (ஸல்.) அவர்களின் ஸீறத்தை எழுத விரும்புவாராயின் அவர்கள் இத்தகைய நூல்களை வழிகாட்டியாகவே கொள்வது இயல்பு. ஆனால், உண்மையில் மேற்கண்ட ஸீறத்துகள் முகாஸிகள் எதுவும் ஆதாரமாகக் கொள்ளத்தக்க நூல்களன்று. இந்த நூல்களில் சொல்லப்பட்ட ரிவாயத்துகளில் பெரும்பான்மை வலிமை குன்றிய ராவிகளையே ஆதாரமாகக்கொண்டவைகளாகும். இந்த ராவிகளின் ரிவாயத்துகள் சாமான்ய விஷயங்களில் நம்பத்தக்கனவயாய்க் கருதப்பெறினும், முக்கியமான பிரச்னைகளுக்கு அவைகள் போதுமானவைகளல்ல.

ஹதீது கித்தாபுகளில் ஸஹீஹான ரிவாயத்துகளைக் கொண்டு எழுதப்பட்ட விஷயங்களே நபிகள் திலகம் (ஸல்) அவர்களின் ஸீரத்துக்கு முக்கிய ஆதாரமானவைகளாகும். ஐரோப்பிய நூலாசிரியர்களுக்கு இவ்வுண்மை தெரியாது. ஆதலால் அவர்கள் ஹதீதுகளிலிருந்து தங்கள் நூல்களுக்கு ஆதாரந்தேடவில்லை. மிகச் சிலர் இவ்வுண்மையை உணர்ந்து ஹதீது நூல்களை ஆதாரமாகக் கொண்டனரெனினும், அவர்கள் ஹதீதுகளில் நிபுணர்களாகவோ தக்க பாண்டித்திய முடையவர்களாகவோ இருக்கவில்லை. எனவே, அவைகளிலிருந்து ஸஹீஹான ரிவாயத்துகளைத் துருவி எடுக்கச் சக்தியற்றவர்களாக இருக்கின்றார்கள். அவ்வாறு துருவி எடுக்கச் சக்தி பெற்றவர்கள் இருப்பினும் மதத்துவேஷம் என்ற நெருப்புப்பொறியானது அவர்களது அறிவின் கண்களை அவித்துவிடுகின்றது.

2. ஐரோப்பியர்கள் தாங்கள் எழுதிய நூல்களில் விஷயங்களுக்கு ஆதாரந் தேடும் முறையும் முஸ்லிம்களின் முறைக்கு முரண்பட்டிருக்கின்றது. விஷயத்தைக் கூறும் ராவி உண்மையாளரா? பொய்யரா? அவருடைய பழக்க வழக்கங்கள் யாவை? அவருடைய ஞாபகசக்தி எத்தகையது? அச்சம்பவம் நிகழ்ந்த இடத்து அவர்கூட இருந்தாரா? விஷயத்தைக் கிரகிக்கும் ஆற்றல் அவருக்கு உண்டா என்ற விஷயங்களை ஐரோப்பியர் கவனிப்பதில்லை. அவர் கூறும் பொருள் சமயசந்தர்ப்பத்திற்கு ஒத்திருக்கிறதா? விஷயம் தொடர்ச்சியாக இருக்கிறதா? என்ற விஷயங்களையே அவர்கள் பெரும்பாலும் கவனிக்கின்றனர். பொய்யே பூஷணமாகக் கொண்ட ஒரு ராவி விஷயத்தை சமய சந்தர்ப்பத்திற் கேற்றவாறு ஜோடித்து எங்கும் தங்கு தடையில்லாமல் தைலதாரைபோல் தொடர்ச்சியாகக் கூறுவாராயின் அதை ஐரோப்பியர் உண்மை என ஒப்புக்கொண்டு விடுவர். ஆனால், முஸ்லிம்கள் அதிலும் முஹத்திதுகள் இந்த ராவிகளை முதலில் தங்கள் அபிதான விளக்க நூல்களில் துருவிப் பார்த்து இவர்கள் நம்பத்தகுந்தவர்கள் தொகையில் சேர்க்கப்பட்டிருந்தால்தான் இவர்கள் கூறும் விஷயங்களை ஒப்புக்கொள்ளுவர். ஆனால், அவர்கள் கூறும் விஷயம் சமய சந்தர்ப்பத்திற்கு ஏற்றதா அல்லவா என்பதையோ விஷயம் தொடர்ச்சியாக வருகின்றதா என்பதையோ தலைமையான விஷயமாகக் கருதமாட்டார்கள். எனினும், அவைகள் யுக்தமானவைகளா, இல்லனவா, என்பதைக் கவனிப்பதற்கும் ஏற்றவாறு முஹத்திதுகளிற் சிலர் பல சட்டதிட்டங்களை வரையறுத்திருக்கின்றனர். இதனாற்றான் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் வாழ்க்கைச் சரித்திரம் எழுதுவதிலும் இதர இஸ்லாம் மத சம்பந்தமான நூல்களைத் தொகுப்பதிலும் ஐரோப்பிய ஆசிரியர்களுக்கும் நம்மவர்களுக்கும் முற்றிலும் மாறுபாடு ஏற்பட்டிருப்பதோடு, ஐரோப்பிய நூல்களில் பெருந் தவறுகளும் காணப்படுகின்றன. ஆதலாற்றான் தற்காலத்து நம் அறிஞர்கள் ஐரோப்பிய மொழிகளில் இஸ்லாமிய நூல்களையும் ஸியர்களையும் எழுத முயன்றுவருகின்றனர்.

நோன்பின் தத்துவம்

"இஸ்லாம் உண்மைமதம்" என்பதற்கு விஞ்ஞான சாட்சியம்.

மனிதனின் சுகத்தின்மீது நோன்பின்குணம்.

உபவாச மிருப்பதினால் பல்வகையான நோய்கள் இலகுவில் மாறிப்போகின்றன. மனிதனுக்குஏற்படும் பலவித நோய்களையும் பொதுவாக குணப்படுத்துவதற்கு நோன்பு ஒன்றே சரியான மருந்தாகும். மந்திரபலத்தால் மாறிற்றோ அன்றி அற்புதமாக மாறிற்றோ என்று வியக்கும்படியாக அத்துணை விரைவில் மிக அதிசயிக்கத்தக்க விதத்தில்எந்த வியாதியையும் பரிகாரஞ் செய்யக்கூடியதா யிருக்கின்றது. நோன்பு நோற்பவர் வெளிப்பார்வைக்குத் தமது தேக ஸ்திதிக்குப் பங்கம் விளைவித்துக்கொள்வதுபோல் காணப்படினும் உண்மையில் அவர் தம்முடைய ஆரோக்கியத்தைப் பாதுகாத்துக்கொள்பவராய் இருக்கின்றார். நாம் நம்தேக சுகம் சரியான நிலைமைக்கு வரும்பொருட்டே பசி வரும்வரை உணவருந்தாமல் காத்திருக்கின்றோம். இச்சந்தர்ப்பங்களில் மனிதன் தன் உடலினுள்ள சொற்ப அளவு தசையையும் உதிரத்தையும் இழக்கவேண்டியதாய் இருக்கின்றதென்னும் உண்மையை எல்லோரும் அறிந்துகொண்டிருக்கின்றனர். பசி உண்டாகும்வரை யாதொன்றும் அருந்தாமலிருப்பதினால் என்ன என்ன நன்மைகள் விளையுமோ அவற்றினைப்பார்க்கினும் உபவாசமிருப்பதினால் அதிக நன்மைகள் ஏற்படுகின்றனவென்பது அனுபவ சித்தாந்தமாகும். முடிவாக தேகத்தை அடக்கியாளுந்தன்மை இருப்பின் எந்தக்காரியத்திலும் சித்தி பெறலாம்

சமீபத்தில் ஜார்ஜ் ஹெய்லர் ஜான்ஸ்டன் என்பவர் சிகாகோ நகரத்திலுள்ள எலேகினி மலைகளின் உயரத்தில் யாதொன்றும் அருந்தாமலே 'நார்மேக்பேடன்'' என்னும் ஸ்தலம்வரை 20 நாட்கள் யாத்திரைசெய்து காண்பித்தார். அதைக்கண்ட பொதுஜனங்களுக்கு வியப்பு உண்டாகி அதிலிருந்து அவர்கள் சில உண்மைகளை அறிந்துக்கொண்டனர். அதாவது:—எந்த மனிதனாலும் பசியை அடக்கிக்கொள்வது முடியாது; சில விசேஷமான அப்பியாஸங்களாலேயே பசியினை வெண்டுவிடுவதுமுடியும்; சில குறிப்பிட்ட அப்பியாஸங்களால் தேகத்தை அடக்கியாளுந் தன்மை பெற்றவருக்கு அபரிமிதமான சக்தியும் வன்மையும் வாய்க்கின்றது. மரணத் தறுவாயில் வரும் துன்பத்தினையும் எதிர்த்து நிற்பதற்கு தக்க உதவியாயிருக்கும் என்பதாகும்.

நிப்ராஸ்காவிலுள்ள வைத்தியக் கல்லூரியில் பிரபலஸ்தராய் இருக்கும் ஸர் மார்கோலைஸ் என்பவர் இது விஷயமாக ஒப்புயர்வற்ற ஒரு நூல் எழுதி வெளியிட்டிருக்கின்றார். அந்நூல் நோன்பைக் குறித்து அளவற்ற அறிவையும் உண்மையையும் போதிக்கின்றது.

ஸர் மார்கோலைஸ் தமது பரீட்சை சாலையில் அநேக வருஷங்களாக ஆராய்ச்சிசெய்து சில உண்மைகளை அறிந்திருக்கின்றார்; அவ்வுண்மைகளை தற்காலமுள்ள விஞ்ஞான ஆராய்ச்சிகளின் மூலமும் நவீன கருவிகளின் மூலமும் நிரூபித்துக் காட்டி இருக்கின்றார். அவர் அநேக நூதன முறைகளைப் பரீக்ஷித்துப் பார்த்ததில் தற்காலம் நோன்பு வைப்பவர்கள் அனுசரிக்கும் விதிகளில் முக்கிய பாகம் சரியான முறையில் அமைந்திருக்கின்றதென்னும் முடிவிற்கே வந்திருக்கின்றார்.

அவருடைய ஆராய்ச்சியின் காரணமாக விரதமானது மனிதனது சுகத்திற்கு கெடுதியை உண்டுபண்ணுகின்றதென்னும் சந்தேகம் நிவர்த்தி செய்யப்பட்டி ருக்கின்றது. அவர் நோன்பைப்பற்றி தொடர்ச்சியாக பரீசீலனை செய்து சில உண்மைகளை வெளியிட்டிருக்கின்றார். நோன்பு வைப்பவருடைய தேக எடையில் 100-க்கு 10 அல்லது 12 பங்கிற்குமேல் குறையாமலிருக்குமாகில் அது அவருடைய ஆரோக்கியத்திற்கு யாதொரு தீங்கும் செய்யாதென்றும், 25 முதல் 30 பங்குவரை தேக எடை குறையும்போதுதான் நோன்பாளியின் தேக சுகம் பாதிக்கப்

படுகின்றதென்றும், அந் நிலைமையில்தான் தேகத்திலுள்ள இராஜ கருவிகளுக்கு தீங்கு நேரிடுகின்றதென்றும் அவர் நிச்சயமாகக் கூறுகின்றூர். அவர் தம்முடைய வருஷக் கணக்கான அனுபவங்களினுலும் ஆராய்ச்சிகளினுலும் நோன்பானது உடலிற்கு புதிய மாதிரியில் பலத்தையும் ஆற்றலையும் அளிக்கக் கூடிய அருமையான மார்க்கமாய் இருக்கின்றதென்னும் ஒரே முடிவிற்கு வந்திருக்கின்றூர். பெரும் நோன்பு அதாவது அறவே உண்ணுமலும் குடியாமலும் நீண்ட காலத்திற்கு பூரணத்தன்மையில் விரதமிருப்பது தேகத்திற்கு தீமை பயக்கக்கூடியதாய் இருக்கின்றது.

அம் மேதாவி அப் புஸ்தகத்தில் விரதம் நான்கு வகைப்படும் என்று எழுதி இருக்கின்றூர்.

1. மெய்நோன்பு:—குறிப்பிட்ட சிறு கால அளவிற்கு எந்தவிதமான உணவும் உட்கொள்ளாமல் விலக்கிவிடுவது. இதுதான் நோன்பினை தக்கவிதமாக சூட்சிக்கக் கூடிய மேன்மையான வழியாகும்.

2. நிர்பந்தமான விரதம்:-வேணுமென்றே அறியாமலோ அல்லது மறதியாலோ சில நேரங்களின் உணவுகள் விடப்பட்டுபோவது. உதாரணமாக சில வேளைகளில் மனிதன் கொஞ்சமும் பாக்கி இல்லாமல் பூரா உணவையும் உண்கின்றான்; இவ்வளவு உணவு தான் அருந்தினதாக மதிப்புத் தெரியாவண்ணம் அத்துணை உணர்வில்லாமல் தின்னுகின்றான்; தான் தின்ற உணவு இவ்வளவுதான் என்று திட்டப்படுத்தக் கூடிய அறிவும் உணர்ச்சியும் இல்லாதவன் சிலகால் அதை விட்டு நீங்கியிருப்பதானது அவனது உடல் நலத்திற்கு மிக எளிதாக தீமையை விளைவிக்கின்றது.

3. சிறிய உபவாஸம்:—கொஞ்சங்கொஞ்சமாக அதாவது விட்டுவிட்டு பசியாயிருத்தல். இந்த விரதமானது சில சமயத்தில் வேணுமென்று அனுஷ்டிக்கப்படுகிறது. சில சமயங்களில் இவ்வாறு பட்டினி கிடப்பதற்கு அவசியம் நேரிடுகின்றது. இப்படிப்பட்ட விரதத்தினுல் உணவையும் குடிப்பையும் சில குறிப்பிட்ட காலத்திற்கு நிறுத்திக் கொள்ளப்படுவதால் இதுவும் ஒருவகையில் நன்மை பயக்குவனவென்னும் முடிவுக்கு வந்திருக்கின்றனர்.

4. பொய் உபவாசம்:— பஞ்சகாலங்களில் சிற்சில பேர்வழிகளுக்கு வறுமையின் காரணமாக பட்டினிகிடக்க நேரிடுகிறது. அது பொழுது பூராபட்டினிகிடக்கவோ, அன்றி விட்டு விட்டு பட்டினிகிடக்கவோ செய்கின்றனர். இதுமிக்க அபாயகரமான முறையாகும்.

மனப்பூர்வமாக குறிப்பிட்ட சமயத்திற்கு பூரணத்தன்மையோடு நோன்பு நோற்பதினுல் அன்நோன்பு மிக்க நன்மையை பயக்கிறதென்பது டாக்டர் மாற்கோ ஊஸின் அபிப்பிராயமாகும். தம்முடைய கிரந்தத்தில் இவ்வாறு நோன்பினுல் ஏற்படும் பயன்களை பற்பலவிதமாக பாகுபாடுகள் செய்து ஒவ்வொன்றையும் தக்க ஆதாரங்களினுலும் நவீன ஆராய்ச்சிகளினுலும் விவரமாக விளக்கி இருக்கின்றூர். அந்நூலில் நோன்பின் தன்மையானது தற்கால அறிவுவளர்ச்சிக்கும் சைன்ஸிற்கும் ஒத்தவண்ணமாகவே தக்க முறையில் எழுதப்பட்டிருக்கின்றன. அது ஆராய்ச்சியைக் கொண்டும் அனுபவத்தைக் கொண்டும் உறுதிப்படுத்தப்பட்ட பல உண்மை அறிவுகள் நிறைந்ததாய்க் காணப்படுவதால், அது நோன்பு நோற்பவர்களுக்கு அனுகூலமாயும் சாதகமாயும் இருக்கும் என்பது திண்ணம்.

முந்துங்கள் ! கேட்லாக் இனம் வாங்கிப் பாருங்கள் !!

குர்ஆன்ஷரீப்கள், அரபதமிழ், சுத்தத்தமிழ் முதலிய பாஷைகளில் மார்க்கக் கிரந்தங்கள், வழிகேடர்களான காதியானீ அஹ்மதியாக்களுக்கு தக்க மறுப்பான கிரந்தங்கள், அத்தர் தினுசுகள் பலவகையான ஜவுளி வகேராக்கள் எங்களிடம் நயமானதாகவும் விலைசரசமாகவும் கிடைக்கும் விபரம் தெரிய விரும்புவோர் ஒரு அணு ஸ்டாம்பு அனுப்பி கேட்லாக் பெற்றுக்கொள்ளும்படி கோருகிறோம்.

மௌலவீ K. M. சுல்தான் அஹ்மத் சாஹிப்

P. O. Box. 1242. 2/222 அங்கப்ப நாய்க்கன் தெருவு, G. T. மதராஸ்.

இஸ்லாமியப் பெரியார்கள்.

ஸையிதுனா இமாம் ஜஅபர் ஸாதிக் (ரலி.)

ஸையிதுனா அபூ அப்துல்லாஹ் ஹஸரத் இமாம் முஹம்மத் ஜஅபர் ஸாதிக் (ரலி.) அவர்கள் மாபெரும் கீர்த்திவாய்ந்த மகானாய் இருந்தார்கள். இவர்களின் தகப்பனார் பெயர் இமாம் முஹம்மத் பாகிர். அவர்களின் தகப்பனார் இமாம் ஜைனுல் ஆபிதீன் (ரலி.) அவர்களாகும். அவர்களின் தந்தையாரின் பெயர் ஸையிதுஷ்ஷுஹதா இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்களாகும். இமாம் அவர்களின் தாயார் ஹஸ்ரத் ஆபூக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்களின் புத்திரராகிய ஹஸ்ரத் முஹம்மத் அவர்களின் புத்திரியாகும். ஆகவே இமாம் சாஹிபவர்கள் ரசூலுல்லாஹ்வின் மருகரான ஸையிதுனா ஹஸ்ரத் அலீ இபுனு அபீதாலிப் (ரலி.) அவர்களின் பேரராக இருந்ததோடு, ரசூலுல்லாஹ்வின் முதன்மைத்தோழராகிய ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்களின் பேரராகவுமிருந்தார்கள். அவர்களின் பாட்டனாராகிய (தாயாரின் தந்தை) ஹஸ்ரத் முஹம்மத் இபுனு அபூபக்ர் என்பவர்கள் "ஸிப்பீன்" யுத்தத்தில் ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களுடன் சேர்ந்துகொண்டு தன் சகோதரியான ஆயிஷா (ரலி.) அவர்களுடன் யுத்தம் புரிந்து ஷஹீதாய்விட்டார்கள்.

இமாம் அவர்களின் பிறப்பு

ஹஸ்ரத் இமாம் ஜஅபர் ஸாதிக் (ரலி.) அவர்கள் ஹிஜ்ரி 83-ல் தங்கள் முப்பாட்டனாராகிய முஹம்மத் ரசூலுல்லாஹ் (ஸல்.) அவர்களின் பிரியமான பட்டிணமாகிய மதீனாவிற் பிறந்து வளர்ந்தார்கள். அவர்கள் பிறந்த சமயத்தில் அக்காலத்திலிருந்த கூரிய யோசனையுடைய பெரியார்கள் யாவரும், ஹஸ்ரத் இமாம் முஹம்மத் பாகிர் அவர்களின் புத்திரர் பிற்காலத்தில் அழியாக் கீர்த்திக்கு ஆளாவார்கள் என்று கூறி இருந்தனர். இமாம் சாஹிபவர்கள் தங்களுக்கு வேண்டிய ஆரம்பக்கல்வியினை மதீனமுனவ்வரிலேயே கற்றுணர்ந்தார்கள். அவர்களின் இளம்பிராயம் கழிவதற்கு முன்னமேயே அநேக சஹாபாக்கள் உலகத்தை விட்டுச் சென்று விட்டனர் எனினும் அவர்களுக்குப் போதுமான விஷய ஞானம் அளிக்கக் கூடிய சில சஹாபாக்கள் ஜீவித்திருந்தனர்.

கல்விப் போதனை

இமாம் சாஹிபவர்களின் தந்தையாகிய ஹஸ்ரத் முஹம்மத் பாகிர் அவர்கள் மிக்க கல்விமானாகவும் அறிவாளியாகவும் இருந்ததால் தங்களுடைய புத்திரர் 'இமாமத்' என்னும் பெரும் புனிதகாரியத்தை வகிக்க வேண்டி வரும் என்றறிந்து அவர்களின் இளம் பிராயத்திலேயே போதுமான கல்விப் பயிர்ச்சியும் போதனைகளும் செய்துள்ளார்கள். இதன்றியும் ரஸுலுல்லாஹ்வின் ஸஹாபாக்களில் பேர்வாய்ந்த ஹஸ்ரத் மாலிக் இப்னு அனஸ் (ரலி.) என்பவர்களை அடுத்தும் அநேக பிரயோசன மடைந்துள்ளார்கள். அவர்கள் காலத்தில் கலாஞானத்தில் தேர்ச்சி பெற்றபண்டிதராய் விளங்கிய ஹஸ்ரத் எஹ்யா இப்னு ஸமீத் என்பவர்களும் ஹஸ்ரத் மைமூனா (ரலி.) (ரசூலுல்லாஹ்வின் பிராட்டியார்) அவர்களின் சொந்த அடிமையாகவும், மார்க்கச் சட்டங்களில் நிபுணத்துவம் பெற்று விளங்கி வருமாகிய ஹஸ்ரத் ஸுலைமான் (ரலி.) அவர்களும் இருந்தார்கள்.

இமாம் சாஹிபும், இமாம் அபூஹனீபா (ரஹ்.) வும்

கூபாவாசியான இமாம் அபூஹனீபா (ரஹ்.) அவர்கள் கல்விகற்பான் வேண்டி திரு மதினமா நகர்வந்தபோது இமாம் சாஹிப் அவர்களிடத்தில் மார்க்க விஷயமான சம்பாஷணை புரிந்து பயன் பெற்றார்கள். அதுபொழுது இமாம் சாஹிபவர்கள் தங்களுடைய வாலிபதசையில் இருந்தபோதிலும் கல்வி கேள்விகளில் மிக மிக தேர்ந்து பூர்ணமானவர்களாயும் மஹானாயும் இருந்தார்கள். ஆகவே இமாம் அபூ ஹனீபா

(ரஹ்.) அவர்கள் மதினமா நகருக்கு விஜயஞ் செய்து இமாம் சாஹிப் அவர்களைத் தெரிசித் தது, குருசிஷ்ய முறையிலேயே அன்றி சமத் துவ முறையிலன்று.

வஹாபியர்களின் தலைமை இமாமாகிய இப்னு தைமிய்யா என்பவர் சில அஹ்லெ பைத்துக்களுக்கு கெளரவம் கொடுப்பதை தடுக்கும் முறையில் இமாம் அபூஹனீபா அவர்கள் இமாம் ஜஅபர் ஸாதிக் (ரலி) அவர் களின் காலத்திலிருந்தவர்களாயினும் அவர் களுக்கு சிஷ்யராய் இருக்கவில்லை என் றெழுதி இருக்கின்றார். இவருடைய ஆட்சே பனைக்கு மெளலானா ஷிப்லீ அவர்கள் 'சீரத் துன்னுஃமான்' என்னும் நூலில் கீழ்வரு மாறு பதில் எழுதி இருக்கின்றார்கள்.

"இது இபுனு தைமிய்யாவின் தவறு தலையும் அகங்காரத்தையுமே காண்பிக்கின் றது" ஹஸரத் இமாம் அபூ ஹனீபா (ரஹ்.) அவர்கள் மார்க்கச்சட்ட நிபுணராயும் சன் மார்க்க போதகராயு மிருந்தபோதிலும் தத்துவ உயர்த்தியிலும் ஆத்தும பரிபக்கு வத்திலும் இவர்களுக்கும், ஹஸ்ரத் இமாம் ஜஅபர் ஸாதிக் (ரலி.) அவர்களுக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது? ஹதீது ஷரீபுகளும் மார்க்க சட்ட திட்டங்களும் இன்னு மனேக மதசம்பந்தமான கல்வி அறிவுகளும் அஹ்லெ பைத்திலிருந்தே வெளியாகின. அக்கலா ஞானங்கள் எங்கிருந்து வெளியாயி னவோ அவ்வீட்டுடையவர்கள் மற்றவர்களை விட மேலானவர்களாகும்.

ரசூலுல்லாவின் கோத்திரமும் தத்துவ ஞானமும்.

ஆத்தும ஞானத்தின் உற்பத்திக்கு தீர்க் கத்தரிசனம் பெற்றுள்ள முஹம்மத் ரசூல் (ஸல்.) அவர்களின் கோத்திரமே காரணமாய் இருக்கிறது. தத்துவ ஞானத்தின் ஆரம்ப சரிதையானது சையிதுல் அவ்லியா அமீருல் மூமினீன் ஹஸ்ரத் அலீ இப்னு அபீதாலிப் (ரலி.) அவர்களினின்றுமே உருவாகியது. மெளலாயெ காயினாத் ஹஸ்ரத் அமீர் அலைஹிஸ்ஸலாம் அவர்களால் அனுக்கிரகம் பெற்றுள்ள ஹஸ்ரத் ஹஸன் பஸ்ரி ரஹ்ம துல்லாஹ் அவர்களினின்றுமே 'சிஷ்திய்யா' தரீக்கும் அதன் பல்வேறு பிரிவுகளும் வெளிவரத் தொடங்கின. ஹஸ்ரத் அபுல் ஹஸன் கற்கானி என்பர்களால் அபூ அலீ பார்மதி அவர்களுக்கு ஆத்மஞானவாயிலாக போதிக்கப்பட்ட நக்ஷபந்திய்யாவின் ஒரு பிரிவாகிய உவைசி என்ற தரீக்கிற்கு ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்களே ஆதி கர்த்தாவாக இருக்கின்றார்கள். ஹஸ்ரத் இமாம் ஜஅபர் அவர்கள் இதில் சம்பந்தப் பட்டவர்களாக இருக்கின்றமையால் தத்துவ ஞானத்தின் பரம்பரை சரிதையானது ரசூ லுல்லாஹ் (ஸல்.) அவர்களின் புதல்வியாரின் புருஷராகிய ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களி னின்றுமே ஆரம்பமாயிற்றென்று சந்தேகமில் லாமற் தெரிந்துகொள்ளலாம்.

ஆத்தும பரிபக்குவம்.

ஹஸ்ரத் இமாம் ஜஅபர் ஸாதிக் (ரலி.) அவர்கள் தங்கள் கோத்திரத்தின்மூலம் தொன்றுதொட்டுவந்த தத்துவ ஞானத்தை வெற்றியுடன் பாதுகாத்து வந்ததோடு அதனை மிக்க விசாலமாகச்செய்து அபிவிர்த் திக்கும் கொண்டு வந்தார்கள். அவர்களின் தந்தையாராகிய ஹஸ்ரத் முஹம்மத் பாகிர் அவர்களின் காலம்வரை தத்துவஞானம் பரம்பரையாக பாதுகாத்து வரப்பட்டதே யன்றி அபிவிருத்திக்குக் கொண்டுவரப்பட வில்லை. ஆனால் இமாம் ஜஅபர் ஸாதிக் (ரலி.) அவர்கள் பரம்பரை தத்துவஞானம் நிறை யப்பெற்று ஆத்தும பரிபக்குவத்தால் மிக்க உயர்வுற்றிருந்தார்கள். அன்றியும் தங்கள் பாட்டனாராகிய ஹஸ்ரத் காஸிம் இப்னு முகம்மத் இப்னு அபூபக்ர் (ரலி.) அவர்களின் குருஸ்தானத்தையும் வகித்திருந்தார்கள். அவர்களின் ஆத்துமாவானது ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி.) அவர்களால் அனுக்கிரகம்பெற்ற ஹஸ்ரத் ஸல்மான் பார்ஸி (ரலி.) அவர்களின் போதனையால் பரிபக்குவமுற்றிருந்தது.

பூரணத்தின் தீர்ச்சி.

மதாரிய்யா சுஹ்ரவர்த்திய்யா நக்ஷபந் திய்யா ஆகிய ஸில்ஸிலாக்களின் ஆதிகர்த் தாவாகிய சுல்தானுல் ஆரிபீன் ஹஸ்ரத் பாய ஜீதுல் புஸ்தாமீ அவர்களுக்கும், இமாம் சாஹிப் அவர்களுக்கும் நெருங்கிய சம்பந்த மிருந்ததிலிருந்து இமாம் சாஹிப் அவர் களின் ஆத்ம பரிபக்குவமானது எவ்வளவு தூரம் உயர்வுற்றிருக்குமென்று நாம் யூகித் துக்கொள்ளலாம். அஹ்லெ பைத்துக்கள்

மீது பொறுமைகொண்டிருந்த இப்னு தைமிய்யா என்பவர் "ஹஸ்ரத் ஜஅபர் ஸாதிக் அவர்களை முகஸ்துதி செய்பவர்களில் ஹஸ்ரத் பாயஜீதுல் புஸ்தாமீ அவர்களும் ஒருவர்" என்றெழுதி இருக்கின்றார். இஃது உண்மை அன்று. ஏனெனில் ஹஸ்ரத் பாயஜீதுல்புஸ்தாமீ அவர்கள் "நானூறு பீர் மார்களுக்கு யான் தொண்டுசெய்தேன்; ஆனால் ஜஅபர்ஸாதிக் அவர்களிடம் வந்து யான்சேராமற் போயிருப்பேனாகில் யான் ஒரு முஸ்லிம்ஆகி இருக்கமாட்டேன்" என்று தங்கள் கைப்படவே எழுதியுள்ளார்கள்.

ஸில்ஸிலயே மதாரிய்யாவை முதலில் உண்டுபண்ணியவர் இமாம் ஸாஹிபிடத்தில் முரீது பெற்றிலங்கிய ஹஸ்ரத் புஸ்தாமீ அவர்களேயாகும். அவர்களின் குருஸ்தானத்தை வகித்த ஹஸ்ரத் அபுல் ஹஸன் கர்கானீ அவர்களின் மூலமாகவே நக்ஷபந்திய்யா, சுஹ்ரவர்த்திய்யா, மௌலவிய்யா (ஹஸ்ரத் மௌலானாரூம் அவர்களின் தரீக்) முதலிய மூன்று ஸில்ஸிலாக்களும் ஆரம்பமாயிற்று. காதிரிய்யாவின் பரம்பரையும் இமாம் வரைபோய்ச்சேர்கின்றது. சையிதுத்தாயிபா ஹஸ்ரத் ஜுனைத்துல்பாக்தாதீ (ரலி) அவர்களின் பாட்டனாராகிய பீர் ஹஸ்ரத் மஃரூப கர்கீ அவர்கள் இமாம் ஸாஹிப் அவர்களின் பேரனாராகிய ஹஸ்ரத் இமாம் அலீ அவர்களால் ஞானோபதேசம் பெற்றிருந்ததினால் அவர்களால் உற்பத்திசெய்யப்பட்ட சிஷ்திய்யா தரீக்கின் வரலாறும் நம் ரசூலுல்லாவின் கோத்திரத்தி லிருந்தே ஆரம்பமாகிறதைத் தெரிந்துகொள்ளலாம்.

மரணம்.

இமாம் ஸாஹிபவர்கள் தங்கள் ஜீவியம் முழுதும் எளிய வாழ்க்கையிலும் தத்துவ ஞான விருத்தியிலுமே ஈடுபட்டிருந்தார்கள். அவர்கள் அணுவளவாவது தேசிய விஷயங்களிற் கலந்துகொள்ளவில்லை. உமவிய்யாக்ளின் அரசாங்கம் நாளுக்குநாள் பலஹீனப்பட்டு இமாம்ஸாஹிபவர்களின் காலத்திலேயே அழிந்துபோயிற்று. பிறகு அப்பாசியாக்கள் அரசாட்சி செய்துவந்தனர். இந்த அப்பாசியாக்களில் மன்சூர் என்பவர் ராஜிய பரிபாலனஞ் செய்யும்போது ஹிஜ்ரி 148 ஷவ்வால் 24-ந்தேதி ஹஸ்ரத் இமாம் ஸாஹிபவர்கள்காலகதியடைந்தார்கள். அவர்களின் தந்தையாருடையவும் பாட்டனாருடையவும் சமாதிகளின் பக்கத்தில் நல்லடக்கம்செய்யப்பட்டார்கள். திருமதீனமா நகரிலுள்ள ஜன்னத்துல் பகீஃ என்னுமிடத்தில் ஹஸ்ரத் இமாம் ஜஅபர் ஸாதிக் (ரலி), இமாம் முஹம்மத் பாகிர் (ரலி), இமாம் ஜைனுல் ஆபிதீன் (ரலி), இமாம் ஹுசைன் (ரலி), ஆகியோரின் சமாதிகள் எல்லாம் ஒரே கோரிக்குள்ளாக காணப்படுகின்றன.

சமூக உண்மை சீர்திருத்தம்.

முஸ்லிம்களின் தற்கால நிலைமையினைக்குறித்து நாம் நன்கு ஆராய்ந்து பார்ப்போமாயின், அவர்கள் ஒருமனப்பட்ட ஒரே சமூகமாய் இராமல் பல்வேறுபட்ட பல கட்சிகளாய்ப் பிரிந்திருக்கின்றனர் என் றறிந்துக்கொள்ளலாம். முஸ்லிம்களின் யூனிவர்ஸிடி முதல் ஆரம்பப் பாடசாலைகள் வரையும், அஸம்பிளி முதற்கொண்டு கௌன்ஸில் வரையும், டிஸ்டிரிக்ட் போர்டுமுதல் முனிஸிபால்ட்டி வரையும் உள்ள ஒவ்வொரு ஸ்தாபனங்களைப் பார்த்தபோதிலும் ஒன்றுக்கொன்று முரண்பாடான அபிப்பிராயங்களையும் கொள்கைகளையும் எதிர்ப்பிரசாரங்களையும் உடையதாய்க் காணப்படுகின்றன. இங்ஙனம் ஒவ்வோரிடங்களிலும் நம் முஸ்லிம் சமுகம் வெவ்வேறு நோக்கத்தோடு பல்வேறு ஸ்தாபனங்களாகப் பிரிந்து போனதின் காரணந்தானென்னே?

முஸ்லிம் சமூகத்திலுள்ள வெவ்வேறு கட்சிகளும் தத்தம் கட்சியின் சீர்திருத்தத்தின் பொருட்டு ஒற்றுமையாக் வேலைசெய்கின்றனவேயொழிய பொதுவாக முஸ்லிம் சமுகத்

தின் பொருட்டு உழைப்பதற்கு முன்வர வில்லை. அரசியல் சம்பந்தமாகவோ, தேசீய சம்பந்தமாகவோ, மதசம்பந்தமாகவோ அல்லது பொருளாதார துறைசம்பந்தமாகவோ உழைக்க முற்பட்டிருக்கும் பலதிறப்பட்ட கட்சிகளுக்குள் ஒரேவித நம்பிக்கையும், எண்ணமும், நோக்கமும் இல்லாமற் போனல் அவைகள் எங்ஙனம் ஐக்யமாக வேலைசெய்ய முடியும்? எவ்வாறு நாம் எதிர்பார்க்கும் கால அளவிற்குள் சீர்திருந்திமுன்னேற்றமடையக் கூடும்? முதன்முதல் கட்சிகளுக்குள் ஏகோபித்த நம்பிக்கையையும் நோக்கத்தையும் உண்டுபண்ணுவதினாலேயே செய்கையில் ஐக்கியமாக வேலைசெய்து நாம் கோரும் காரிய சித்தியடைவதற்கு சக்தியுடையோராவோம்.

எந்த சமூகச் சீர்திருத்தத்திற்கும் ஒரே ஒரு வழிதான் உண்டு. அதாவது:—அச்சமூகத்தில் காணப்படும் பல்வேறு கட்சிகளும் ஒற்றுமையான நோக்கத்தோடும் கொள்கையோடும் ஒன்றுசேர்ந்து வேலைசெய்யவேண்டும் என்பதாகும். அவ்வாறு ஒன்றுசேரும் விஷயத்தில் ஒரு கட்சிநிலைத்திருப்பதும்,அழிந்து போவதும் எல்லாம் அச்சமூகத்தினைப் பொறுக்கும்படியாக அத்துணை உறுதியாக ஐக்யமானல் மட்டுமே க்ஷீண தசையிலிருக்கின்ற சிறு சிறு கட்சிகளும் ஏகமான நோக்கமுடைய ஒரே சமூகமாகி அபரிமிதமான ஆற்றலையும் சக்தியையும் பெற்றுவிடும். அப்படிப்பட்ட சமூகமானது தன் நோக்கத்தை நிறைவேற்றுதற்கு எடுத்துக்கொள்ளும் முயற்சியில் எவ்விதமாகவுள்ள பெரிய கஷ்டங்களையும் வெகு அற்பமாக மதித்து குப்பை கூளங்களை அடித்துக்கொண்டுபோகும் வெள்ளப் பெருக்குமாதிரி மிக்க தைரியத்துடன் தான் விரும்பிய காரியத்தில் வெற்றியடைய முற்படுமேயல்லாது ஒருக்காலும் பின்வாங்காது என்பது திண்ணம். எல்லாக் கட்சிகளும் ஒரு மனப்பட்டு ஒற்றுமையாக வேலை செய்யும் பொருட்டு தற்கால நிலைமைக்குப் பொருத்தமாகவும் பல்வேறுபட்ட கட்சிகளுக்கு பொதுவாகவுமுள்ள சில ஆவசியமான கோட்பாடுகளையும் திட்டங்களையும் தயாரித்து அவற்றை அகில முஸ்லிம் சமூகத்திட்டங்களாக அமைத்துவிடின், நம் சமூகத்தில் அதிதீவிர உணர்ச்சி உண்டாகும். அவ்வுணர்ச்சியாகிய நெருப்பிற்கு முன்னால், சுயநலப்பிரியம், பணக்கொழுப்பு, பதவிவேட்டை, கெர்வத்திமிர் முதலிய யாவும் தலைகாட்டாது வெந்து பஸ்மமாகப் போய்விடும் என்பதில்என்ன சந்தேகம் கொள்ள முடியும்?

இது போழ்து "சீர்திருத்தம்" "சீர்திருத்தம்" தன்ஜீம், என்று நாவினல் சொல்லிக் கொள்ளப்படுகிறதேயொழிய நடைமுறையில் எதையும் சாதித்து விடுவதைக் காணேம். இற்றைக்கு 14 வருடங்களுக்குமுன் 1917-ம் ஆண்டில் முதன்முதல் "தன்ஜீம்" என்ற ஸ்தாபனங்கள் இந்தியாவில் வெளிவரத் தொடங்கின; இந்த தன்ஜீம் இயக்கத்திற்கு அநேக கட்சிகளின் ஆதரவும் கிடைத்தது; ஆனல் அதன் அடிப்படையான கொள்கைகளை முஸ்லிம் சமூகத்திற்கு பொதுவாக இருக்கக்கூடிய விதமாக அமைத்து வேலை செய்வதற்கு இதுவரை எவரும் முன்வராமல் போனமைக்காக வருந்தாமலிருக்கமுடியவில்லை. வட்டமேஜை மகாநாட்டிற்கு போவதும் அல்லது போகாமலிருப்பதும் ஜம்யிய்யதுல் உலமா சங்கத்தில் அங்கத்தினராய்ச் சேர்வதும், முஸ்லிம் பொதுஜனங்களைக் கொண்டு மகாநாடுகள் கூட்டுவதும் அந்நிய நாட்டு ஜவுளிகளைப் பகிஷ்கரித்து இந்தியர்களால் நூற்கப்படும் கதர்துணியை வாங்கும்படி செய்வதும் இன்னும் இவைபோன்ற பல்வகைகளும் தன்ஜீம் என்ருகி விடமாட்டா. இவைகளெல்லாம் ஒவ்வோர் ஊர்களிலுமுள்ள தனிப்பட்ட தன்ஜீம் ஸ்தாபனத்தின் வெவ்வேறு அம்சங்களும், நடவடிக்கைகளுமாகுமேயல்லாது தன்ஜீம் இயக்கத்தின் உண்மையும் அடிப்படையுமான கோட்பாடுகளாகா.

எனவே உண்மையான 'தன்ஜீம்' எனப்படுவது ஒரு சமுகத்திலுள்ள எல்லா வகுப்புகளுக்கும் பொருத்தமான எண்ணத்தினையும் திட்டத்தையுங் கொண்டிருத்தல் வேண்டும். வேறுபட்ட கட்சிகள் அனைத்தும் தங்களுக்குள் எவ்வளவு பிணக்குகளும் அபிப்பிராயப் பேதங்களும் இருந்தபோதிலும் ஒரேதிட்டத்தின்கீழ் ஒத்துழைத்தால் அதிதீவிரமாக முன்னேறலாம். இவ்வித ஏற்பாடு செய்யாமல் ஒவ்வோர் ஊர்களிலும் தன்ஜீம் கழகங்கள், நிறுவதினல் மட்டும் முஸ்லிம் சமுகம் சீர்திருந்திவிடாது என்பது திண்ணம். இப்படிப்பட்ட தன்ஜீமினல் போதிய பிரயோசனம் உண்டாகமாட்டாது. அது செய்யும்

முயற்சிகளும் ஏற்பாடுகளும் வீணாகவே போகும்.

ஒரு அரசாங்கத்தில் பல்வேறு உத்தியோகங்களான போலீஸ் இலாக்கா, நீதிபரிபாலன இலாக்கா, தபால் இலாக்கா, இன்ஜினீயர் இலாக்கா, கல்வி இலாக்கா இன்னும் பல இலாக்காக்கள் இருக்கின்றன; அவை ஒவ்வொன்றின் நோக்கமும் வேலையும் பிரத்தியேகமாய் இருக்கின்றது; அவை ஒவ்வொன்றும் அதற்குரிய அதிகாரியால் நிர்வகிக்கப்படுகிறது எனினும் அவைகள் யாவும் ஒன்று சேர்ந்துபொதுவாக அரசனை சர்வாதிகாரியாகப்பாவித்து அவ்வரசனின் கீழிருந்து ஒற்றுமையாக சேவைசெய்து வருவதால் அவனது அரசாங்கம் நிலைத்திருக்கிறது. இதற்கு விரோதமாக ஒவ்வோர் இலாக்காவும் அரசாங்கத்தை எதிர்த்து தனது சுயகாரியமே பெரிதென்று தலைகீழாக நடக்கத் துணியுமாயின் அவ்வரசாங்கம் சீக்கிரத்தில் வீழ்ந்து போகும் என்று கூறுவதில் அதிசயமொன்றும் இராது.

நம் முஸ்லிம் சமூகத்தின் நிலைமையும்மேற் கூறியவாறே இருந்து வருகின்றது. பெரிய ஸ்தாபனங்கள்முதல் திண்ணைப்பள்ளிக்கூடங்கள் வரையும் நாம் நுழைந்து பார்த்தபோதிலும் அவற்றின் நோக்கம் எந்த அம்சத்திலாவது ஒன்றுக்கொன்று ஒத்திருப்பதாகக் கண்டுக்கொள்ளமாட்டோம். பலதிறப்பட்ட சங்கங்கள் பாடசாலைகள் முதலிய யாவும் வெவ்வேறு நோக்கத்தோடு உழைக்கின்ற வகுப்பினரால் நடைபெற்று வருகின்றன. இப்படிப்பட்ட பல்வேறு கட்சிகளை ஒன்று சேர்த்து பொதுவாக சமூகத்திற்குச் சேவை செய்யவும் அச்சமூகத்திற்கு அவசியமான காரியங்களில் ஒத்துழைக்கவும், உயிரைத் தியாகஞ்செய்யவுமுள்ள போதிய அறிவையும் பயிர்ச்சியையும் அளிப்பதற்கு அக்கட்சிகளுக்குள் ஒற்றுமையான திட்டங்களும் கட்டுப்பாடான ஏற்பாடுகளும் காணப்படவில்லை. முஸ்லிம்களால் கூட்டப்படும் ஆலோசனை சபைகளில் புஜபலம் பொருந்திய பஹில்வான்கள் கிளம்பி அவைகளின் உருத்தெரியாது செய்துவிடுவதும், மகாநாடுகளில் அபிப்பிராயப்பேதங்களும் கட்சிச் சண்டைகளும் ஏற்பட்டு நம் சமூகம் சீர்குலைந்து கீழ் நோக்கிச்சென்று கொண்டிருப்பதையுந்தான் நாம் காண்கின்றோம். இவ்விஷயங்களைப் பற்றி நாம் முக்கியமாக சிந்திக்கவேண்டியது ஆவசியமில்லாதுபோயிற்ரு?

அப்கனிஸ்தானின் முன்னேற்றம்.

இதுபோழ்து அப்கனிஸ்தானத்தில் ஷாஹ் நாதிர்கான் ஆட்சிபுரிந்து வருகின்றார் என்னும் விஷயத்தை நாம் யாவரும் நன்கறிந்திருக்கின்றோம். இற்றைக்கு மூன்று வருஷங்களுக்குமுன் அப்கனிஸ்தானத்தை ஆண்டுவந்த மாஜீ அரசர் அமானுல்லாகான் அவர்களுக்கு விரோதமாக 'பச்சாசிகா' என்ற ஓர் புரட்சிக்காரர் முற்பட்டு அப்கனிஸ்தானத்தின் சிம்மாதனத்தை திடீரெனக் கவர்ந்து விட்டமையினால் அமானுல்லாகான் அரசை இழந்து பிரான்ஸிற்குச்சென்று காலம்கழிக்கவேண்டியதாயிற்று.இராஜிய பரிபாலனம் இன்னதென்று அறவே தெரியாத கள்வர் தலைவராகிய பச்சாசிகாவின் கையில் 9 மாதங்கள்வரை அகப்பட்டு மிகுந்த அவதிப்படநேர்ந்தது. அச்சமயத்தில் அப்கன் தேசவாசியும் அதிககல்வியறிவுபெற்றவரும் பெரிய குடும்பத்தில் பிறந்தவருமாகிய ஷாஹ் நாதிர்கான் அவர்கள் பிரான்ஸ் தேசத்திலிருந்தார். தமது தாய் நாட்டின் நிலைமை மிக்க சீர்கேடடைந்து பொது ஜனங்கள் மிகுந்த துன்பங்களுக் காளாகி அடிக்கடி குழப்பங்களும் கலகங்களும் நடைபெற்றுக்கொண்டிருப்பதை அறிந்து, சுதேசஞ் சென்று மகாசனங்களைப் பாதுகாக்கும்பொருட்டு மிக்க தீரத்துடன் அப்கனிஸ்தானஞ் சென்று பொதுஜன ஆதரவு பெற்று பச்சாஸிகாவைப் பிடித்தடக்கினார்.

அவர் அப்கனிஸ்தான் நுழையும்போது அரசாளவேண்டும் என்ற எண்ணத்துடன்

வரவில்லை. ஆனால் அப்கனிஸ்தான் ஓர் அயோக்கிய புரட்சிக்காரரின் கீழ் சிதறுண்டு போகாவண்ணம் அருமைத்தொண்டு புரிந்த நன்றி யறிதலுக்காக ஆங்குள்ள மகா ஜனங்கள் அவரையே அரசராய் அமரும்படி வேண்டிக்கொண்டதற் கிணங்க, அவர் இராஜிய பாரத்தை வகித்து நடத்தவேண்டியதாயிற்று சமீபத்தில் காஜா ஹஸன் நிஜாமீ அவர்கள் காபூலுக்குச் சென்றிருந்தபோது அவர்களிடத்தில் ஷாஹ் நாதிர்கான் அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்.

"நான் எனது நாட்டை பச்சாஸிகாவின் கையிலிருந்து தப்புவிக்கவே வந்தேன்; இந்த ஒரே எண்ணத்தோடு பிரான்ஸிலிருந்து வந்தேனல்லாது அரசனாக வேண்டுமென்ற நோக்கத்தோடு வரவில்லை என்பது திண்ணம். யான் அரசப்பதவி வகிக்க முடியாதென வெகுதூரம் மறுத்தேனாயினும் நாட்டின் நிலைமை மிக்க கவலைக்கிடமாய் இருப்பதினிமித்தம் இப்பாரத்தை என் தோள்மீது தூக்கிச் சுமக்க வேண்டியதாயிற்று. யான் ஆண்டவன்மீதே நன்னம்பிக்கை வைத்திருக்கின்றேன்; அவனே இத்தேசத்தை உன்னதநிலைக்கு கொண்டுவரும்படி எனக்கு போதிய சக்தியும் ஆற்றலும் கொடுத்தான்.

இராணுவ பரிபாலனம்.

ஷாஹ் நாதிர்கான் அவர்கள் அரசப்பதவி வகித்தவுடன் அரசாங்கத்தை மிக ஸ்திரப்படுத்துவதும், நிர்வாக முறையை ஒழுங்கு படுத்துவதுமான வேலையில்ஈடுபட்டார். இதற்காக பொது ஜனங்களுக்கு தம்மீது நல்லெண்ணம் உண்டாகும் பொருட்டு ராஜியவிஷயத்தில்தாம் அமானுல்லாகான் அவர்களை பின்பற்றிநடக்கப்போவதாக அறிக்கைசெய்தார். அவர்தாம் கூறியதற்கேற்ப ஒரு சிறு கால அளவிற்குள் அமானுல்லாகான் அவர்களின் ஆட்சியின் கீழ் அப்கனிஸ்தான் இருந்த நிலைமையைவிட மிக்க உன்னத நிலைமைக்கு கொண்டுவந்திருக்கின்றார். அமானுல்லாகானின் வீழ்ச்சிக்குக் காரணம், அவர்மார்க்க விஷயத்தில் தவறுதலாக நடந்துகொண்டதுடன் தமது இராணுவத்தைப் பலப்படுத்துவதற்கு யாதொரு முயற்சியும் எடுத்துக் கொள்ளாது தமது தேசம் கல்வி, அறிவு, நாகரீகம் முதலியவைகளில் முன்னேற்றம் அடைந்து விட்டால் இராணுவத்திற்கு தேவை இராது போய்விடும் என்று நினைத்ததேயாகும். அதனால் தம் தேசத்தில் ஏற்பட்ட கிளர்ச்சியினை அடக்கமுடியாது வெகு சீக்கிரத்தில் நாட்டை இழக்கும்படியாயிற்று. இச்சம்பலத்திலிருந்து ஷாஹ் நாதிர்கான் அவர்கள், தம் தேச மக்களுக்கிடையில் அறிவுச்சுடரை பரத்துவதுடனே இராணுவத்தையும் பலப்படுத்த வேண்டியதிருக்கின்றதென ஏற்கெனவே அவர் தெரிந்துக் கொண்டதினால், முதலாவதாக இராணுவத்தை சீர்திருத்தி அமைப்பதற்கு தகுந்த ஏற்பாடுகளைச் செய்யலானார்.

தற்கால அப்கனிய இராணுவம் நவீன முறைகளால் சீர்திருத்தப்பட்டிருக்கிறது. ஆவசியமான ஆகாய விமானங்கள், மெஷீன் பீரங்கிகள், மோட்டார்கள், வெடிமருந்துகள் முதலியன நிறையப் பெற்றிருக்கின்றது. இராணுவம் பட்டாளம் இவைகளை நல்லவிதமாக சீர்திருத்தும் பொறுப்பு பிறநாட்டு நிபுணர்களிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. இராணுவப் படிப்பினைக் கற்பிக்கும் பொருட்டு ஜர்மனி இத்தாலி முதலிய தேசங்களிலிருந்து சில நிபுணர்களை அமானுல்லாகான் அழைத்திருந்தார். இதுகாலை ஜர்மன் நிபுணர்களால் மட்டும் இராணுவக் கல்வி அளிக்கப்படுகிறது. பட்டாளத்தை பயிர்ச்சி செய்யும் பொருட்டு துருக்கிய நிபுணர்கள் நேமிக்கப்பட்டிருக்கின்றனர். வெடிமருந்து சம்பந்தமான கல்வியும் தேர்ச்சியும் அளிப்பதற்கு இத்தாலியிலிருந்து இரண்டு நிபுணர்கள் வரவழைக்கப்பட்டிருக்கின்றனர். ஜர்மனிய இராணுவம் அணியும் தொப்பிகளைப்போன்று அப்கனிய இராணுவத்தாரும் தொப்பிகள் அணிகின்றனர். அவர்களின் உடுப்பு நிறம் பிரான்சு இராணுவத்தாரின் உடுப்பு நிறம் போன்று செய்யப்பட்டிருக்கின்றன.

இராணுவம் பட்டாளம் இவைகட்கு இதுகாலை சம்பளம் உயர்த்தப்பட்டிருக்கிறது. குறித்த தவணைக்குள் சம்பளத்தைப் பெற்றுக்கொள்கின்றனர். போலீஸ் சிப்பாய்கள் ஒருவருக் கொருவர் ஒற்றுமையாய் இருக்கும் பொருட்டு அவர்கள் சிறு சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு சுமார் 400-க்கு குறையாத சிப்பாய்களின் கூட்டத்திற்கு ஒரு கர்னல் தலைமையாக நியமிக்கப்பட்டிருக்கிறார். கீழ்

நாட்டு வழக்கத்தை அனுசரித்து கட்டாய இராணுவப்பயிர்ச்சி அமுலில் கொண்டுவரப் பட்டிருக்கின்றது. பட்டாளத்தில் சேரும் ஒவ்வொருவரும் தத்தம் பெயரை பதிவு செய்துகொள்ள வேண்டும். இதை தகுந்த முறையில் இலகுவாக நடத்துவதற்கு அத் தேசத்திலுள்ள ஒவ்வொரு வகுப்பாரிடத்தி லும் பொறுப் பளிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் ஆட்களை பொறுக்கி எடுத்து அனுப்பவேண்டும். ஒவ் வொரு ஜாதியின் தலைவரும் யுத்தத்திற்கு வேண்டிய ஆட்கள் அனுப்பும் விஷயத்தில் ஏஜெண்டாக நேமிக்கப்பட்டிருக்கின்றனர்.

பட்டாளத்தில் பெயர் பதியவைப்பதற்காக தலைவர்கள் தங்கள் வகுப்பினரை அழைத்து பொதுக் கூட்டம் கூட்டி பெயரைப் பதிவு செய்யுமாறு வேண்டிக்கொள்வர். குறிப் பிட்ட எண்ணிக்கைக்கு ஆள்கள் சேராவிடின் ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் தகுதியான ஆட்களை அவரே தெரிந்தெடுத்து பெயரைப் பதிவு செய்து எண்ணிக்கையை பூர்த்தியாக்கி அனுப்ப அதிகாரம் அளிக்கப்பட் டிருக்கின் றார். ஆயினும் அரசாங்கம் குடிகளுக்கு எந்த விதமான வெறுப்பும் அதிருப்தியும் ஏற்படா வண்ணம் மிக்க ஜாக்ரதையாகக் கவனித்துக் கொள்கின்றது. இங்ஙனம் அப்கனிய இரா ணுவம் சீர்திருத்தத்துடன் பலப்படுத்தப் பட்டிருப்பதால் ஆங்கு எவரும் சதியாலோ சனை புரட்சி முதலிய தேச துரோகமான செய்கையைச் செய்ய கனவிலும் கருதமுடி யாது.

ரயில்வே நிருமாணம்.

அப்கனிஸ்தானில் ரயில்வே நிர்மாண்ம் செய்யும் விஷயத்தில் அமானுல்லாகான் ஒரு ஸ்கீம் தயாரித்திருந்தார். ஆனால் அதை அமுலில் கொண்டுவருவதற்குள்ள முயற்சி எடுத்துக் கொண்டாரில்லை. இதுபொழுது ஷாஹ் நாதிர்கான் அவர்கள் அந்த ஸ்கீமை நிறைவேற்றும் பொருட்டு தகுந்த முயற்சி எடுத்து ஜப்பான் கவர்மெண்டோடு ஒப் பந்தஞ்செய்து ஸ்கீம் விஷயமாயுள்ள காரி யாதிகளை எல்லாம் முடிவுக்குக் கொண்டுவந் திருக்கின்றார். இனி ரயில்வே நிர்மாண வேலையை ஆரம்பிக்கவேண்டியது தான் பாக்கியிருக்கிறது. ஸ்கீம் பிரகாரம் எதிர் பார்க்கப்படும் ரயில்வே லயின், கைபர் ஒடையின் சமீபம் துவக்கப்பட்டு ஆப்க னிஸ்தான் எல்லையிலிருந்து நேரே ஜலா லாபாத் வழியாக காபூலுக்குச் செல்லும். காபூலிலிருந்து மற்றொர் லயின் பிரிந்து 'காந்தஹார்' வழியாக பலூஜிஸ்தானம் வந்து சந்திக்கும். இதிலிருந்து ஒரு பிரிவு ஹருத் என்ற நகரைக் கடந்து செல்லும். முதலாவதாக சிறிய லயின் அமைத்து பரிசீலனை செய்து பார்க்கவேண்டு மென்று அரசாங்கத்திற்கு யோசனை இருந்து வருவதால் ரயில்வே அமைக்கும் விஷயத்தில் ஏற்படும் செலவைப் பற்றி மிக்க நுட்பமாக ரயில்வே நிபுணர்கள் ஆராய்ந்துக் கொண்டி ருக்கின்றனர். அன்னோர், பிரயாணிகள் ஏராளமாக யாத்திரை செய்வார்கள் என்றும், சரக்குகள் மிகுதமாக ஏற்றுமதி இறக்குமதி யாகுமென்றும், ரயில்வே நிர்மாணிப்பதில் அதிகமாக செலவு நேரிடாதென்றும் முடிவு செய் வருவார்களானல் அரசாங்கம் பெரிய லயின்களை ஏற்படுத்த எந்தவித யோசனையும் செய்யாது.

900. மைல் தூரம்.

இதுவரை நிலத்தை அளந்து பிளான் தயா ரித்திருக்கும் கணக்கைப் பார்க்குமிடத்து 900 மைல் நீளமுள்ள ரயில்வே நிர்மாணிக் கப்படும் என்று தெரிகின்றது. இவ்வளவு நீளமான ரயில்வே அப்கனிஸ்தானத்தின் தற்காலநிலைமையின் அவசியத்திற்குப் போது மானதாயிருக்கும் என்பதிற் சந்தேகமில்லை. மேல்படி லயின் அமைப்பதில் அதிக கஷ்டமிராது என்று சகல நிபுணர்களும் கருதுகின்றனர். ஆனால் ஜலாலாபாத்துக்கும் காபூலுக்கு மிடையிலுள்ள பூபாகம் மிக்க கரடுமுரடான ஸ்தலங்களாய் இருக்கின்றன. தற்போது லயின்போடுவதற்கு தெரிந்தெடுக் கப்பட்ட ஸ்தலங்களைத் தவிர மற்ற இடங்க ளெல்லாம் சற்றும் வசதியுள்ளதன்று. மற்ற இடங்கள் வருஷத்தில் 9 மாதம் பனியால் மூடப்பட்டுப்போகின்றன. சில இடங்கள் சமுத்திர மட்டத்திலிருந்து 12 ஆயிரம் அடி உயர்ந்திருக்கின்றது. ஒரு தேசம் கல்வி நாக ரீகம், பொருளாதாரம் முதலியன சகல துறைகளிலும் முன்னேற்றமடைய வேண்டு மாயின் அத்தேசத்திலுள்ள ஒவ்வோர் சிறு கிராமங்களும் பெரிய நகரங்களோடு இணைக் கப்பட் டிருக்கவேண்டியது அவசியமாகும்.

ஆகவே ஷாஹ் நாதிர்கான் அவர்கள் ரயில் போக்குவரத்து ஸ்தாபிக்க மார்க்கமில்லாத இடங்களில் மோட்டார் சர்வீஸ் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்துவருகிறார்.

வீதிகள் நிர்மாணம்.

ஷாஹ் நாதிர்கான் அவர்கள் ரோடுகள்-ரஸ்தாக்கள் அமைப்பதிலும் மிகுந்த கவனஞ் செலுத்திவருகின்றார். பொருளாதாரக் குறைவினால் ரயில்வே போக்குவரத்துகள் ஏற்படும் விஷயத்தில் காலதாமதம் ஏற்பட்ட போதிலும் ரோடுகள் ஏற்படுத்துவதிலும் அவற்றினைப் பழுதுபார்ப்பதிலும் செய்ய வேண்டிய எற்பாடுகள் ஒருபொழுதும் ஒத்தி வைக்கப்படாதென்பது அவருடையகருத்து. மோட்டார் சர்விஸ் தற்போது சீர்திருத்தம் பெற்று மிகவும் உன்னத நிலைமையில் ஏராளமாக நடைபெற்று வருகின்றது. முக்கியமாக அமெரிக்கன் மோட்டார்களே உபயோகத்தில் இருந்துவருகின்றன. மோட்டார் சர்விஸுடன் ரயில்வே போக்குவரத்தும் ஏற்படுத்தப்படுமாயின் அப்கனி ஸ்தானத்தின் வியாபாரம் வெகு முன்னேற்றமடையும். ஆங்கு அதிகமாகக் கிடைக்கக்கூடிய விலை உயர்ந்த பழவர்க்கம், ஜம்காளம், கம்பளிப் போர்வை முதலியவைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யவும் தானியங்கள் ஜவுளித் தினுசுகள் மற்றும் சாமான்கள் இறக்குமதியாகவும் வசதி ஏற்பட்டுவிடும். அவ்வாறு ஏற்படும்விஷயத்தில் அப்கனின் பொருளாதாரம் மிக உயர்ந்த அந்தஸ்திற்கு வந்துவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

வியாபாரம்.

அப்கனிஸ்தானில் தற்போது ரயில் செளகரியங்கள் இல்லாதிருந்தாலும், வியாபாரம் போதுமான அளவில் மிக மேலாக நடந்து வருகின்றது. மத்திய ஆசியா, புகாரா, ஈரான், ஹிந்துஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து ஜனங்கள் வியாபாரத்தினிமித்தம் ஆங்கு வந்து போகின்றனர். சாதாரணமாக ஒட்டகங்களின்மீதும் கோவேறு கழுதைகளின்மீதும் விற்பனைச் சரக்குகளை ஏற்றி பல இடங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. அஃது பல்வகையான ருசியுள்ள கனிவர்க்கங்கள் உற்பத்தியாகக்கூடிய தேசமாய் இருக்கின்றது. மிருதமான தோல்களும் ஆட்டுரோமங்களும் ஆங்கு கிடைக்கின்றன. இச் சாமான்களெல்லாம் அவ்வப்போது ஏற்றுமதி செய்ய வழி இல்லாதிருப்பதால் அவைகள் பலவிதத்திலும் அழிந்துபோகின்றன. ரயில்வசதி ஏற்படுமாகில் வியாபாரத்திற்கு மட்டும் புத்துயிர் உண்டாகுமென்றல்ல; கைத்தொழிலுக்கும் புத்துயிர் உண்டாகி அத்தேசம் மிக உன்னத ஸ்திதிக்கு வந்துவிடும் என்பது திண்ணம். ஆங்குள்ள கைத்தொழில் சரக்குகள் ஹிந்துஸ்தான், ஈரான் முதலிய நாடுகளைத்தவிர, சைனா, ஐரோப்பா முதலிய நாடுகளுக்கும் செல்லும் என்று உறுதியாகச்சொல்லலாம். அதுபொழுது மிக ஏராளமான முதலுடன் வியாபாரம் நடக்கும்; சிறுசிறு கிராமங்களும் வியாபாரத்தாலும் கைத்தொழிலாலும் உயர்வுற்று பெரிய நகரங்களாக ஆய்விடும்.

அப்கனிஸ்தான் முன்னேற்றமடைவதற்கு இன்னும் அநேக புதிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆங்கு வெள்ளி, இரும்பு, பித்தளை நிலக்கரி முதலியவைகளும் சில இடங்களில் இரத்தினங்களும் விளையக்கூடிய சுரங்கங்கள் காணப்படுகின்றன. அமானுல்லாகான் அவற்றினை ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்குமாறு, சில அறிவிற் சிறந்தோரை நியமித்திருந்தார். ஆனால் அவர் நாடு இழந்ததோடு அவ்வேலையும் நின்றுபோயிற்று. ஷாஹ் நாதிர்கான் அவர்கள் தற்போது சுரங்க வேலைகளை ஆரம்பித்திருப்பதினால் சீக்கிரத்தில் பொருளாதார அபிவிர்த்தி ஏற்பட்டு வியாபாரமும் வளர்ந்தேறும் என்று நம்ப இடமேற்படுகிறது.

கல்விச் சுடர்.

அமானுல்லாகான் கல்வி முன்னேற்றத்திற்காக அளவற்ற முயற்சி செய்திருந்தார். அவ்வண்ணமே ஷாஹ் நாதிர்கான் கல்வி விஷயத்தில் விசேஷ சிரத்தையும் ஊக்கமும் காட்டிவருகின்றார். தமது அரசாங்கத்தின் பொருளாதாரத்தை அனுசரித்து கல்விக்கு வேண்டிய சாதனங்களையும் முன்னேற்பாடுகளையும் செய்து மிக்க விர்த்திக்குக் கொண்டு வந்திருக்கின்றார். ஆங்குள்ள முல்லாக்களுக்கும் தம்மீது சந்தேகம் ஏற்படாவண்ணம் நன்றாய் ஆலோசித்து மிகப் பொருத்தமான முறையில் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்திருக்கின்றார்.

தமது தேசத்தில் சாமான்யர்களும் கல்வி கற்றுக்கொள்ளும்பொருட்டு ஆரம்ப கல்விச்

சாலைகள்முதல் உயர்தர கலாசாலைகள் வரையிலுள்ள சகல கல்வி ஸ்தாபனத்தையும் ஏற்பாடு செய்திருக்கின்றார். காந்தஹார், ஹிருத் முதலிய நகரங்களில் இராணுவக் கல்லூரிகள் மட்டுமின்றி 3 கைத்தொழிற் சாலைகளும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. சட்டக் காலேஜ் ஒன்று காபூலில் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆங்கு பலவித உயர்தரக் கல்விகள் போதிக்கப்பட்டு வருகிறது. பள்ளிக்கூடங்கள் அடிக்கடி புதிது புதிதாக ஸ்தாபிக்கப்படுகின்றன. அரசாங்க உத்தியோக சம்பந்தமான கல்வியும் ஆங்கு சர்வசாதாரணமாகப் போதிக்கப்பட்டு பொது ஜனங்களுக்குள் மிகப் பிரபல்யமாக விளங்குகின்றது. தாய் பாஷையன்றி இதர பாஷைகளிலும் கல்வி அறிவு அளிக்கப்படுகிறது.

இங்கு நாம் முக்கியமாக கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றிருக்கின்றது. அதாவது:— மூட நம்பிக்கை நிறைந்துள்ள மலைச் சாதியாரிடத்தும் தக்கவிதமாக கவனஞ் செலுத்தப்பட்டு வந்ததால் அவர்களும் இதுபோது நவீன கல்விமுறையில் ஈடுபட்டு முன்னேற்றமடைந்துக்கொண் டிருக்கின்றனர். அவர்களி லனேகர் ரோடுகள் நிர்மாணிக்கும் வேலைகளிலும் இராணுவ உத்தியோகங்களிலும் மற்ற அரசாங்க உத்தியோகங்களிலும் அமர்ந்திருக்கின்றனர். அவர்கள் தேச பக்தியிலும் இராஜ பக்தியிலும் சிறந்தவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்கள் ஏற்கெனவேயுள்ள புராதன கல்வியுடன் நவீன கல்வியிலும்தேர்ச்சிபெற்று அரசாங்கத்திற்கு மிகுந்த ஊழியஞ் செய்பவர்களாக விளங்குகின்றனர்.

ஆகாயத் தபால்.

ஷாஹ் நாதிர்கான் அவர்கள் ஆட்சிக்கு வந்த பின் ஆகாயத்தபால் ஸ்தாபிக்கும் விஷயமாக ஸ்கீம் தயாராகி ஆலோசனையிலிருந்து வருகிறது. அரசாங்கத்தின் பொருளாதாரம் போதுமானதாய் விருத்தியாகுஞ் சமயத்து அந்த ஸ்கீம் நடைமுறையில் கொண்டு வரப்படும் எனத் தெரிகிறது. என்றாலும் தற்போது காபூலுக்கும் தர்மீருக்கு மத்தியில் ஆகாயத்தபால் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சமாசாரங்கள் பரத்துவதற்கு விசேஷ அக்கரையும் ஊக்கமும் காட்டப்படுகிறது. முக்கியமாக எல்லைப்புறங்களை பாதுகாக்கும் விஷயத்திலும் சில முரட்டு சாதியாரால் உண்டாகும் உள்நாட்டுக் கலகங்களை அடக்குவதற்கும் ஏராளமான பொருள் செலவாகிக்கொண்டிருப்பதால் ரயில்வே, ஆகாயத்தபால் முதலியவைகள் மிகச் சிறுகச் சிறுக ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன.

சமத்துவம்.

ஷாஹ் நாதிர்கான் அவர்கள் பட்டத்திற்கு வந்தபின் இராணுவம், கல்வி, வியாபாரம் முதலிய யாவற்றும் முன்னேற்ற மடைந்துள்ளன. ஜனங்கள் யாவரும் ராஜ விசுவாசமுள்ளவராயினர். லௌகீகம், வைதீகம் ஆகிய இவ்விரண்டிலும் சீர்திருத்தமும் முன்னேற்றமும் பெற்றனர். குடிகளுக்கு நன்மை செய்வதிலேயே அரசர் சதா கண்காணிப்புடனிருந்து வருகின்றார். ஆங்குள்ள ஒவ்வொரு குழந்தைகளுங்கூட அரசரிடத்தில் அன்பும் பக்தியும் வைத்திருக்கிறது. அநேக ஹிந்துக்களும் சீக்கியர்களும் காபூல் நகரத்தில் வாசஞ் செய்கின்றனர். அவர்களின் ஜனத்தொகை சுமார் 800 இருக்கலாம். அவர்களின் மத அனுஷ்டானங்களுக்காக கோவில்களும் குருத்துவாரங்களும் 44-க்குக் குறைவில்லாமல் இருக்கின்றன. யான் (காஜா) அவர்கள் வீடுகளுக்குச் சென்று ஒவ்வொருவரிடத்தும் வேடிக்கையாக சம்பாஷணைகள் செய்தேன். அவர்கள் எல்லோரும், நாதிர்கான் அவர்கள் ஓர் பெரியமகான் என்றும் தங்களின் உயிர் மதம் பொருள் முதலியவைகளுக்குதக்க பாதுகாப்பு அளித்துள்ளார் என்றும் கூறிப் புகழ்ந்து போற்றினார்கள்.

நாதிர்கான் மத நம்பிக்கை.

ஷாஹ் நாதிர்கான் அவர்கள் உண்மை முஸ்லிமாக விளங்குகின்றார். மதத்தில் மிக்க நம்பிக்கை உள்ளவர்; அவரிடத்தில் பெருமை என்பது அறவே கிடையாது. தாம் அரசராய் இருப்பது பற்றி தற்பெருமை கொள்வதில்லை. இஸ்லாத்திற்கும் தமது தேசத்திற்கும் மிக உழைப்பவராய்க் காணப்படுகின்றார். தம் ஜனங்கள் நற்காரியம் செய்து முன்னேறும்படி இறைவனிடத்தில் எப்பொழுதும் இரந்து கேட்டுக் கொண்டிருக்கின்றார். காஜா ஹஸன் நிஜாமீ அவர்கள் காபூல் விஜயஞ் செய்தபோது ஒருநாள் ஜும்ஆத்தொழுகைக்காக மஸ்ஜிதுக்குச் சென்றார்கள். ஆங்கு நாதிர்கான் அவர்களின் சமீபம் நிற்கும்படி

இடமளிக்கப்பட்டது. நிஜாமீ அவர்கள் தங்களுடைய ஜீவியகாலத்தில் ஒரு முறையேனும் சுயேச்சைபெற்ற ஒரு இஸ்லாமிய அரச பெருமானேடு தொழுகையை நிறைவேற்ற சந்தர்ப்பம் வாய்ந்ததற்காக தமது சந்தோஷத்தை தெரிவித்தார்கள். அதன் மீது நாதிர்கான் அவர்களும் அன்று ஓர் பெரிய மகானுடைய வம்சபரம்பரையிலுள்ள பெரியாருடன் தொழுகையை நிறைவேற்றிக்கொள்ள நேர்ந்ததற்காக தாம் மிக்க களிப்புறுவதாக அறிவித்தார். காஜா அவர்கள் இந்தியா திரும்பிவரும்போது "இந்திய முஸ்லிம்கள் ஒருவருக்கொருவர் சண்டைசச்சரவும், கலகமும் செய்து கட்சிப்பிரிவினைகள் உண்டுபண்ணிக் கொள்ளாமல் எல்லோரும் ஒற்றுமையாக ஒன்று சேர்ந்து ஆண்டவனும் ரசூலுல்லாஹ் (ஸல்.) அவர்களும் காண்பித்தநேர்வழியில் நடந்து நன்மையைத் தேடிக்கொள்ள வேண்டிக் கொண்டதாகக் கூறும்படி சொல்லி அனுப்பினர்.

பொன் மொழிகள்.

திரு நபிபெருமானர் (ஸல்.) அவர்கள் கூறியருளிய திருவசனங்கள்:—

என்னுடைய உம்மத்தோர் மீது ஒரு காலம் வரும் அதில் அவர்கள் 5 காரியங்களை மறந்து வேறு 5 காரியங்களை விரும்புவார்கள் அதாவது அவர்கள்:

1. பரத்தை மறந்து இகத்தை உகப்பர்.
2. கப்ரை மறந்து வீட்டை விரும்புவர்.
3. இறுதித் தீர்ப்புநாளின் கேள்வி கணக்கை மறந்து பொருளைப் பிரீதிகொள்வர்.
4. ஹுருல்ஈன்களை மறந்துவிட்டு உற்றார் உறவினர்களை அதிகம் நேசிப்பர்.
5. அல்லாஹ்வை மறந்து தன்மனம் நாடியபடி செய்வர்.

இப்படிப்பட்டவர்கள் என்னைவிரும்பமாட்டார்கள்; யானும் அவர்களை விரும்பமாட்டேன்.

ஐந்து காரியங்களை கேவலமாக எண்ணுகின்றவன் வேறு 5 காரியங்களை இழந்தவனுவான்.

1. உலமாக்களை அற்பமாக மதிப்பவன் மார்க்கமிழந்தவனுவான்.
2. தலைவர்களை கேவலமாக நினைப்பவன் உலகை இழந்தவனுவான்.
3: அயல்பாகக்காரர்களை அற்பமாக எண்ணுவானுயின் சகல உதவி ஒத்தாசைகளையும் கைநழுவ விட்டவனுவான்.
4. பந்துக்களைப் பெரிதாக கொள்ளாதவன் அவர்களின் துணையை இழந்த பேறு கெட்டவனுவான்.
5. மனைவியைக் கேவலமாய் மதிப்பவன் சகல இன்ப சுகங்களையும் இழந்தவனுவான்.

ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களின் அன்பான வசனங்கள்:—

இருள் 5 வகைப்படும். இவ்விருளை மாற்றுதற்கு தனித்தனி 5 விளக்கு உண்டு.

1. உலகப்பற்று என்பது ஓர் அந்தகாரம்; அதற்குரிய விளக்கு பேணுதலாக நடந்து கொள்வதாகும்.
2. பாவம் என்பது ஓர் இருளாகும். அவ்விருளை மாற்றுதற்குள்ள விளக்கானது தௌபாவாகும்.
3. கப்ரும் அவ்வைந்து இருள்களில் ஒன்றும். இந்த இருளை "லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்" என்ற கலிமாவின் பிரகாசத்தால் மாற்றிவிடலாம்.
4. மறுமை என்பது ஒரு இருளாகும். அந்த இருளில் உதவக்கூடியது சாலிஹான அமல்களென்னும் விளக்காகும்.
5. ஸிறாத் என்னும் பாலமும் ஓர் இருளாகும். அவ்விருளைப் போக்குகின்ற விளக்கிற்கே 'ஞானம்' எனப்படும்.

உலோபி ஒருவன் 7 காரியங்களில் ஏதாவது ஒன்றிற்குள் அகப்படாமல் தப்பிக் கொள்ள முடியாது.

1. உலோபி இறந்த பின்னர் அவனுடைய சொத்திற்கு ஆண்டவனுக்குப் பொருத்தமில்லாத பாதையில் அனாவசியமாக செலவு செய்யக் கூடியவர்கள் அனந்தர காரர்களாக வருவர்.

2. ஆண்டவன் உலோபியின் மீது ஒரு கொடுங்கோல் மன்னனை ஏவுவான்; அம்மன்னன் அந்த உலோபியை மிக்க கேவலப்படுத்தி முதலைப் பறித்துக் கொள்வான்.

3. சிற்றின்பவேட்கையில் மூழ்கி பொருளை வீண் விரயஞ் செய்வான்.

4. கட்டிடங்கள் கட்டுவதற்கோ அல்லது சதுப்பு நிலங்களை வெட்டித் திருத்துவதற்கோ யோசனை உண்டாகி பொருள் அனுவசியமாகச் செலவாகும்.

5. உலகத்தில்திடீரென ஏற்படும்நெருப்பு, வெள்ளப் பிரளயம், கொலை, கொள்ளை முதலியவைபோன்ற விபத்துக்களில் அகப்படுவான்.

6. நீங்காத வியாதிக்குள்ளாகி அதைக் குணப்படுத்த பொருளை எல்லாம் பாழாகச் செலவு செய்யவேண்டிவரும்.

7. தனது முதலை எந்த இடத்திலாவது வைத்து, பிறகு அதனை வைத்த இடம் மறந்து போகவும் அப்பொருள் திரும்பக் கிடைக்கப் பெருமல் போவான்.

இக்காரணங்களினுலேயே ரசூலுல்லாஹ் (ஸல்.) அவர்களுக்கு உலோபிகளினின்றும் கார்மானம் தேடுவது வழக்கமாய் இருந்தது. அவர்கள் கூறி இருப்பதாவது "உலோபிகள் ஆண்டவனை விட்டும், மனிதர்களை விட்டும், இன்னும் மோட்சத்தினை விட்டும் தூரமாய் இருப்பவர்களாகும். உலோபியான வணக்கஸ்தரைப் பார்க்கினும் மடத்தனத்தையுடைய கொடையாளி மேலானவனுகுமென்று கூறியிருக்கின்ருர்கள்.

இபுலீசானவன் உங்கள் முன்னல் நின்றுக் கொண்டு மார்க்கத்தினை விடும்படி உங்களை கெஞ்சுகின்ருன். உங்கள் நப்ஸ் வலப்புறத்தில் நின்றுகொண்டு பாவத்தளவில் நோக்கிச் செல்லத் தூண்டுகின்றது. ஆசையானது இடப்புறத்தில் நின்று உங்களைச் சிற்றின்பத்தின் பக்கல் இழுக்கின்றது. உங்கள் பின்னல் நிற்கின்ற துன்யாவானது மறுமையை விட்டு தன்னைத் தெரிந்துக் கொள்ளும்படி பகட்டு செய்கின்றது. மறைவாய் இருக்கின்ற ஆண்டவன் மோட்சத்தின் பக்கல் அழைக்கின்ருன்.

கட்டுச்சாதம் இல்லாமல் கபுரில் நுழைகின்றவன் கப்பலின்றி கடலில் யாத்திரை செய்வதற்கு எண்ணங்கொண்டவன் போலன்ருே! கட்டுச் சாதம் என்பது நன்னடத்தை. கப்பலில்லாமல் கடலில் யாத்திரை செய்பவன் தண்ணீருக்குள் மூழ்கிப் போவதிலிருந்து தப்பிக்கொள்ள முடியாதது போன்று நல்லாசாரம்புரிந்து நன்மையைத் தேடிக்கொள்ளாதவன் ஆண்டவனுடைய வேதனையினின்று அறவே ஈடேறமுடியாது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறிய உயரிய நன்மொழிகள்:—

பத்துக் காரியங்கள் வேறு பத்துகாரியங்களாலன்றி நேர்மையாகமாட்டா.

1. புத்தியானது பகுத்தறிவாலன்றி நேர்மையாகாது.

2. கல்வியின்றி பெருமையும் சிறப்பும் அடையமுடியாது.

3. அஞ்சினுலொழிய விமோசனம் வாய்க்காது.

4. நீதமிருந்தால் அரசு நிலைத்திருக்கும். மரியாதை ஒழுக்கமின்றி வம்ஸம்மட்டில் பிரயோசன மளிக்கமாட்டாது.

6. அச்சம் தீர்ந்திருந்தாலன்றி சந்தோஷமாக வாழமுடியாது.

7. தர்மஞ்செய்தால்மட்டுமே ஐசுவரியம் நிலைத்திருக்கும்.

8. திருப்தி இருக்கும்பட்சத்தில் ஏழ்மை நேர்மையாகும்.

9. தாழ்மையாலன்றி தயவு உண்டாகாது.

10. பலம் இல்லையானுல் போர் வெற்றியுருது.

ஆண்டவன் மனிதர்களிடமிருந்து பத்துக் காரியங்களைவெறுக்கிறவனுய் இருக்கின்ருன்.

1. தனவந்தர்களிடத்து உலோபகுணத்தையும்

2. ஏழைகள் கொள்கின்ற அகப்பெருமையையும்

3. படித்தவர்களிடம் காணப்படும் பேராசையினையும்

4. பெண்களிடமிருந்து நாணமின்மையையும்

5. வயது முதிர்ந்தவர்களின் உலகப்பற்றையும்

6. வாலிபர்களிடத்து காணப்படும் சோம்பலையும்

7. மன்னர்கள் செய்யும் அநீதத்தையும்.

8. பலவானிடமுள்ள கோழைத்தனத்தையும்

9. வணக்கம் புரிபவர்களிடமுள்ள தன் மதிப்பையும்

10. துறவிகளிடம் காணப்படும் முகதாக்ஷணியத்தையும் ஆண்டவன் மிகுதம் வெறுக்கிறவனுய் இருக்கின்ருன்.

1. யான் எவ்வளவோ நண்பர்களை பார்த்திருக்கின்றேன்; ஆனல் நாவினைப் பேணுதலைப் பார்க்கிலும் உற்ற சினேகனை யான் காணவில்லை.

2. யான் எத்துணையோ உடைகளை உலகத்தில் பார்த்ததுண்டு; ஆனல் மனச்சாக்ஷியைவிட உயர்த்தியான உடையை யான் கண்டதில்லை.

3. யான் செல்வங்களெல்லாவற்றினையும் சீர்தூக்கிப் பார்த்ததில், உள்ளதைக்கொண்டு திருப்தியாவதுதான் மிக மேலான செல்வமென அறிந்தேன்.

4. யான் எத்துணையோ நற்கருமங்களைக் குறித்துக் கவனித்தேன்; அவைகளுள் உபதேசம் செய்யும்படியான நற்கருமத்தினைவிட மிக்க நன்மையான கருமம் வேறொன்றையும் காணவில்லை.

5. யான் பலவித உணவுகளையும் அருந்தினேன்; அவற்றில், பொறுமைதான் மிக்க ருசியுள்ள பதார்த்தம் என்று விளங்கியுளேன்.

ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் கூறிய உறுதிவாக்கியங்கள்:—

நான்கு காரியங்கள் சம்பந்தமான பகிரங்கத்தன்மையானது நன்மையாகவும், அந்தரங்கத்தன்மையானது கடமையாகவும் இருக்கின்றது. அவைகளாவன:—

1. நல்லோர்களை சந்திப்பது நன்மையாகும். அவர்களை பின்பற்றி நடத்தல் கடமையாகும்.

2. திருக்குர்ஆன் ஓதுவது மிகப் புனிதமான காரியமாகும். அதன்படி ஒழுகவேண்டியது கடமையாக்கப்பட்டிருக்கிறது.

3. கப்ர்களை ஜியாரத்துச் செய்வது உசிதமாகும்; கப்றுக்குப் போகவேண்டி தயார் செய்வதுகடமையாகும்.

4. வியாதியஸ்தனைப் போய் பார்ப்பது வரிசையான காரியமாகும். அவ்வியாதியிலிருந்து படிப்பினை கற்றுக்கொள்ளவேண்டியது கடமையாகும்.

ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்கள் கூறிய அருமையான புத்திமதிகள்.

1. மிகுந்த தாழ்மையோடு தொழாவிட்டால் அத்தொழுகையால் அபரிமிதமான நன்மை உண்டாகாது.

2. நோன்பு நோற்குங்கால், வீண் பேச்சுக்களை விட்டும் விலகாதிருந்தால் அதனல் புண்ணியமில்லை.

3. வாசிக்கும்போது ஆழ்ந்த யோசனையோடு வாசிக்காவிட்டால் அதனல் பிரயோசனம் விளையாது.

4. பகுத்தறிவில்லாத கல்வியினல் நல்ல பலனை எதிர்பார்க்க முடியாது.

5. அறஞ்செய்வதற் குதவாத சொத்தினல் ஆறுதல் அடைவது அபூர்வம்.

6. சாசுவதமாக நிலைத்திருக்கக் கூடிய செல்வமாய் இராவிட்டால் அச்செல்வத்தினல் யாதொரு உபயோகமுமில்லை.

7. கடவுளிடத்தில் இறந்துகேட்கும் விஷயத்தில் மனதில் உருக்கம் தோன்ருதுபோயின் அதனல் நலவு ஏற்படமாட்டாது.

சான்ருேர் வாக்கியங்கள்.

வாழ்நாளில் அனுசரிக்கவேண்டிய சகல விதிகளும் நான்கு பொது விதிகளுக்குள் அமைந்துள்ளன. அவையாவன:—

1. வார்த்தைப்பாட்டை நிறைவேற்றுதல்.

2. எதிலும் வரம்பினை மீறிச் செல்லாதிருத்தல்.

3. சென்றதைக் குறித்து வருத்தப்படாமல் பொறுமை அடைதல்.

4. உள்ளதைக் கொண்டு போதுமாக்கிக் கொள்ளல்.

ஹஸ்ரத் மாலிக் இப்னு தீனர் (ரலி.) அவர்கள் கூறுகின்றதாவது:—

நீங்கள் மூமீன்களாக வேண்டுமாயின் மூன்று காரியங்களை மூன்று காரியங்களால் வெல்லுவதற்குப் பிரயத்தனப் படுங்கள். அதாவது:

1. தற்பெருமையை தாழ்ச்சியாலும்,
2. பேராசையினை திருப்தியினலும்,
3. பொருமையினை போதனையாலும் வென்று ஜெயசீலராய் விளங்குவீர்களாக.

☞ நமது மாசிகையின் இரண்டாம் வால்யூம் தயாராய்விட்டது
தாமதியாது ஆடர் செய்து பெற்றுக்கொள்ளுங்கள்.

றமலான் நோன்பு.

றமலான்மாதம் நோன்பு நோற்கவேண்டிய மாதமாகும். திருமறையாகிய குர்ஆன் மஜீத் இறக்கிவைக்கப்பட்ட கண்ணிய மிக்க புண்ணிய முடைய மாதமுமாகும். அவ்வேதம் மானிடகோடிகளுக்கு வழிகாட்டியாக இருக்கின்றது. அதில் சன்மார்க்கம் இன்னதென்றும் துன்மார்க்கம் இன்னதென்றும் வேறுபடுத்தி அறிவதற்குள்ள சகல சட்டதிட்டங்களும் காணப்படுகின்றன. இம்மாதத்தில் உடல் நலத்தோடு இருக்கின்ற எவரும் நோன்புநோற்றல் அத்தியாவசியமாகும். நோய்வாய்ப்பட்டு அல்லது யாத்திரை செய்துக்கொண்டிருப்போர் இதர தினங்களில் நோன்பின் எண்ணிக்கையை நிறைவேற்ற வேண்டியது அவசியமாகும். ஆண்டவன் உங்களுக்கு யாவற்றையும் இலேசாக்கி வைக்கவே விரும்புகிறான். கஷ்டம் கொடுக்க விரும்பவில்லை. ஆனதுபற்றி நோன்பின் எண்ணிக்கையை சரியாக நிறைவேற்றுங்கள். இறைவன் உங்களுக்கு நேர்வழி காண்பித்ததினிமித்தம் அவனை அனவரதமும் போற்றிப் புகழுங்கள். அல்லாஹ்தஆலா உங்களுக்கு நேர்வழி காண்பித்ததற்காக அவனுக்கு எப்பொழுதும் நன்றியறிதல் செலுத்துவீர்களாக.

நோன்பைபற்றிய ஆராய்ச்சி.

அதிகாலையிலிருந்து (ஸுப்ஹ் ஸாதிக்) சூரியாஸ்தமனம் வரை யாதொன்றும் உண்ணாமலும் குடியாமலும் சிற்றின்ப நுகர்ச்சி செய்யாமலுமிருப்பதற்கே நோன்பு எனப்படும். மானிடராகப் பிறந்த ஒவ்வொருவரின் ஆத்மா சம்பந்தமாகவும் உடல் சம்பந்தமாகவும் ஏற்படக்கூடிய நோய் துன்பங்களில் பெரும்பாகம் மிதமான உணவால் வயிறு எப்பொழுதும் நிரம்பி இருப்பதின் காரணமாகவே ஏற்படுகின்றன வென்பது வெள்ளிடை. அவ்வாறு ஏற்படும் நோய் துன்பங்களை விலக்கும் பொருட்டும், ஆத்ம பரிபக்குவஞ்செய்து அதனை சம்பூர்ண நிலைமைக்குக் கொண்டுவரும் பொருட்டும் பல இரகசியங்களையும் அறிந்த ஹகீமாகிய இறைவன் தன்னடியார்கள் மீது நோன்பை விதியாக்கியிருக்கின்றான். இந்நோன்பின் காரணமாக மானிடன் ஷைத்தானின் துர்போதனைக்கும் சூழ்ச்சிக்கும் மனதின் இச்சைக்கும் மிருக சுபாவங்களுக்கும் இடங்கொடாமல் தன்னை தூய்மையாக ஆக்கிக்கொள்கின்றான். அதுபொழுது அவனது முன்னேற்றத்திற்கும் ஈடேற்றத்திற்கும் அவசியமாகிய தாழ்மை, வணக்கம், மரியாதை, ஆத்மசுத்தி, மனத்தெளிவு முதலிய யாவும் அவனிடம் பிரதிபலிக்கும். எப்படியெனின் பசி, தாகம் இவற்றின் காரணமாக பரிகாசம், பொய், நிந்தனை செய்தல், புறங்கூறல், சிற்றின்பம் இவைபோன்ற துர்குணங்களைக் குறித்த அனாவசியமான பேச்சுக்களுக்கு இடங்கொடாமல் தன்னைப் பேணிக்கொள்கின்றான். அதன் பயனாக அவனது மனத்தில் ஜோதியொளிவு பிரகாசிக்கும். அவ்வொளிவே மனிதனது ஆத்தும வாழ்க்கைக் குரிய முன்னேற்றமாக இருக்கின்றது.

ஆகவே பரிசுத்தம் பொருந்திய எந்த மாதத்தில் ஆண்டவனது திருமறை இறக்கப்பட்டிருக்கிறதோ, பூலோகத்தின்கண் வானவர்கள் விஜயஞ் செய்கின்றனரோ, ஆண்டவனதுகிருபை பொழிகின்றனவோ, எம்மாதத்தின்முதல்நாள் இரவிலேயே நரகத்தின் வாசல்கள் மூடப்பட்டுப்போகின்றனவோ, சுவர்க்கலோகத்தின் கண்ணுள்ள தென்றல்காற்று வீசத்துடங்குகின்றனவோ, நொந்தமனதுடையோரின் பிரார்த்தனைகளெல்லாம் நிறைவேற்றப்படுகின்றனவோ "ஏ! நன்மையை தேடுகின்றவனே! மேன்மேலும் நல்லதையே செய்துக்கொண்டிருப்பாயாக; ஏ தீயதைத் தேடி அலைபவனே! அதைவிட்டு நல்வழியில் வருக" என்று எம்மாதத்தில் ஆண்டவனால் மறைவாக எச்சரிக்கப் படுகின்றனவோ, ஒழுங்காக வணக்கம் செய்வதினிமித்தம் பாக்கியங்கள் கூட்டப்படுகின்றனவோ, சுன்னத்தான இபாதத்துகளுக்கு பர்லான காரியங்களுக்குரிய பிரதி பிரயோசனமளிக்கப்படுகின்றனவோ "எம்மாதத்தின் துவக்கமானது றஹ்மத்தாகவும், இடையானது பிழைபொ

றுப்பாகவும் இறுதியானது நரகவேதனையி னின்றும் ஈடேற்றமாகவும் இருக்கின்றது'' என்று ஆண்டவனுல் அறிக்கை செய்யப்பட் டிருக்கிறதோ அம்மாதத்தில் நாமெல்லோ ரும் நோன்பு நோற்று மேன்பதவி அடை வோமாக.

“எனக்காக வேண்டியே நோன்பு வையுங் கள்; நானே அதன் கூலியாக இருக்கின் றேன்'' என யாதொரு பிரதிபிரயோசனத் தையும் எதிர்பாராத ஆண்டவனே கூறியுள் ளான். என்ன அதிசயம்! றமலான்மாத நோன்பு தனக்குச் சொந்தமாக உள்ளதென் றும்; அதனை அடியான் நிறைவேற்றினுல் அதற்குப் பகரமாக எஜமானுகிய தானே கூலியாக இருப்பேன் என்றும் இறைவனே கூறி இருக்கும்போது, இம்மாதத்தின் சிறப் பையும் பெருமையையும் மகத்துவத்தையும் என்னென்று கூறுவது. ஆனுல் சில அறிவிலி கள் இப்பரிசுத்தமாதத்தில் தெய்வக்கட்டளே யை மறந்து லஅனத்துப் பெற்ற இப்லீசை யும், அவனது கூட்டத்தாரையும், சந்தோஷிக் கச்செய்யும்பொருட்டும், தம் மடத்தனத்தை யும் மூளைக்கலக்கத்தையும் ஆண்டவனுக்கு மாறுசெய்து வருவதையும் வெளிப்படுத்திக் காண்பிக்கும்பொருட்டும், நோன்பு நோற்கா திருப்பது மட்டுமன்றி அதனைக்குறித்து வேண்டாதவைகளையும் சொல்லி பரிகசிக்கின் றனர். அவர்கள் றமலான் மாதத்தின் பெருமைக்குப் பங்கம் விளைவிப்பான்வேண்டி வெளிப்படையாக கடைவீதிகளிலும் ரஸ்தாக் களிலும் வெட்கமின்றியும் மரியாதையின்றி யும் குடிப்பதிலும் உண்பதிலும் ஈடுபட்டலே கின்றனர். நிலேயற்ற இவ்வுலகத்தில் என் றென்றும் ஜீவித்திருக்கலாம் என்று அவர்கள் நினைக்கின்றனர் போலும். மேலும் இறுதித் தீர்ப்புநாளில் ஏற்படும் நீதிவிசாரணையின் போது ஆண்டவனுக்கு மாறுசெய்து நடந்த தற்காக பதில் சொல்லவேண்டிவரும் என்று அவர்களுக்கு அறிவு வராமல் போனதேனே? அந்தோ! அந்தோ! அந்தோ!!

நோன்பு விதியான வரலாறு.

ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் காலம் முதல் நம் நபிகள் பெருமானர் (ஸல்) அவர் கள் காலம்வரை எத்தனை தீர்க்கதரிசிகள் இவ்வுலகின்கண் தோன்றி மறைந்தனரோ அவர்கள் அனைவோரின் உம்மத்துகளின் மீதும் நோன்பு கடமையாக்கப் பட்டிருந் தது. விஞ்ஞானத்தில் உயர்வுற்றிருக்கின்ற இந்நாகரீக காலத்திலுங்கூட பல்வேறு மதஸ் தரிடத்தும் பல்வேறு முறையினுலாவது நோன்பு நோற்கும் வழக்கம் அனுஷ்டிக்கப் பட்டேவருகிறது. தங்கள் மார்க்கச் சட்டங் களைச் சீர்திருத்த முயன்ற யூதர்களும் கிறிஸ் வர்களுங்கூட நோன்பின் இயல்பினை மாற்றி யமைத்தனரேயன்றி அதனை அறவே விட்டு விடவில்லே. நாஸ்திகர்களுங்கூட நோன்பு அனுஷ்டிக்கும் முறையில் அபிப்பிராய பேத முடையவராய் இருக்கின்றனரேயன்றி பொது வாக நோன்பை சிலாகித்தே கூறி இருக்கின் றனர். நோன்பு வைப்பதினுல் ஏற்படும் பய னைக் கண்டு ஐரோப்பாவும் வியந்துக் கொண் டிருக்கின்றது. ஏனெனில் சில தீராத வியா திகள் நோன்பு வைப்பதினுல் குணமாகின்ற தென்று அநேக ஆராய்ச்சிகளின் மூலம் ஐரோப்பியர்கள் கண்டு பிடித்திருக்கின்றனர்.

நோன்பின் பிரிவுகள்.

ஹஸ்ரத் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர் கள் நோன்பை மூன்ருகப் பாகுபாடு செய்தி ருக்கின்றூர்கள். அவையாவன:—

1. சாதாரண நோன்பு:— வயிற்றினுடைய வும் மர்ம ஸ்தானங்களினுடையவும் இச்சை களை அடக்கிக் கொள்ளுதல் சாமான்யர் களால் அனுஷ்டிக்கப்படும் சாதாரண நோன் பாகும்.

2. நடுத்தர நோன்பு:— கண், மூக்கு, செவி, நாவு, கை, கால் முதலிய அவயவங் களை பாவங்களிலீடுபடாமல் பாதுகாத்துக் கொள்ளுதல் நடுத்தரமான நோன்பாகும்.

3. உத்தம நோன்பு:—மேலே கூறியவைக ளுடன், கெட்ட சிந்தனை, உலக விவகாரம், ஆண்டவன் அல்லாதவற்றின் ஞாபகம் முத லியவைகளை விலக்கி சுத்தமாக இருத்தல் விசேஷித்த ஆற்றலுடைய பெரியார்களின் நோன்பாகும். இவர்களது எண்ணப்பிரகாரம் நோன்பு வைத்துவிட்டு நோன்பு திறந்து தின்ன வேண்டுமென்று ஆவல் கொண்டி ருப்பது குற்ற முடையதாகும். ஆதலின் ஒவ்வொரு முஸ்லிமும் நடுத்தரமான நோன் பையாவது நோற்க பிரயத்தனம் செய்ய வேண்டும்.

நோன்பின் நிய்யத்து.

வைகறை போஜன மருந்தியபின் நிய்யத்து (நிர்ணயங்கொள்வது) செய்வது மிக்க மேலான காரியமாகும். அறபி வார்த்தைகள் ஞாபகம் இல்லையெனின் தமிழ் முதலிய தாய் பாஷையில் "நாளைக்குள்ள றமலான் ஷரீபின் நோன்பை நோற்க நிய்யத்துச் செய்கின்றேன்" என்று கூறுதல் வேண்டும். இவ்வாக்கியத்தை நாவினல் கூறியே நிச்சயம் செய்யவேண்டுமென்பதில்லை; மனதுக்குள்ளேயே செய்துக்கொண்டாலும் போதும். சில அறியாத மக்கள் வைகறையில் போசனம் ஒன்றும் புசியாமலே நோன்பிருக்கின்றனர்; இது குற்றத்திற் கிடமாகும். இது சம்பந்தமாக நாயகவாக்கியம் ஒன்று காணப்படுகின்றது. அதாவது யூதர்களுடையவும் கிறிஸ்தவர்களுடையவும் நோன்பிற்கும் முஸ்லிம்களின் நோன்பிற்கும் இடையிலுள்ள வித்தியாசம் ஸஹ்ரி (அதிகாலை போஜனம்) ஒன்றுதான்; ஏனெனில் நாம் வைகறையில் போஜனம் புசிக்கின்றோம்; அவர்கள் புசிக்கிறதில்லை. "மானிடர்காள்! ஸஹ்ரி புசியுங்கள். அதனல் மிகுதமான பறக்கத்து உண்டாய் இருக்கிறது." என்று ஹதீது ஷரீபில் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே உண்மையாக றசூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்றினதற் கிணங்க அவசியம் வைகறையில் ஏதேனும் புசித்து நிறைபூர்ணமான நோன்பிற்குள்ள கூலியைப் பெற்றுக்கொள்வோமாக.

ஸுப்ஹ் ஸாதிக் யாது.

"இரவில் அடிவானம் இருண்டது முதல் அடிவானம் வெளுக்கிறவரை உண்டு குடித்துவிட்டு மறுமாலை வரை நோன்பாக இருங்கள்" என்று ஆண்டவன் அறிக்கை செய்திருக்கின்றான். ஸுப்ஹ்ஸாதிக்கின் அடையாளமாவது:—கீழ் திசையில் இருவெளுத்த கோடுகளோடு கூடிய இருள் தெரியும். பின்னர் கொஞ்சங் கொஞ்சமாக வெளிச்சம் உண்டாகி இருள் மாறிவிடும்.

சஹ்ர் செய்யும் நேரம்.

நோன்பு நோற்கும் அநேக முஸ்லிம்களின் வீடுகளில் இரவில் 2 அல்லது 3 மணிக்கு போஜனம் செய்துவிட்டு நோன்பின் நிய்யத்து வைத்துக்கொண்டு தூங்குவது வழக்கமாக இருந்து வருகிறது. இப்படிச் செய்வது சுன்னத்திற்கு மாற்றமாகும். இவ்வழக்கத்தினின்று முஸ்லிம்களை சீர்திருத்தவேண்டும். நாயகம் (ஸல்) அவர்களின் விருப்பமும் கடைசிநேரத்தில்தான் சஹ்ர் செய்யவேண்டுமென்றிருந்தது. அவர்களின் உம்மத்துகளாகிய நமக்கு இவ்வாறு எண்ணம் ஏற்பட்டு விட்டதற்குள்ள விஷயந்தான் ஆச்சரியமாகயிருக்கின்றது. மார்க்க கட்டளை பிறப்பித்த எஜமானனது கட்டளைக்கும் நடப்புக்கும் விரோதமாக முந்திய நேரத்திலேயே சஹ்ர் செய்துவிட்டு தூங்கவேண்டுமென்று கருதுவது எவ்வகையில் மேலானதாகும்.

"நாங்கள் றசூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் வைகறையில் போஜனம் செய்தோம். பின்னர் ஸுப்ஹ் தொழுகைக்காக எழும்பி நின்றோம்." என்று ஹஸ்ரத் இப்னு தாபித் அவர்கள் கூறி இருக்கின்றார்கள். "ஸஹ்ரி உண்பதற்கு ஸஹ்ரின் பின்னேரந்தான் சரியானது" என்று நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். ஆகவே ஸஹ்ரி புசியாதவர்களும் ஸஹ்ரின் முன்னேரத்தில் புசிப்பவர்களும் றசூலுல்லாவின் எண்ணம், சொல், செயல் ஆகியவைகளுக்கு மாற்றமாக நடக்கின்றார்கள் என்பதிற் சந்தேகமில்லை. வயிறு நிறைய குடிக்கவேண்டும்; அல்லது புசிக்கவேண்டும் என்பது அவசியமில்லை. ஒன்றிரண்டு பிடி சாதமாயினுஞ்சரி அல்லது நீர்மட்டுமாயினுஞ் சரி உண்ணுவதுகொண்டு ஸஹ்ரின் சுன்னத்து நிறைவேறிவிடுகின்றது.

நோன்பின் விதிகள்.

நோன்பைப்பற்றி ஹதீது கிரந்தங்களில் அநேக விதிகளும் முறைகளும் காணப்படுகின்றன; அவைகளிற் சில முக்கியமானவை அடியில் வருமாறு.

1. சண்டை, சச்சரவு, கோபம், பரிகாசம், கோள்சொல்லல், நிந்தனை செய்தல் முதலிய தீய ஆசாரங்களில் நின்றும் பேணிக்கொள்ளுதல் வேண்டும்.

2. ஒருவன் நோன்பு நோற்றிருந்தால் வீண் பேச்சுக்களைவிட்டு விலகாதிருந்தால் இறைவன் அவனது நோன்பை ஒப்புக்கொள்ளமாட்டான். அதாவது பூர்ணநன்மை யளிக்கமாட்டான். நோன்பின் நினைவிருக்க அதற்கு விரோதமான விஷயங்களில் தலையிட்டால் நோன்பு முறிந்துபோகும். மறதியால் ஏற்படின் மன்னிக்கப்படும்.

பாபர் சக்கிரவர்த்தி.

(சென்றமாதத் தொடர்)

ஹிந்துஸ்தானத்தின் ஆவல் கொண்டு உயிரைத் தியாகஞ்செய்வதற்குசற்றும் அஞ்சாத முன்னூறு வீரர்களுடன் பாபர் "பக்தரிய்யா'' என்ற ஊர் வந்து சேர்ந்தார். அவருடன் வந்தவர்கள் அனைவரும் பாதசாரியாகவே வந்தனர். அவர்களுள் பெரும்பாலோர் பழைய கந்தைத் துணிகளை அணிந்தவர்களாகவும் கால்களில் வெட்டுக்காயங்கள் நிறைந்தவர்களாகவும் கையில் தடி ஏந்தியவர்களாகவும் தோளில் அங்கவஸ்திரம் தொங்கினவர்களாகவும் காணப்பட்டனர். என்றாலும் அப்பகுதியிலுள்ள மொகல் சாதியார் யாவரும் பாபருக்கும் அவரின் ஆள்களுக்கும் வேண்டிய உதவி செய்யலாயினர். ஆகவே பாபர் அங்கு வந்த சின்னாட்கட்குப் பிறகு யுத்தத்திற்கு வேண்டிய போதுமான ஆயுதங்களுடன் இராணுவ முறையில் பயிற்றுவிக்கப்பட்ட சில சைன்யங்களின் தலைவரானார். பக்தரியாவிலிருந்து பிரயாணமாகி காபூல் நகருள் பிரவேசித்தார். ஆங்கு அவரை எதிர்ப்பதற்கு யாரும் துணியவில்லை யாதலால் வெகு சுலபமாக சிம்மாதனத்தைக் கைப்பற்றிக்கொண்டு தாமே அரசரென்று அந்நகர் முழுவதும் பறைசாற்றுவித்தார். அங்கு 22 வருடம் ஆட்சிபுரிந்தபின் கி. பி. 1526-ம் ஆண்டு ஹிந்துஸ்தானை ஜெயிக்க வேண்டுமென்னும் ஆவல்கொண்டு அதில் தன் கவனத்தைச் செலுத்தினார்.

ஒருநாள் ஹிந்துஸ்தான்மீது படைஎடுத்து வந்து "ஆக்ரா'' நகரை ஜெயித்துக்கொண்டார். வெற்றி கிடைத்தவுடன் அவர் செய்த முதலாவது வேலையாவது யுத்தத்தில் கிடைத்த அளவற்ற பொருட்களை, தம்முடைய சேனாதிபதி கட்டுக்கொடுத்ததாகும். தம்முடைய மகன் 'ஹுமாயூன்' என்பவருக்கு உலக முழுவதிலும் கிடைப்பதரிதாயுள்ள மிக விலையுயர்ந்த மாணிக்கமொன்றை அளித்தார். காபூல் நகரிலுள்ள ஆண் பெண் சிறுவர் சாமான்யர் அடிமை யாவருக்கும், வெகுமதி அனுப்பிவைத்தார்.

பாபர் அரசப் பதவி வகித்தபோதிலும் போதுமான இராஜியம் அவரின் ஆட்சியின் கீழ்வரவில்லை. தெஹ்லியின் பக்கமாக வடமேற்கில் ஆக்ராவரையில் ஜம்னாநதியிக் கரையோரமாக உள்ள இடங்கள்மட்டும் அவருடைய ஆளுகையின்கீழ் இருந்தது. தைமூரைப்போன்று பாபரும் ஏராளமான திரவியங்களைச் சேர்த்துக்கொண்டு திருப்பி விடுவார் என்று சுற்றுப்பக்கத்திலுள்ள சிற்றரசர்கள் எண்ணினர். ஆனால் படை எடுத்து வந்த பாபர் அவ்வாறாகிய எண்ணத்துடன் வரவில்லை. அவர் அதற்கு நேர் மாற்றமான நோக்கம் வைத்திருந்தார். வேனற் காலத்தில் வெப்பம் அளவு கடந்திருந்தும், ஊண் உடைகள் மிகக் குறைவாக இருந்தும், தமது படைகள் அதிருப்தியுடன் இருக்கின்றனர் என்பதை அறிந்திருந்தும், பாபர் திரும்பிப்போகாமல், தாம் வென்ற நாடுகளை ஒன்று சேர்த்து ஓர் இராஜியம் ஸ்தாபித்து அதற்குத் தலைவராக இருக்கவேண்டுமென்ற திட்டமான எண்ணங்கொண்டார்.

மீவாஹ், மால்வா, இவற்றின் கிழக்குப் பகுதிகளை ஆண்டுவந்த இராஜபுத்திர அரசராகிய ராணாஸங்கா என்பவர், பாபர் ஹிந்துஸ்தானத்தில் தமது இராஜ்ய பரிபாலனத்தை நிலைநாட்டப் போவதாகக் கேள்வியுற்று, உடனே தம்முடன் பக்கத்திலுள்ள வேறு சிற்றரசர்களையும் சேர்த்துக்கொண்டு பாபரை எதிர்த்துப் போர்புரிவதற்குப் புறப்பட்டார். அவர் நேரே ஆக்ராவிற்கு 50 மைல் தூரத்திலுள்ள 'பிஸானா' என்னும் ஊருக்கு வந்து சேர்ந்து ஆங்குள்ள கோட்டைகளின் பாதுகாவலர்களாயிருந்த அரசாங்கப் படைகளுக்கு மிகத் தொந்தரவைக்கொடுத்தார். அவ்வாறாக அரசாங்கப் படைகளுக்கும் அரசருக்குமிடையிலிருந்துவந்த சம்பந்தங்களைக் கொஞ்சங்கொஞ்சமாக ஒழித்துக்கொண்டே வந்தார். பின்னர் பாபர் ஒரு பாதுகாப்பு படையினை அனுப்பி விரோதியின் நிலைமையினை அறிந்துவர ஏற்பாடு செய்தார். அவரும் அத்தருணம் தமது சைன்யங்களை

எல்லாம் ஒன்றுகத்திரட்டி யுத்தத்திற்கு தயார் செய்யலானார். தம்மிடத்தில் வந்து சேர்ந்த அப்கனிய சர்தார்களின்மீதும் இந்தியர்களின்மீதும் பாபருக்கு நம்பிக்கைக் குறைவு ஏற்பட்டிருந்ததால், அன்னோர்களில் பெரும் பான்மையினரை பல்வேறு இடங்களிலுள்ள தமது அரண்களை பாதுகாக்கும்படி அனுப்பிவைத்தார். பாபரும் நேரே மைடாக் என்ற ஊருக்குச் சென்றார். அங்கிருந்து மறுநாள் (இதுகாலை 'பதஹ்பூர்' என்றழைக்கப்படும்) "ஸைகரி" என்ற ஊரில் வந்து சேர்ந்தார். அந்த இடம் தண்ணீரால் செழிப்புற்றிருந்ததால் தம்முடைய படைகள் தங்குவதற்குச் சௌகரியமான இடமென அறிந்து பாபர் அங்கேயே கூடாரங்கள் அமைத்தார். பியானாவிலிருந்த அவரது படைகளும் அங்குவந்து சேர்ந்தன. முதலில் அனுப்பிவைக்கப்பட்ட பாதுகாவல் படையும் அங்கு வந்து சேர்ந்தது. எதிர்பாராத விதமாக பாபருடைய சேனைகட்கும் ரஜபுத்திரர்களுக்கும் சண்டை நிகழ்ந்தது. அச்சண்டையில் பாபருடைய ஆட்கள் மிக்க அலங்கோலமாக முதுகுகாட்டி ஓடினர். அவர்கள் எல்லோரும் எதிரிகளின் வீரத்தையும் தியாக புத்தியையும் மிக்க வாறாக மெச்சினர். அதுபோது தான் அம் மொகலாயர்களுக்கு தாங்கள் ஓர் வீரத்தனமான ஜாதியாருடன் போர்புரிய வேண்டிய திருக்கின்றதென்ற உணர்வு ஏற்பட்டது. ரஜபுத்திரர்கள் மிக்க தைரியசாலிகளாயும் புத்தி சாதுர்ய முள்ளவர்களாயும், மிக்க ஆண்மையும் வீரமும் பொருந்தியவர்களாயும் விளங்கினர். அவர்கள் தங்களுடைய தேசத்தை தம்மினத்தவருள் வீரஞ் செறிந்த ஒரு இராஜனின்கீழ் பலப்படுத்துவதற்காக தங்கள் உயிரையுந் தியாகஞ் செய்யத் தயாராய் இருந்தார்கள். ஒரு சிறு பாதுகாவல் படை இராஜபுத்திரர்களின் நிலைமையினை அறிந்து வருமாறு அனுப்பப்பட்டது; அதுசென்று அவர்கள் பிஷாவரில் யுத்தகோஷம் செய்துக் கொண்டிருப்பதை அறிந்துவந்து பாபருக்குத் தெரிவித்தது.

பாபர் தமது பாதுகாவல் படையினை நடத்திச் செல்லும் அதிகாரத்தை தம் சர்தார்களிடத்தில் அடிக்கடி ஒப்புவிப்பது வழக்கம். ஒரு சமயம் அவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்ட சர்தாரானவர், மிக்க கெம்பீரமும் ஆண்மையும் புத்தி விவேகமும் நிறைந்துள்ள திடகாத்திரமான வாலிபராய் இருந்தார். அவர் ஸைகரியிலிருந்து 7, 8 மைல்கள் வரை தம்முடைய சேனைகளுடன் முன்னேறிச் சென்றார். உபாயமாகத் திடீரென படையெடுத்துவருவதை ரஜபுத்திரர்கள் கேள்வியுற்று உடனே அவர்களை எதிர்ப்பதற்கு 5000 குதிரைப் படைகளை அனுப்பி வைத்தனர். முஸ்லிம்களின் சைன்யம் 1000 அல்லது 1200-க்கு மேலிருக்கவில்லை. முதல் தாக்குதலிலேயே முஸ்லிம்கள் தோல்வி அடைய நேரிட்டது. பாபரின் சேனைகளில் அநேகர் கொல்லப்பட்டும் சிறை செய்யப்பட்டும் போயினர். இவ்வித அபாயமான நிலைமை ஏற்பட்ட விஷயத்தை அறிந்து பாபரின் குதிரைப் படைகளிலுள்ள வெவ்வேறு பிரிவினர் தங்கள் குதிரைகளை உதவிக்காக விரைவாக ஓட்டிச் சென்றனர். அத்துடன் யுத்த முறைப்படி ஒரு பாதுகாவல் படையும் தயார் செய்யப்பட்டது. உதவிக்காக முதலாவது வந்தவர்கள், அங்கு காரியம் மிக மோசமாக இருப்பதைக் கண்டனர். புதிய வாலிப ஸர்தாரின் கையிலிருந்த கொடி பறிபோயிருந்தது. மிகப் பெயர்போன வீரர்களும் மாய்ந்து போயினர். இத்தோல்விக்குப் பகரமாக அவர்களை வென்று பழிவாங்குவது இலகுவான காரியமாகத் தோன்றவில்லை. அவர்களின் நிலைமை மிகவும் அபாயகரமாய் இருந்தது. அவர்களுக்கு தலைமையா யிருந்த மந்திரியின் மகனொருவரை பகைவரிடத்தில் அகப்படாவண்ணம் மிக்க வீராவேசத்தோடு போர்புரிந்து தப்புவித்தன ராயினும் அவர் குதிரையை இழந்து போனார். இதற்குப்பின் பாபருடைய படைகள் இரண்டு மைல் தூரம் வரை துரத்தி அடிக்கப்பட்டனர். பாபரால் அனுப்பிவைக்கப்பட்ட இரு உதவிப் படையினர் தக்க சமயத்தில் அவர்களுடன் வந்து சேர்ந்திரா விட்டால் அவர்களின் நிலைமை அதோகதியாகப் போயிருக்கும்.

ரஜ புத்திரர்களின் அபார வெற்றியும், அவர்களின் அஞ்சாதிட சித்தமும், தைரியமும், 1 லக்ஷத்து 20 ஆயிரத்திற்கு குறைவில்லாதிருந்த அவர்களின் சைன்யங்களின் எண்ணிக்கையும் சேர்ந்து பாபரின் சேனைக்குள் மிகுந்த பயங்கரத்தை உண்டு பண்ணியது. அதனால் பாபர் சக்கிரவர்த்தி தம்

முடைய நிலைமையினை மேலும் பலப்படுத்துவதற்கு தகுந்த முன்னேற்பாடுகளும் முயற்சியும் எடுத்துக்கொள்ள இடமேற்பட்டதுடன் சைன்யங்கள் அவர் மீது அத்தியந்த விசுவாசங் கொள்வதற்கும் காரணமாயிற்று. பீரங்கிகள் கோட்டை மதில்களில் அமைக்கப்பட்டுள்ள மறைவான விடங்களில் ஏற்றப்பட்டு ஒன்றுக்கொன்று சங்கிலிகளால் இணைக்கப்பட்டன. அகிழ்தோண்டப்பட்டன. இன்னும் படைக்கு வேண்டிய பல வசதிகளும் செய்யப்பட்டன. இவ்வாருக நான்கு வாரங்கள் இடைவிடாது வேலை நடந்துக் கொண்டிருந்தது. அதே சமயத்தில் அகிழிலும் படைகள் காவல் வைக்கப் பட்டன.

நெருக்கடியான இச் சமயத்தில் காபூலிலிருந்து சுமார் 500 பேர்களடங்கிய ஒரு சிறு சேனைக்கூட்டம் பாபரிடம் வந்து சேர்ந்தனர். அன்னோர் மிகச் சிறிய எண்ணிக்கையுடையோராய் காணப்பட்டாலும் வெகு தைரிய சாலிகளாய் இருந்தனர். அவர்களுடன் முஹம்மத் ஷரீப் என்ற பிரக்யாதி பெற்றவான சாஸ்திரியும் வந்திருந்தார். பின் நிகழப்போவதை முன்னடியே தெரிவிக்கின்ற தம்முடைய தொழிலின் மூலம் அரசருக்கு உதவி செய்யவேண்டிய கடமை ஏற்பட்டிருக்க, அவர் அதற்கு மாற்றமாக "செவ்வாய் கிரகம் மேற்றிசையில் இருப்பதால் யாராவது பகைவருடன் சண்டை செய்யின் தோல்வியுறுவர்." என்று கூறி சைன்யங்களுக் கிடையில் மிகுந்த அவ நம்பிக்கையையும் பயத்தையும் உண்டு பண்ணிவிட்டார். ஆதலின் பாபர் அப்போது இதர காரியங்களைக் கவனிக்க மார்க்கமில்லாது தம்முடைய சேனைகளைப் பற்றிய கவலையாகவே இருந்தார். விரோதிகள் எல்லோரும் பாபரால் ஜெயிக்கப்பட்டிருந்த பற்பல நகரங்களையும் கைப்பற்றிக் கொண்டு எதேச்சையாக இருந்தனர்.

ஒரு குறுகிய கால அளவிற்குள் மிகக் கவலையும் சமாதானமின்மையும் ஏற்பட்டது; மனதில் பலவித உணர்ச்சிகள் எழுந்தன; அவ் வுணர்ச்சிகளின் காரணமாக அவரது உள்ளத்தில் மதப்பக்தி உதித்து தமது சென்ற காலத்தைப்பற்றி ஆலோசிக்குந்தோறெல்லாம் மார்க்கச் சட்டத்தினை மீறி மதுபானம் அருந்தும் வழக்கத்தை மேற் கொண்டு கம் வாழ்க்கை நிலையினைக் கெடுத்துக் கொண்டதாக எண்ணுவார். இனிமேல் அவ்வித கெட்ட வழக்கத்தினை விட்டு பரிசுத்த வாழ்வில் ஈடுபடுவதற்கு உறுதி கொள்வார். ஆனல் அவ்வுறுதிப் பாடெல்லாம் சமயத்திற்கு சமயம் மாறிக்கொண்டே இருந்தன. இச் சந்தர்ப்பத்தில் தாம் செய்துக் கொண்ட உறுதியின் பிரகாரம் நடந்துக்கொள்ள மிக்க தைரியமாக முன் வந்தார். வேடிக்கைக்காக அநேக பொன் வெள்ளி ஜாடிகளும் பாத்திரங்களும் செய்து வைக்கப்பட்டிருந்தவை அனைவற்றையும் கொண்டு வரச்செய்து துண்டந் துண்டமாக உடைத்து ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்தார்; தம்முடைய தாடியினை பூராவாக வளர்ப்பதற்கு உறுதி செய்தார்; முன்னூறு அமீர்களும் மற்றும் ஆள்களும் அவரை பின் பற்றி நடந்தனர். காபூலிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த மதுவில் உப்பைக் கரைக்கச் செய்தார். படைக்களத்தில் இருந்த சாராயம் யாவற்றும் தரையில் கொட்டிவிடப்பட்டது. இவ்வண்ணம் மத அனுஷ்டானங்களை மனப்பூர்வமாக கைக்கொண்டதின் ஞாபகார்த்தமாக ஒரு கிணறும் ஒரு தர்மசாலையும் அங்கு கட்டுவதற்கு கட்டளை பிறப்பித்தார்.

இதுவரை பாபரின் பட்டாளத்தவருள் திகிலும் அவநம்பிக்கையும் மிக உச்சஸ்தானத்தை அடைந்திருந்தது. மிகப் பெரிய அதிகாரிகளுங்கூட அவ்வித எண்ணத்தால் தாக்கப்படாமல் போகவில்லை. பாபர் மட்டும் தம்முடைய மனே தைரியத்தாலும் வீரத்தாலும் அப்படிப்பட்ட அவநம்பிக்கைக்கு இடங்கொடாம லிருந்தார். அவருடைய சேனைகள் தைரியமிழந்தவர்களாகக் காணப்பட்டதால் அச்சந்தர்ப்பத்தில் அவர்களின் மனதில் மிக நல்லவிதமாகபுத்திமதிகளைக் கற்பித்து உற்சாகத்தையும் தைரியத்தையும் உண்டுபண்டுவதற்குள்ள அவசியம் எற்பட்டது. ஆகவே பாபர் தமது அமீர்களையும் அதிகாரிகளையும் ஒன்று சேர்த்து ஒரு பொதுக் கூட்டம் கூட்டுவித்து அவர்களைப் பார்த்துக் கூறியதாவது:—

"என் அன்பிற்கிசைந்த அமீர்களே! அருமை சைனியத்தினுடையோர்களே! மானிடராகப் பிறந்தோர் யாவரும் அழிந்து போகின்றவர்களேயாம்; நாம் உலகத்தை நீத்துச் செல்லும்போது இறைவன் ஒருவனே என்றும் அழியாமல் நிலைத்திருப்பான். உலகமாகிய போசனபந்தியில் உட்கார்ந்திருப்ப

வன் புசித்து முடிவதற்குமுன் மரணமாகிய மதுவை அருந்துவதற்கு நேரிடுகின்றது. அழிவுக்குக் காரணமாகிய இவ்வுலகில் பிறந்தவன் இன்று அல்லது ஒரு நாள் நிச்சயமாகத் துன்பத்தால் நிறைந்துள்ள இப்பாழும் உலகத்தை நீத்துச் செல்ல வேண்டியவனாய் இருக்கின்றான். மானமும் பொறுப்பும் இல்லாத வாழ்வைவிட மதிப்புடன் உயிரை விடுதல் மிகமேலானதாகும்; அளவற்ற பெருமையும் மகிமையும் வாய்ந்த இறைவனே நமக்கு இவ்விதமான ஓர் சந்தர்ப்பத்தினை அளித்துள்ளான். எப்படி எனின் நாம் போர்களத்தில் பகைவர்களால் கொல்லப்படுவோமாகில் ஷஹீதீன்களின் மௌத்தினை அடையப் பெற்றவர்களாவோம். பகைவர்களை வென்று உயிர் தப்பிக்கொள்வோமாகின், ஜெயசீலராகி, இறைவன் பாதையில் நடக்காத காபிர்களை பழிவாங்கினவர்களாவோம். இதுபோது நாம் எல்லோரும் ஒவ்வொருவராக இறைவனது பரிசுத்த வேதத்தின் மீது "எங்களுடலில் எள்ளளவேனும் உயிர் இருக்கும் வரை யுத்தஞ் செய்வதற்கோ, வெட்டுப்படுவதற்கோ, அல்லது உயிரைத் தியாகஞ் செய்வதற்கோ சற்றும் பின்வாங்கமாட்டோம்" என்று ஆணையிட்டுக் கூற வேண்டும்."

பாபர் இவ்வண்ணம் கூறிய மொழிகள் முஸ்லிம்களின் உள்ளத்தில் மதப் பக்தியினை ஊட்டியது. அவர்கள் உடனே அஞ்சாத மனச்சித்தரானார்கள். சிறியோர் பெரியோர், அடிமை, எஜமான் முதலிய யாவரும் திருக்குர்ஆன் மஜீதினைக் கையில் எடுத்து சத்திய மொழிகூறினர். அவர்களின் உற்சாகத்தினையும் கிளர்ச்சியினையும் மேன்மேலும் விருத்தியாக்குவதற்காக அகிழில் காவல் வைக்கப்பட்டிருந்த படையினை உடனே வெளிக்கொணர்ந்து முன்னேறிச்செல்லுமாறு கட்டளை இட்டார். ஏனெனில் நேரத்தை வீணாகக் கழிப்பதற்கு அது சமயமன்று அவர் ஆக்ரா நகரை விட்டு வந்த பிறகு பல இடங்களில் புரட்சியும் கலகமும் சர்வசாதாரணமாக நடந்துக்கொண்டிருந்தன. அவரால் அரும்பாடுபட்டுப் பிடித்திருந்த நகரங்களும் கோட்டைகளும் ஒன்றன்பின் ஒன்றாக புதிய அதிகாரிகள் கைவசம் சிக்கிவிட்டது. அநேக ஹிந்து ஸர்தார்கள் பாபரிடத்திலிருந்து நீங்கி விட்டனர். ராணா ஸங்காவானவர் மிக தீரத்துடன் பல நகரங்களைப் பிடித்து வெற்றிபெற்றுக்கொண்டிருந்ததால், ஹிந்துக்கள் எல்லோரும் மொகலாய ஆதிக்கம் சீக்கிரம் அழிந்துபோவது நிச்சயமென்று எண்ணிக்கொண்டிருந்தனர். அன்றியும் ஹிந்துமயமாகவுள்ள ஹிந்துஸ்தானத்தில் ரஜபுத்திர அரசாங்கத்தை ஸ்தாபிக்கப் பெரும் முயற்சியும் செய்துக்கொண்டிருந்தனர்.

மார்ச்மீ 12உ பாபர் தம்முடைய பீரங்கிகளை முன்னால் இழுத்துச் செல்ல உத்தரவு செய்தார். அப்பீரங்கிகளின் இருமருங்கிலும் பலகைகளால் செய்யப்பட்ட ஒருவித பீடங்கள் சேர்க்கப்பட்டிருந்தன. அவைகள் எதிரிகளின் நடவடிக்கைகளை கவனிப்பதற்கு துவாரங்கள் உடையதாயும் எதிரிகளின் தாக்குதல்களை தடை செய்யக்கூடிய விதமாகவும் அமைக்கப்பட்டிருந்ததால், பீரங்கி சுடுபவர்களும் மற்றும் சைன்யங்களும் அப்பீடங்களைத் தங்களுக்குரிய பாதுகாப்பாக வைத்துக்கொண்டு அவைகளின் பக்கமாகச் சென்றனர். பாபரும் தமது குதிரையின்மீது சவாரி செய்தவராக படைகளின் ஒவ்வோர் அணியினுள்ளுஞ் சென்று அமீர்மார்களுக்கும் சைன்யங்களுக்கும் மிக்க உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளித்து, அவசியம் நேரிடுமிடத்து பல விதமான யுத்தமுறைகளையும் உபாயங்களையும் கையாளவேண்டுமென்ற படிப்பினையையும் சில புத்திமதிகளையும் கற்பித்துக்கொண்டு அவர்களுடனே சென்றார். அவ்வாறு முன்னால் இரண்டு மைல்கள் தூரம் சென்று பிறகு பின்வந்து விட்டார்.

பாபரின் படை எழுச்சியை ஒற்றர்களால் ரஜபுத்திரர்கள் அறிந்து உடனே சில குதிரைப் படைகளை அனுப்பி வைத்தனர். அன்னோர் பீரங்கிகளின் சமீபம்வரை வந்துவிட்டனர். அன்று பாபருக்கு சாதாரண யுத்தஞ் செய்ய வேண்டுமென்ற விருப்பமில்லாததால் அவர் யுத்த கோஷமொன்றும் செய்யாமல் அகிழ்களையும் மறைவிடங்களையும் பழுது பார்த்து மிக நல்லவிதமாய் அமைத்துக்கொண்டிருந்தார். அவ்வேலைகள் முடிந்ததும் சில குதிரைச் சவாரிகளை அனுப்பி பகைவர்களை கவனித்து வருமாறு செய்தார். அவர்கள் சென்று ரஜபுத்திரர்களில் ஒரு சிலரைக் கைது செய்தும் ஒரு சிலரை ஈட்டி முனையால் தூக்கிக்கொண்டும் திரும்பி வந்தனர். இச்சம

பவம் பாபரின் பட்டாளத்தவரின் நம்பிக்கையின்மீது மிகத் தீவிரமான உணர்ச்சியை உண்டுபண்ணிற்று.

அங்கிருந்து 2 மைல் தூரத்திலுள்ள ஓரிடம் சாதாரணயுத்தஞ் செய்வதற்கு போதிய வசதி உள்ளதாய் இருக்கக் கண்டு அவ்விடத்திலும் அகிழ்களும் மற்றும் சவுகரியங்களும் செய்வதற்கு சில ஆட்களை கூட்டிக்கொண்டு பாபர் ஆங்கு சென்றார். இவர்கள் வந்து தங்கள் இருப்பிடங்களை செவ்வை செய்வதற்குமுன் பகைவர்கள் வந்து விட்டதாக செய்தி பரவியது. உடனே அவரவரும் தம்முடைய ஸ்தானத்தினின்றும் விலகாதிருக்கும்படி உத்தரவிடப்பட்டார்கள். பாபர் தம்முடைய குதிரையின்மீது ஏறி மிக விரைவாக ஒவ்வொரு அணியினிடத்தும் சென்று வெற்றி கிடைப்பது நிச்சயமென்று உற்சாகப்படுத்தி சுந்தோஷிக்கச் செய்தார். பட்டாளத்தின் நடுவணிக்குத் தாமே தலைவராய் நின்றுக்கொண்டார். வலது பக்கத்தில் தமது மகன் ஹூமாயூன் என்பவரை தலைமையாக்கினர். அவரின் கீழ் 3 தேர்ந்த ஜெனரல்கள் இருந்தனர். இடது புறத்தில் மிக்க பலசாலிகளால் அமைக்கப்பட்ட ஒரு உதவிப்படையை அமைத்து எந்த இடத்தில் உதவி தேவை இருக்கிறதோ அந்த இடத்திற்கு விரைந்து செல்லுமாறு தமது மருமகனுக்கு தலைமைப்பதவி அளித்தார். சைன்யங்களின் இருபுறங்களிலும் வெவ்வேறாக இரு பாதுகாவல்படையை நேமித்து இன்னேர் இருகட்சிகளுக்குமிடையில் யுத்தம் மிக்க மும்முரமாய் நடக்குஞ் சமயத்தில், சமிக்கை செய்யும் பொழுது பின்சென்று எதிரிகளின் பின் சூழ்ந்துக்கொள்ளுமாறு எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தனர். பாபர் இம்முறைகளை முன்னர் அஜ்பகோன்களுடன் போர்புரியுங் காலமுதற்கொண்டு கற்றுக்கொண்டிருந்தார். பின்னர் நிகழ்ந்த அநேக யுத்தங்களிலும் இம்முறையினைப் பிரயோகித்து வெற்றிபெற்றிருந்தார். இந்தியப் படையினை முக்கியமாக இடது வசத்தில் நிறுத்தினர். பீரங்கிப் படைகள் நடுவிலிருந்து முன்னல் கொண்டு வரப்பட்டு ஒன்றுக்கொன்று சங்கிலியால் இணைத்து நிறுத்தப்பட்டன. அவைகளின் இருமருங்கிலும் அமைக்கப்பட்டுள்ள பலகைகளின் துவாரங்கள் வழியாக விரோதிகளின் தாக்குதல்களைக் கவனித்துக்கொள்ளுமாறு பீரங்கிச் சுடுபவர்கள் எச்சரிக்கப்பட்டிருந்தனர். மேலும் அப்பீரங்கிகளைக் காவல் புரிவதற்கு பொறுக்கி எடுக்கப்பட்ட சில பாதுகாவல் படை பின்னல் நிறுத்தப்பட்டிருந்தன. அவர்கள் பீரங்கிகளின் பின்புறத்தில் நின்றுக்கொண்டு எதிரிகள் முன்னேறுவண்ணம் தடைசெய்யவேண்டும். அல்லது அங்கிருந்து முன்னேறி எதிரிகளின்மீது தாவி வீழ்ந்து சமர்புரியவேண்டும். இங்ஙனம் செய்வது பீரங்கிகள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கும் சங்கிலியைப் பிரித்துவிடுஞ் சமயத்தில்தான் நடைபெறவேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருந்தனர். பாபருடைய படையில் மிக்கபலசாலியும் புத்திசாதுர்யமுமுள்ள அநேக வீரர்கள் இருந்தனர். அன்னோர் பாபரிடத்திலேயே இராணுவ முறையினை நன்றாகக் கற்றுப் பழகியவர்களாவர். பாபர் இவ்வாறு தம்முடைய படைகளை தகுந்த முறையில் அமைத்து அணிவகுத்து ஒவ்வொருவரிடத்திலும் நிறுத்தி, உத்தரவு பிறப்பித்தாலன்றி தம் இடத்திலிருந்து அசையவோ அல்லது பகைவனோடு சண்டைசெய்யவோ கூடாதென்று கண்டிப்பாய்க் கட்டளை பிறப்பித்திருந்தார்.

காலை 9½மணிக்கு யுத்தம் துவக்கப்பட்டது. ராஜபுத்திரர்கள் தங்கள் உயிரை வெறுத்து மிகத் தீரமாக பாபரின் வலது புறத்தில் பாய்ந்தேறினர்கள். அப்பக்கத்திலிருந்த பாதுகாவல் படை உடனே முன்னேறி நடுவில் வைக்கப்பட்டிருந்த பீரங்கிப் படையின் இடதுபாரிசத்தால் எதிரிகளின் மீது குண்டுகளை மாரியாகப் பொழியச் செய்தன. எதிரிகளுக்கு மேன்மேலும் உதவிப் படை வந்து கொண்டிருந்தது. இடது புறத்திலும் சண்டை மிக கடுமையாக நடைபெற்றது. இந்த இடத்திலுள்ள படைகளுக்கு உதவிப் படைகள் அடிக்கடி வந்து சேர்ந்துக்கொண்டிருந்தன. சில மணிநேரம்வரை யுத்தம் மிகக்கடுமையாக நடந்துக் கொண்டிருந்தது. திடீரென பாபர் தம் சைன்யங்களின் இருபுறங்களிலுமுள்ள பாதுகாப்புப் படைத்தலைவர்களுக்கு உத்திரவிட்டு உடனே பின்வந்து விரோதிகளைச் சுற்றி வளைத்துக்கொள்ளுமாறு செய்தார். அன்றியும் பீரங்கிப் படைகளையும் முன்னேறிச் செல்லுமாறு உத்தரவளித்தார். அப்

பீரங்கிபடைகளின்பின்னுல்நின்றபாதுகாவல் படையினர் அவைகளின் வலது பாரிசமும் இடது பாரிசமும் போய் நின்றுக்கொள்ளும் படி உத்திர விடப்பட்டனர். உடனே பீரங் கிப்படையினர் வெடிகுண்டுகளைப் போட்டுக் கொண்டே எதிரிகளின் நடுவில் வந்துவிட்ட னர். பீரங்கிகளின் இருபக்கத்திலும் நின்ற உதவிப்படையும் தாவிச்சென்று எதிரிகளின் மத்தியில் நுழைந்துக்கொண்டது.

அரசாங்கப்படையின் எதிர் பாராத சூழ்ச்சிகளால் எதிரிகள் சின்னுபின்னமாக முறிந்துபோக வேண்டியதாயிற்று. எதிரிகளின் படைநடுவில் குழப்பமும் சீர்கேடும் நேர்ந்துவிட்டதால் சுற்றியிலும் நின்று யுத்தஞ்செய்தவர்கள் தங்கள்மீது தாக்குதல்கள் ஏற்படாவண்ணம் நடுப்படையில் புகுந்து தப்பிக்கொள்ள சௌகரியம் வாய்க்காமல் போய்விட்டது. இவ்வித அபாயம் சம்பவித்திருந்தும் அஞ்சா நெஞ்சம் படைத்த ரஜபுத்திரர்கள் கொஞ்சமும் மனங் கலங்காதவர்களாகக் காணப்பட்டனர். அவர்கள் அரசாங்கப் படையின் நடுவில் புகுந்து 'ஜெயம்' 'ஜெயம்' என்று ஆரவாரஞ் செய்தவர்களாக தீரத்துடன் தாவிப் பாய்ந்தனர். எனினும் ஒவ்வொரு சமயமும் அவர்களின் தலை தரையில் வீழ்த்தப்பட்டு போயிற்று.

மாலை சமீபிக்கவும் யுத்தமும் முடிவடைய வேண்டியதாயிற்று. இரத்தம் ஆருகப் பெருகி போடியது. ரஜபுத்திரர்கள் தங்கள் பின்னுலுள்ள முஸ்லிம்களை தாண்டிக்கொண்டு ஓடிவிடுவதைத் தவிர வேறு மார்க்கமில்லாதிருந்தது. பாபர் சக்கிரவர்த்தி எதிரிகளின் சேனைகளை நான்கு மைல் தூரத்திலுள்ள அவர்கள் கூடாரங்கள்வரை துரத்திச் சென்ருர். அதற்கப்பால் அவர் செல்லாமல் நின்றுவிட்டார். பிறகு திறமை வாய்ந்த சவாரிகளில் சிலரைப் பொறுக்கி எடுத்து மீதமுள்ள ரஜபுத்திரப் படைகளை எந்த இடத்திலும் நிற்காமல் பின்தொறத்திச் செல்லுமாறும் அவர்களை ஒன்றுசேர விடாமல் கவனித்து வருமாறும் அனுப்பினுர்.

இந்த வெற்றியைவிட வேறெந்தவெற்றியும் சம்பூர்ணமாய் இருக்கமுடியாது. விரோதிகள் நானுவிதமாகவும் முறியடிக்கப்பெற்று மாய்ந்து போயினர். யுத்தகளம் முழுதும் பிரேதங்களால் குவிந்து கிடந்தன. பியானு ஆனூர் இவ்விரண்டு ஊருக்குப் போகும் வழியில் அலங்கோலத் தோற்றமாகவே இருந்தது. அநேக பிரபல்யமான ஸர்தார்களும் அந்த யுத்தத்தில் மாண்டுபோயினர். யுத்தத்தில் மாண்டவர்களின் தலைகளை ஒன்ருகச் சேர்த்து குவித்து வைக்கும்படி உத்திரவிட்டார். இவ்வெற்றிக்குப் பிறகு பாபர் 'காஜீ' என்ற சிறந்த பெயரால் அழைக்கப்பட்டார். ரானுஸங்கா தப்பியோடி விட்டார். அவரின் மெய் காப்பாளர்கள் அவரைத் துறத்தி வந்தவர்கள் முன்னுல் தங்கள் உயிரைக் கொடுத்து அவரை ஓடிப் பிழைக்கச் செய்தார்களென்று கூறப்படுகிறது.

ரசூ லுல்லாஹ்வும் சமத்துவமும்.

சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை உலகத்து மானிடருக்கு முதன் முதல் போதித்தவர்கள் நம்நபிபெருமானுர் முஹம்மத் ரசூலுல்லாஹிஸல்லல்லாஹ் அலைஹிவஸல்லமவர்களே யாவார்கள் "விசேஷமான பகுத்தறிவும் பக்தியும் உள்ளவர்களே இறைவனுக்கு மிகப் பிரியமானவர்களாகும் மனிதனுக்கு மனிதன் சமம்; அரசனும் ஆண்டியும் ஒரே மண்ணினுலேயே உருவாக்கப்பட்டிருக்கின்றனர்; இவ்விருவரின் பிறப்பும் இறப்பும் ஒரே தன்மையாகவே இருக்கிறது" என்று 1300 வருடங்களுக்குமுன் அரபநாட்டின்கண் அவதரித்துள்ள சமத்துவத்தூதர் (ஸல்.) அவர்கள் கூறிய சமத்துவபோதனைகளானது, அறப் தேசத்திலிருந்த பல்வேறு சாதியினரையும் ஒன்றுபடுத்தி நூற்றுக்கணக்கான உடல்களாகவும் ஒருயிராகவும் செய்தன. இதுசமயம் உலகத்தில் காணப்படும் பற்பல சாதியினருள்ளும் அறிவிலும் கல்வியிலும் சிறந்து விளங்குகின்ற பெரி

யோர்களும் மகான்களும் அவர்களைப் பின் பற்றி நடந்துதான் வருகின்றனர். இப்பூவுல கத்தின் கண் காணக்கூடிய ஒவ்வொரு மதஸ் தாினுடையவும் சமயவாதியினுடையவும் வேதங்களையும் சாஸ்திரங்களையும் நம் முன்னே வைத்துப் பார்ப்போமாயின் அவை களில் பொதுவாக உலகமக்களுக்கு சமத்து வத்தையும் சகோதரத்துவத்தையும் போதிக் கக் கூடிய மதம் ஒன்றுதான் உளது என கதிரவனைிபோல் வெட்ட வெளிச்சமாக கண்டுக் கொள்ளலாம்.

கிறிஸ்தவர்களைப்பற்றி ஆராய்வோமாகின் அவர்களின் தேவாலயங்கள், பிரசார சபை கள், முதலிய யாவும் கிறிஸ்தவப் பாதிரிக ளால் நிர்வகிக்கப் படுகின்றனவென்று தெரி ந்து கொள்கிறோம். இப்பாதிரிகள் எல் லோரும் ஜாதிபேதமும், குலவேறுபாடும், நிறவித்தியாசமும் உடையவராய்த்தான் காண்கின்றனர். அளவுக்கு மிஞ்சி குலப் பெருமை பாராட்டுதல் இன்னோருக்கு சர்வ சாதாரணமாய் இருந்து வருகிறது. ஒரு வர்க் கத்தாரின் கோவில் பூஜைகளில் வேறொரு வர்க்கத்தார் கலந்துக் கொள்வதில்லை. ஆப் பிரிக்கா அல்லது சென்னைக் கிறிஸ்தவரொரு வர் ஒரு வெள்ளைக்காரக் கிறிஸ்தவரால் எத் துணை தூரம் மதிக்கப்படுகிறரென்பதை அக் கருப்புக் கிறிஸ்தவர் நன்கறிவர். மேற்குலக் கிறிஸ்தவர்கள் தம்மை யொத்த கிறிஸ்தவ சகோதரர்களை கீழோரென்று மிகுந்த அவ மரியாதையாக நடத்தவும் பிரசாரஞ் செய்ய வும் முயற்சித்து வருகின்றனர்.

ஹிந்து சமூகத்தில் சமத்துவம் என்பது குதிரைக்கொம்பாகவே இருக்கிறது. முஸ் லிம்களுக்குப் போட்டியாக நின்று எதிர்ப் பிரசாரத்தில் இறங்கிய ஆரியசமாஜம், பிரமோ சமாஜம் முதலிய ஹிந்து சமயங்களின் கார ணமாக தற்போது ஹிந்து சமூகத்தினிடை சமூக வேற்றுமையும் குலவேறுபாடுகளும் மேன்மேலும் வளர்ந்துக் கொண்டிருப்பதை நாம் கண்கூடாகக் காணலாம். ஆனல் இஸ் லாம் இதுவரை சமத்துவத்தை அடிப்படை யாகக் கொண்ட ஒரே மதமாகவே இருந்து வருகிறது. பைத்துல்லாவுக்கு ஹஜ்ஜு செய் யும் பொட்டு செல்கின்ற அரசன் முதல் பிச் சைக்காரன் வரையுள்ள ஒவ்வொரு முஸ்லி மும் ஏக சமத்துவ உடையுடன் ஒரே இடத் தில் சந்திக்கின்றனர். அரசப் பதவியுள்ள ஒருவருக்கு தம்மினும் கீழோர் ஒருவர் முன்னே நிற்பதைக் கண்டித்து பின்னே போகும்படி செய்ய உரிமை கிடையாது. முஸ்லிம்களின் ஒவ்வொரு பள்ளிவாசலுக் குஞ் சென்று பார்த்தாலும் ஆங்கும் ஏழை, செல்வந்தோன், உயர்ந்தோன், தாழ்ந்தோன் என்ற வித்தியாசமின்றி ஒருவர் பக்கத்தில் ஒருவராக வரிசைக் கிரமமாய் நின்று தொ ழுதுவருவது முஸ்லிம்களின் அனுஷ்டானத் தில் அமைந்துள்ள உயரிய கொள்கையாகிய சமத்துவ அந்தஸ்தே காரணமாகும். என்ன அதிசயமான தோற்றம்! ஒரு மன்னரும் அவ ரது சேவகரும் சமமாக ஒருவர் பக்கத்தில் மற்றவர் நின்று இறைவனது மகிமையைப் புகழ்ந்து தலைகுனிந்து, சாஷ்டாங்கஞ்செய்து வருவது போன்று வேறெந்த மதத்திலாவது இத்துணை உயரிய முறையில் சமத்துவம் அனுஷ்டித்துக் காட்டப்படுவதை பார்க்க முடியுமா?

நபி பெருமானர் (ஸல்.) அவர்கள் காலத்தி லிருந்த சஹாபாக்கள் அனைவரும், உண்ணல், உறங்கல், விவாகம்புரியல், தொழில் செய் தல், முதலிய சகல நடைவுடை பாவனைகளி லும் ஒருவருக்கொருவர் வித்தியாசம் பாராட் டாதவர்களாய் இருந்தனர். கடவுள் ஒருவ னென்னும் முஹம்மத் (ஸல்) அவர்கள் அவ னுடைய தூதரென்றும் ஒப்புக்கொண்ட யாவ ரும் ஒருவருக்கொருவர் சகோதர முஸ்லி மாகிவிட்டனர். இஸ்லாத்தின் இப்படிப்பட்ட உயரிய கொள்கையே முஸ்லிம்களை எக்கா லத்திலும் ஜெயசீலராய் விளங்கும்படி செய் தது. இத்தகைய உயரிய சமத்துவக் கொள் கையின் காரணமாகவே உலகத்தின் பல பாகங்களிமுள்ள முஸ்லிம்கள் ஆளும் ஜாதி யாராய் விளங்கினர்.

ஹிந்துஸ்தானத்தில் மொகலாயர்கள்குலப் பெருமை பாராட்டுஞ் சுபாவமுடையவராய் இருந்ததினல் அவர்கள் காலத்திலிருந்து இஸ்லாத்திற்கு மிக்க தீங்கு விளைய நேரிட் டது. நாம் இதுகாலை ஓர் நவ் முஸ்லிமை கீழோன் என்றும்; தீண்டத்தகாதவனென் றும், அவனுடன் விவாக பந்தம் செய்துக் கொள்வது பாவமென்றும் நாமே சகல துறைகளிலும் உயர்ந்தவரென்றும் நினைப்ப தெல்லாம் ஜாதிவேற்றுமை குலப்பெருமை பாராட்டும் சுபாவம் நிறைந்திருந்த அம்மொ

கலாயர்களால் ஏற்பட்டவைகளேயாகும். முஸ்லிம்களாகிய நாம் அனைவரும் இஸ்லாத்தின் உயரிய கொள்கைகளாகிய ஏகதெய்வம், சமத்துவம் சகோதரத்துவம் ஆகியவற்றின் போதனைகளை நன்கு அறிந்து ஒழுகுமாறு ஆண்டவன் அருள் பாலிப்பானாக.

—————

ஹிந்துஸ்தான் மகுடமணி.

உலகத்தில் காணப்படும் மிகவும் விசித்திரமான கட்டிடங்களுள் ஆக்ராவில் அமைக்கப் பெற்றுள்ள தாஜ்மஹால் மிக பிரதானமுடையதாகும். அதன் அழகிய தோற்றமானது பார்ப்பவர்களது மனதைக் கவரக்கூடிய அத்துணை விசித்திர வேலைப்பாடுடையதாக யிருக்கிறது. அதன் மிதமிஞ்சிய அழகானது அக்காலத்திலுள்ள இந்தியர்களின் திறமைக்கும் கைத்தொழிலின் விசேஷத்திற்கும் அறிகுறியாக இருப்பதினிமித்தம் அதைக் கண்ணால் கண்டு களிக்க அளவில்லாத ஆணும் பெண்ணும் தினே தினே ஆங்குசென்றுகொண்டிருக்கின்றனர். அக்காலத்திலுள்ள கைத்தொழிலாளிகளுக்குத் தக்க மதிப்பும் பெருமையும் இருந்ததால் அவர்களுடைய வேலைப்பாடுகள் யாவும் உயர்ந்த முறையில் அமைந்திருந்தன.

ஒவ்வொரு காலத்திலுமுள்ள அரசர்களும் மந்திரிகளும் மாபெரும் கட்டிடங்கள், கோபுரங்கள், மண்டபங்கள், மஸ்ஜிதுகள் முதலியவைகளை ஏராளமாகக் கட்டிவைத்திருக்கின்றனர். கல்வேலையில் தேர்ந்தோர், கவிஞர்களுடையவும் சித்திரவேலைக்காரருடையவும் பேர்பிரஸ்தாபத்தை விட உயர்ந்த பேர் வாங்குவதற்கு பிரயத்தனஞ் செய்தார்கள். மிகவும் பிரயாசையுடன் அக்காலத்தில் கட்டி முடிக்கப்பட்ட அநேக பெரிய மஹால்களெல்லாம் சில நூற்றாண்டுகளுக்குப் பின் அழிந்து போயின. சில கட்டிடங்கள் இருந்தவிடங் கூடத் தெரியாது மனிதர்களின் ஞாபகத்தினின்றும் மறைந்துபோயின. சில கட்டிடங்கள் இருந்த விஷயமாக சந்தேகமும் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் தனக்கு நெகிர் கிடையாதென அறிவித்துக்கொண்டிருக்கும் தாஜ்மஹாலைக் கட்டுவதற்கு எச்சக்தியானது அஸ்திவாரமிட்டதோ அஃது நாளதுவரை அழியாமலே இருந்து வருகிறது. அதைக் கட்டியவர்களின் உடல் அழிந்துபோயினும் அவர்களின் கைத்தொழிலின் சிறப்பும் பெருமையும் அழிந்துபோகவில்லை. தாஜ்மஹால் மிகவும் அபூர்வமான விதத்தில் கட்டி முடிக்கப் பெற்ற கட்டிடங்களுள் முதன்மை வாய்ந்ததாகும். அது அளவு கடந்த அன்பின் உருவாக எழுந்து அழகே உருவாகக்கொண்டிருக்கின்றது.

தாஜ் மஹாலைப்பற்றிய சரிதை பெரும்பாலும் இன்றுவரை பூரணமானவிதத்தில் கூறப்படாதிருந்து வருகிறது. நமக்குத் தெரிந்தமட்டிலு முள்ளவைகளே மந்திர வாதங்களைப் போன்று நம் மனதை பிரமையடையச் செய்கின்றனவா யிருக்கிறது. இதுவன்றி மொகலாயர்கள் கூறுபவைகளைக்கொண்டு இன்னும் அதன் விசேஷங்களை நாம் நன்கு தெரிந்து கொள்ளவேண்டி யிருக்கிறது.

ஒருவன் 'ஜம்னு' நதியைக் கடந்து அடுத்தாப்போல் சென்று ஆங்கு நின்றுக்கொண்டு மறு கரையிலுள்ள ஒரு விசாலமான மேடையிலுள்ள அடித்தளத்தில் மிக நேர்த்தியான சலவைக் கற்களால் கட்டப்பட்டுள்ள உயர்ந்த ஸ்தூபிகளையும், மேற்றளத்தின்மீதுள்ள மண்டபங்களையும் கண்ணுறுவானுயின் அக்கட்டிடம் அவனை மிகச் சமீபம் வந்து பார்க்கும்படிக்குள்ள ஆசையை உண்டுபண்ணுமற் போகாது. அதன் அருகிற் சென்று பார்க்குமிடத்து ஆகாயத்தில் வட்டவடிவமான பிரத்தியேக நேர்த்தியுடையதும் அதன் நாலாபக்கங்களும் அன்பு மயமாக ஜொலிக்கூடியதும், மிகச் சுத்தமானதுமான ஒரு பொருள் இருப்பதாகத் தோன்றும்.

தாஜ் மஹால் அமைந்துள்ள விஸ்தீரண இடமானது ராஜா மான்ஸிங்கிற்கு சொந்தமானது; அது ஷாஹ் ஜஹான் சக்கிரவர்த்தி காலத்தில் மான்ஸிங்கின் பேரர் ஜெயசிங்கின் கைவசமிருந்தது. அந்த இடத்தினை கி. பி. 1630-ல் பாதுஷா விலைகொடுத்து

வாங்கினர். அக்காலத்திலிருந்த முல்லா அப்துல் ஹமீது லாஹூரி என்ற சரித்திராசிரியர் "பாதுஷாஹ் நாமா" என்னும் நூலில் அந்த ஸ்தலத்திற்குப் பகரமாக ஷாஹ் ஜஹான் சக்ரவர்த்தி தமது அரசாங்கத்திற்குச் சொந்தமான இலாகாவிலிருந்து பெரும் விலை பொருமதி பெற்ற ஸ்தலங்களை ஜெயஸிங்கிற்கு அளித்துளார் என்று கூறி இருக்கின்றார்.

நிர்மாணமாதிரிகள் தயாரித்ததுயார்.

தாஜ்மஹாலை மிகவும் நேர்த்தியான முறையில் கட்டி முடிக்க அக்காலத்திலுள்ள பெயர் பெற்ற சிற்பசாஸ்திரிகளையும் கைத்தொழில் நிபுணர்களையும் ஷாஹ் ஜஹான் சக்ரவர்த்தி அழைப்பித்து நமூனக்கள் தயார்செய்து தரும்படி கேட்டார். ஒரு நூறு முன் மாதிரிகள் தயாரித்துக் கொடுக்கப்பட்டன. அவைகளில் ஒன்றுவது பாதுஷாவுக்கு திருப்தி அளிக்கவில்லை. முடிவில் ஈஸா முஹம்மது அபந்தீ என்பவர் தயாரித்த மாதிரியையே எல்லோரும் ஏக மனதுடன் ஒப்புக்கொண்டனர். உலகத்திலுள்ள மிகவும் அழகிய கட்டிடங்களுள் முதன்மையாகிய தாஜ்மஹாலின் மாதிரியை தயாரித்த அம்மகானு பாவரின் நாமதேயமானது அக்காலத்தில் எவருடைய நினைவுக்கும் வரவில்லை. ஆனல் கட்டிடம் முடிவுபெற்று அழகுடன் ஜொலித்தபோது அதைத் தயார் செய்த வேலைக்காரரையும் அதைத் தெரிந்தெடுத்த பாதுஷாவையும் மிக்கவாறு யாவரும் புகழ்ந்து போற்றினர்.

மேல்நாட்டுச் சரித்திராசிரியர்கள், கீழ்நாட்டினர் எந்தத் துறையிலாவது பெருமையும் சிறப்புங் கொண்டிருக்க சகிக்கமாட்டாராகையால் அவர்கள் தாஜ்மஹாலின் உருவத்தை அமைத்த பெருமை ஐரோப்பாவிலுள்ள வினஸ் தேசத்து சிற்பியாகிய "ஜவீறவ்த்வற்னியூ" என்பவரையே சாரும் என்று கூறுகின்றார்கள். அவர் அக்காலத்தில் போர்ட்கீஸ் கப்பல் மாலுமிகளுடன் இந்தியாவிற்குவந்து ஆக்ராவிலுள்ள நந்த வனத்தின் கட்டிடம் பாதி வேலையாகிக் கொண்டிருக்கும் சமயத்தில் அவர் லாகூரில் காலஞ்சென்று விட்டதாகவும் நந்தவனத்தின் நமூனவை அவர்தான் முதலில் காண்பித்தார் எனவும், 1641 ம்வருஷத்தில் ஆக்ராவில் வந்திருந்த ஸ்பெயின் பாதிரியான மஙீக் என்பவர்கூறியதை ஆதாரமாகவைத்துக்கொண்டு மேல்நாட்டார் இவ்வாறு கூறி வருகின்றனர். பாதிரியார் அவ்வாறு கூறுவதற்கு எந்தவிதமான ஆதாரங்களுமில்லை. தவ்பர்பீர், டேவர்னீர் முதலிய ஐரோப்பிய மாலுமிகள் விர்ப்ப சாஸ்திரியின் வருகையைப்பற்றி எதுவும் பிரஸ்தாபிக்கவில்லை. ஷாஹ் ஜஹான் பாதுஷாவின் காலத்து நிகழ்ந்த சரித்திரங்களைக் கூறுகின்ற ஷாஹ் நாமாவிலுங்கூட நிர்மாண மாதிரியைத் தயாரித்தவர்களில் மேனாட்டாரின் பெயர் கூறப்படவில்லை. ஷாஹ்நாமாவில் தாஜ்மஹாலைக் கட்டுந் தொழிலில் சம்பந்தப்பட்டிருந்தவர்களின் பெயர்கள் விபரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலிருந்து அதில் சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரும் கீழ் நாட்டினர் என்றே உறுதிப்படுகின்றது.

தொழிலாளர்களின் சம்பளம்.

கட்டிட வேலைக்குத் தலைவராய் இருந்த ஈஸா முஹம்மத் அபந்தீ என்பவருக்கு மாதம் 1000 ரூபாய் சம்பளங் கொடுக்கப்பட்டது. இதே சம்பளத்தில் வேறு நான்கு சிற்பசாஸ்திரிகளும் இருந்தனர். உயர்ந்த சம்பளம் பெற்ற வேலைக்காரர்கள் மொத்தம் 37 பேர்களாகும். ஒருவர் சித்திரங்கள் வரைபவர். ஐவர் அழகிய கை எழுத்து எழுதுபவர்கள். ஒருவர் அரபிக் கூட்டெழுத்து எழுதுபவர். ஒருவர் மண்டபம் அமைப்பவர். ஒருவர் கலஸ் (குடங்கள்) செய்பவர். நான்மர் கற்கள் வெட்டுபவர். நான்மர் கொத்தன்மார். நான்மர் கற்களில் பூவேலைகள் செய்பவர். ஒருவர் மேற்பார்வைக்காரர் ஒருவர் மானேஜர் அவர் சகல வேலைகளும் தெரிந்த திறமை வாய்ந்தவரா யிருந்தார். மேலே கூறப்பட்டவர்களின் சம்பள விகிதம் 200 முதல் 1000 வரை உயர்ந்திருந்தது.

தொழிலாளர்களின் ஜாபிதாவும் அவர்களின் சம்பளமும்

ஊர்.	பெயர்.	தொழில்.	சம்பளம்.
துர்க்கி.	சத்தார்கான்.	அழகிய கை எழுத்து.	ரூ. 1000
சமர்கந்து.	முஹம்மது ஷரீப்.	சித்திரம் வரைவது.	ரூ. 1000
ஷீராஜ்.	முஹம்மது ஹனீப்.	கொல்லர்.	ரூ. 1000

ஷீராஜ். அமானத்கான். அரபி எழுத்து. ரூ. 1000
அரேபியா. காதர் ஜமான். கொத்தர். ரூ. 800
தெஹ்லி. ஸான்ஜீலால். பூவேலைகள். ரூ. 800
மூல்தான். புல்தேவ்தாஸ். பூவேலை. ரூ. 690
லாகூர். மனோலால். ,, ரூ. 690
தெஹ்லி. ஜம்னுதாஸ். ,, ரூ. 680
,, அப்துல்லா. கொத்தர். ரூ. 675
,, பிஷாரத்அலி. ,, ரூ. 632
மூல்தான். பகுவான்தாஸ். ,, ரூ. 630
தெஹ்லி. முஹம்மது யூசுப்கான். கொத்தர். ரூ. 600
மூல்தான். சோட்டாலால். கொத்தர் ரூ. 600
,, ஜோமர்லால். கொத்தர் ரூ. 600
,, அப்துல் கப்பார். அழகிய எழுத்து. ரூ. 600
ஈரான். வஹ்ஹாப்கான். கல் பூவெட்டுதல். ரூ. 600
மூல்தான். அமீரலி. ,, ரூ. 600
பல்கு. முஹம்மது ஸாஜித். கொத்தர். ரூ. 550
துர்க்கி. இஸ்மாயில்கான். மண்டபஞ் செய்தல். ரூ. 500
பகுதாத். முஹம்மதுகான். கை எழுத்து ரூ. 500
தெஹ்லி. முஹம்மது சித்தீக். கொத்தர். ரூ. 500
புகாரா. அதா முஹம்மது. கல்லாசாரி. ரூ. 500
தெஹ்லி. அபூயூசுப். தச்சுவேலை. ரூ. 500
மூல்தான். ஷுக்ருல்லா. கல்லாசாரி. ரூ. 475
புகாரா. ஷாகிர்முஹம்மது. கல்லாசாரி. ரூ. 400
ஷாம். ரோஷன்கான். கைஎழுத்து. ரூ. 490
மூல்தான் ஷோஜீலால். தச்சு. ரூ. 342
மூல்தான். மனோஹர்தாஸ். ,, ரூ. 295
லாகூர். காஸிம்கான். விளைவு போடுபவர். ரூ. 295
லாகூர். மாத்ஹோரும். விளைவுபோடுபவர். ரூ. 283
மூல்தான். சிந்தாமன். விளைவு போடுபவர். ரூ. 252
மூல்தான். பன்வீதஹர். விளைவு போடுபவர். ரூ. 244
மூல்தான். ஹீருமன். விளைவு போடுபவர். ரூ. 234
லாகூர். மனோஹர்ஸிங். விளைவுபோடுபவர். ரூ. 200
கனூஜ். மோஹன்லால். விளைவுபோடுபவர். ரூ. 200

20 வருஷங்கள் வரை 20 ஆயிரம் தொழிலாளர்களின் இடைவிடாத வேலையால் தாஜ்மஹால் கட்டி முடிக்கப் பெற்றது. தாஜ்மஹாலினுள்ள மண்டபங்களினுட்சுவர்களில் செய்யப்பட்டிருக்கும் பூங்கொத்து வேலைகள் சந்தேகமின்றி விசேஷமான கைத்தொழிலின் நமூனுவாகயிருக்கிறது. விலைமதிக்க முடியாத சிறு சிறு கற்களில் மிக ரம்பியமான பூக்கள் செதுக்கப்பட்டு சுவர்களில் பதிக்கப்பட்டிருக்கின்றன. அக்கற்கள் மனதைக் கவரக்கூடிய பல வர்ணங்களுடையனவாக யிருக்கிறது. அவைவிலையுயர்ந்த பட்டுக்களைப்போல வெகு மிருதுவாக யிருக்கின்றன. அக்கற்களின் வேலைப்பாடுகள் மனிதர்களின் கையால் செய்யப்பட்டதோ அல்லது ஜின்களால் செய்யப்பட்டதோ என திகைக்கும்படியான அவ்வளவு அருமை வாய்ந்திருக்கிறது.

தாஜ்மஹாலின் உட்புறத்தை மிக்க அலங்காரமாகத் திகழச்செய்கின்ற விலையுயர்ந்த பலவர்ணகற்கள் இந்தியாவிலுள்ள பெரிய நகரங்களிலிருந்து மட்டுமன்றி ரஷியா, அரேபியா, பக்தாத், எகிப்து, எமன், சிலோன் முதலிய வெளி நாடுகளிலிருந்தும் கொண்டு வரப்பட்டனவாகும். ஐரோப்பிய சரித்திராசிரியர்கள் தாஜ்மஹாலின் உட்புறத்து பூவேலைகளும் கல்வேலைகளும் பிரான்ஸ் தேசவாசியாகிய ஆஸ்டின்டியுரூ என்பவரால் செய்யப்பட்டனவென்று கூறுகின்றனர். இக்கூற்றுக்கு யாதொரு ஆதாரமுங் கிடையாது.

கட்டிடத்தின் செலவு விபரம்.

தாஜ்மஹாலைக் கட்டிமுடிக்க எவ்வளவு செலவு ஏற்பட்டிருக்கும் என்பதைத் தெரிந்துக் கொள்வது முடியாத காரியமாகயிருக்கிறது. ஷாஹ் நாமாவில் 50. லக்ஷம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இத்தொகை சரியாக இருக்கும் என்று சொல்வதற்கு இடமில்லா திருக்கிறது. அக்காலத்திலுள்ள 50. லக்ஷம் எண்ணிக்கை இக்காலத்தில் 20. கோடிக்குச் சமமாகும்.

சமீபத்தில் ஒரு தஸ்தாவேஜ் கண்டு பிடிக்கப்பட்டது. அது ஷாஹ்ஜஹான் சக்ரவர்த்தியின் அரசாங்க பொக்கிஷாதிபதியாயிருந்த ரூதர் என்பவரால் எழுதப்பட்டிருந்தது. அதில் தாஜ்மஹாலையும் அதைச் சுற்றியுள்ள கட்டிடங்களையும் கட்டிய செலவு விவரம் காணப்படுகின்றது. அத்தஸ்தாவேஜின் பிரகாரம் தாஜ்மஹாலை கட்டிய வகைக்கு சுமார் 3-கோடி வரை செலவு ஏற்பட்டிருக்குமெனப் புலனாகின்றது. அதிற் சில செலவு விபரம் கீழ்வருமாறு:—

	ரூ. அ. பை.
தலைமை அரசாங்கப் பொக்கிஷத்திலிருந்து ஒதுக்கப் பட்ட தொகை	9755926—3—0
ஆக்ரா, சற்கார் பொக்கிஷத்திலிருந்து ஒதுக்கப்பட்ட தொகை	5361116—7—0
மஸ்ஜிதுகள், மண்டபங்கள் சிலவு	225821—7—0
நான்கு மனாராவுக்கும்	5177675—7—0
பூவேலைகளுக்கும் நகாஸ்வேலைகளுக்கும்	55811—2—0
ரவ்ளா வகைக்கு	5345951—10--0
ஷாஹ்ஜஹான் சக்கிரவர்த்தியின் கபரஸ்தானுக்கு	19794—4—0
மும்தாஜ்மஹால் கபரஸ்தானின் மதிள்	45622—4—0
பெரிய மண்டபத்தின் அடிவேலை	56152—10--0
தளவரிசைக்கு	19691—9—0
பூவேலைகளுக்கு	21482—10--0
கப்ர் விரிப்புகளுக்கு	45687—14--0
சலவைக் கற்களுக்கும் பூவேலைகளுக்கும்	468855—2—0
பளிங்கிமஹாலுக்கு சந்தன வாசற்படி	45245—0—0
மனாராவின் சன்னல்கள்	24837—3—0

பள்ளிவாசலின் ஒழுக்கங்கள்.

முஸ்லிம் சகோதரர்காள்! சகல வல்லமையும் பெருமையும் மேன்மையும் ஒருங்கே பொருந்தியுள்ள இறைவன் நம் முஸ்லிம்களின் நன்மையையும் ஈடேற்றத்தையுங் கருதி, தன்னை அவர்கள் எப்போதும் ஞாபகஞ் செய்யும்பொருட்டும், ஒருவருக்கொருவர் மிகக் கட்டுப்பாடான சம்பந்தம் வைத்துக்கொள்ளும் பொருட்டும் அவர்களுக்குள் அன்பு சகோதரத்துவம் இவைகள் ஓங்கச் செய்வதற்காகவேண்டியும், அவரவரும் தத்தம் வார்த்தைப்பாடுகளை நிறைவேற்றுதற்காக வேண்டியும் முஸ்லிம்களை பள்ளிவாசல்களில் ஒன்றுகூடும்படி செய்துள்ளான். ஆகவே ஆண்டவனுக்கு மிக உகப்பான இடமானது பள்ளிவாசலேயாகும். நம்மிலனேகருக்கு எத்தனையோ மண்டபங்களும் மஹால்களும், மேடைகளும், பங்களாக்களும் இருக்கும்போது இறைவன் பள்ளிவாசல்களில் ஒன்று கூடும்படி கட்டளைபிறப்பித்ததின் காரணம் என்னை? ஜனங்கள் எல்லோரும் பொதுவான ஓர் ஸ்தலத்தில் ஒன்றுகூடி ஒரே ஆண்டவனை ஒற்றுமையாக வணங்கி பக்தி செலுத்தவேண்டும் என்பதே அதன் தாற்பரியமாகும். அமீர், சீமான், தனவந்தர், ஏழை, பிச்சைக்காரன் ஆகிய யாவரும் சமத்துவ முறையில் பெருமை, அகம்பாவம் இவைபோன்ற கெட்ட சுபாவங்களை விட்டொழித்து தன்னை என்னென்றும் ஞாபகஞ் செய்யவேண்டுமென்பதே அவனது நோக்கமாகும். முஸ்லிம்கள் வெவ்வேறாக தனியிடங்களில் தொழுகையை நிறைவேற்றுகிறதாயிருந்தால் ஒரேமுகமாக சித்தத்தை செலுத்துவதற்கும், உலக விவகாரங்களிலும் வைதீக அனுஷ்டானங்களிலும் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக இருந்து சீரிய வாழ்க்கையை நடத்துவதற்கும் ஒவ்வொருவரும் தத்தம் அபிப்பிராயங்களைத் தெரிவித்து கலந்து ஆலோசிப்பதற்கும் தக்க சந்தர்ப்பம் வாய்க்காமற் போய்விடும்.

ஆகவே அருமை நண்பர்காள்! நாம் எல்லோரும் ஒரு பொதுவிடத்தில் ஒன்றுகூடி ஒற்றுமையாக ஒரே திசையை நோக்கி வணங்கவேண்டுமென்று அன்புடையோனாகிய ஆண்டவன் விரும்புவதால் நாம் அவ்

வாறே செய்வதற்குக் கடமைபட்டிருக்கின்றோம்.

பள்ளிவாசல்கள் இருப்பதினால் ஏற்படக்கூடிய நன்மைகள் இன்னவை என்று அறிந்துகொண்டதினால் இனி பள்ளிவாசல் விஷயமாய் நாம் அனுஷ்டிக்கவேண்டிய முறை யாது என்பதைப்பற்றி ஆராய்வோமாக. பள்ளிவாசல் என்பதின் பொருள் ஆண்டவனை வணங்குவதற்குரிய தலம் என்பதாம். அதாவது உலகவிவகாரம், இன்பம் துன்பம் முதலிய சகலவிதமான சம்பந்தங்களிலிருந்தும் முகத்தைத்திருப்பி ஆண்டவனளவில் மனதை நிலைக்கச்செய்து "ஏ! ஆண்டவனே யாங்கள் எல்லோரும் உனது மகிமையையும், பெருமையையும், உயர்வையும்பற்றி உன்னை துதிசெய்கின்றோம்; உனது கட்டளைகள் ஒருபொழுதும் அசைக்கக் கூடாதவைகள்; உனக்கு இணையாருமில்லை; யாங்கள் எல்லோரும் ஏழையாகிய உனது அடியார்களாக இருக்கின்றோம்; உதவியற்றவர்களாயும் அதைரியமுடையோர்களாயுமிருக்கின்றோம்; நீயே எங்கள் யாவர்க்கும் நாயகன்; யாங்கள் உனக்கு வழிப்பட்டுப்பணியக் கடமைப்பட்டிருக்கின்றோம்; நீயே எங்கள் கஷ்டங்களையும் துன்பங்களையும் நிவர்த்திப்பவன்; ஆதலின் எங்களுக்கு நேர்வழி காண்பிப்பாயாக; உனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் காண்பித்த நெறியில் நாங்கள் நடந்து செல்லுமாறு கிருபை பாலிப்பாயாக; உனது நன்கொடையையும் பாக்கியங்களையும் எங்களுக்கு என்ஞான்றும் அருளிக்கொண் டிருப்பாயாக; உனது கோபத்திற்கு ஆளாகியவர்களைவிட்டு எங்களைப் பாதுகாத்தருள்வாயாக; வழிகேடான பாதையில் யாங்கள் செல்லாதபடி ஈடேற்றமாக்கிவைப்பாயாக. என்று பிரார்த்தனை புரியவேண்டும்.

சகோதரர்காள்! பாங்கு சப்தம் கேட்ட மாத்திரமே பள்ளிக்குச் செல்வதற்கு பிரயத்தனஞ் செய்யுங்கள். இக்காலத்தில் அநேக முஸ்லிம்கள் தொழுகைபோன்ற முக்கியக் கடமைகளை நிறைவேற்றாதிருப்பதோடு தொழுகின்றவர்களை கேலியும்செய்கின்றனர். அவர்கள் விஷயமாகவே ஆண்டவன் "அவர்களை தொழுகைக்காக அழைக்கப்படுமாயின் அவர்கள் சிரித்து பரிகாசஞ்செய்கின்றனர்" என்று திருக்குர்ஆனில் கூறியுள்ளான். அன்னோரின் நிலைமையினை இங்கு நாம் கவனிக்க வேண்டிய அவசியமில்லை. முதலில் பள்ளியில் நுழையும்போது ஆண்டவனை ஸ்தோத்திரம் செய்யவேண்டும். நுழைந்த உடன் இரண்டு றக்கஅத்து தொழுகையை நிறைவேற்றவேண்டும். நம் நபிகள் பெருமானாரவர்கள் 'ஒளு' செய்தவுடனும் பள்ளிவாசலுக்குள் நுழைந்தவுடனும் ஆண்டவனைப் போற்றிப் புகழ்வது வழக்கமாயிருந்தது. ஆகவே முஸ்லிம்களாகிய நாம் ஒவ்வொருவரும் ரசூலுல்லாஹ்வின் சுன்னத்தைப் பின்பற்றி நடக்கவேண்டியதே விரும்பத்தக்க காரியமாகும்.

பள்ளிவாசலின் ஊழியத்தினால் மட்டிலடங்கா அனந்த நன்மைகளிருக்கின்றன. ஆதலின் அதற்கு இலேசான அற்பமாகிய சிறியதோர் தொண்டு புரிவதுகொண்டு மாபெரும் கூலி கிடைக்கின்றதென கூறப்படுகின்றது. "ஒருவன் ஒரு துரும்பை பள்ளிவாசலிலிருந்து எடுத்து வெளியே எறிந்துவிடினும் அதையும் அவன்செய்த நன்மைகளுடனே எழுதப்படும்" என்று நம் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார்கள். ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களது காலத்தில் ஒரு பெண்மணி பள்ளிவாசலைப் பெருக்கி சுத்தம் செய்யும் வேலையிலிருந்துவந்தார். அம்மாது இறந்துபோனதை ஸஹாபாக்கள் ஏதோ அசந்தர்ப்பத்தினால் நாயகம் (ஸல்) அவர்களுக்குத் தெரிவிக்காமலிருந்து விட்டனர். இதனால் நாயகம் (ஸல்) அவர்கள் அம்மாதின் ஜனாஜாத் தொழுகையை நிறைவேற்றமுடியாமற் போய்விட்டது. மறுநாள் காலையில் நாயகம் (ஸல்.) அவர்கள் ஸஹாபாக்களை அழைத்து ஏன் அம்மாதின் மரண சமாச்சாரம் தெரிவிக்கவில்லை என்றும் உடனே அப்பெண்மணியின் கப்றை காண்பிக்கும்படியும் கேட்டார்கள். நாயகம் (ஸல்.) அவர்கள் எழுந்துசென்று அம்மாதின் கப்ர்சமீபம் நின்று தொழுகையை நிறைவேற்றிய பின்னர் கூறியதாவது "கப்றுக்குள் இருள் உண்டாகிறது. என்னுடைய பிரார்த்தனையால் ஆண்டவன் அதனை பிரகாசமாகச் செய்கின்றான்" சுப்ஹானல்லாஹ்.

பள்ளியிலுள்ள ஹவ்ளில் தண்ணீர் நிரப்புதல், பள்ளிவாசலை சுத்தஞ்செய்தல், விரிப்பு, பாய் முதலியவைகளை சீர்படுத்தல், விளக்கேற்றல் போன்றவைகள் பள்ளிவாசலுக்கு

நாம் செய்யவேண்டிய கடமைகளிலுள்ளதாகும். இதனால்கிடைக்கப்பெறும் நன்மைகளும் பிரதிப் பிரயோசனங்களும் கணக்கற்றனவாகும். "ஒருவன் ஒரு அணுப்பிரமாணம் நன்மையைச் செய்தாலும் ஆண்டவனிடத்தில் அதைக்காண்பான். அதாவது அதன் கூலியை—பிரதிப்பிரயோசனத்தைப் பெற்றுக் கொள்வான்."

ஒருவன் தன் வீட்டில் தொழுதுகொள்வதானது ஒரு தொழுகைக்குத்தான் சமமாகுமென்றும் தெருப்பள்ளியில் தொழுதுக் கொள்வது 25 தொழுகைக்கு ஒப்பாகுமென்றும், ஊர் பள்ளியில் தொழுதுகொள்வது 500 தொழுகைக்கு ஈடாகுமென்றும் மஸ்ஜிதெ அக்ஸாவில் தொழுதுகொள்வது 5 ஆயிரம் தொழுகைக்கு சமானமாகுமென்றும், மஸ்ஜிதே நபவிய்யில் தொழுதுகொள்வதானது 50-ஆயிரம் தொழுகைக்குரிய புண்ணியம் கிட்டும் என்றும், பைத்துல்லாஹ் ஷரீபில் ஒருமுறை தொழுதுகொள்வதால் ஒரு லக்ஷம்முறை தொழுகையை நிறைவேற்றிய பலன் கிடைக்குமென்றும் நாயகம் (ஸல்.) அவர்கள் கூறியுள்ளார்கள். (அதாவது மிகுதமான நன்மைகள் அளிக்கப்படுகிறதென்பதாகும்).

கப்ர்கள், ஸ்நான அறைகள், மலஜலபாதை செய்யுமிடங்கள், மாமிசம் அறுக்கப்படும் ஸ்தலங்கள், மாடு, குதிரை, ஒட்டகம் முதலியவைகள் கட்டப்படும் இடங்கள் முதலியவைகளைத் தவிர மற்ற யாவற்று பூமியும் தொழுவதற்குரிய ஸ்தலங்களாகும்.

"பள்ளிவாசல்களை சுத்தமாகவும் விர்த்தியாகவும் நறுமணங்களால் சுகந்த வாசனையுடையதாகவும் வைத்துக் கொள்ளுங்கள்" என நாயகம் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

பள்ளியில் செய்யக்கூடாதவைகள்.

நாயகம் (ஸல்.) அவர்கள் கூறிய திருவசனங்கள்:—

(1) வருங்காலத்தில் ஜனங்கள் பள்ளிவாசலில்கூடி உலகவிவகார சம்பந்தமாகப் பேசிக்கொண்டிருப்பர்; அப்போது நீங்கள் அவர்களுடனே இருக்கவேண்டாம்.

(2) "ஏதோ ஒரு பொருள் களவுபோய் விட்டதென்று ஒருவர் பள்ளிவாசலிற்குள் தேடிக்கொண்டிருப்பதை நீங்கள் பார்த்தால் ஆண்டவன் அப்பொருளை அவருக்கு திருப்பி அளிக்காதிருக்கவேண்டும் எனக்கூறல்வேண்டும். ஏனெனில் பள்ளிவாசலானது லேவாதேவி செய்வதற்காகவும் காணாமற்போன வஸ்துவை அங்கு பிரஸ்தாபிப்பதற்காகவும் இன்னும் இவைபோன்ற நடவடிக்கைகளுக்காகவும் ஏற்பட்டிருக்கவில்லை.

(3) பள்ளியினுள் பழி வாங்குவதும் தகாது.

(4) பள்ளிவாசலில் எச்சிலை உமிழ்வதும் பாவமாகும்.

"கியாமத் நாளுக்குரிய அடையாளங்களில் சில குறிகளாவன:—மனிதர்கள் பள்ளியிலிருந்து பெருமை பாராட்டுவார்கள். அதாவது—இன்ன பள்ளியை என்னுடைய இன்ன சொந்தக்காரர் கட்டினார். இன்ன பள்ளியை யான் கட்டினேன் என்று கூறுவார்கள். பெருமை, கியாதி, முகஸ்துதி இவைகளை விரும்பி அநேகர் பள்ளிவாசல் கட்டுவதுண்டு.

"பள்ளிவாசல்களெல்லாம் ஆண்டவனை ஸ்தோத்திரஞ்செய்வதற்காகவே கட்டப்படுகின்றன; அவைகளிலிருந்து ஆண்டவனல்லாதவற்றைக்குறித்து தியானம் பண்ணுவதற்கு நம்மார்க்கத்தில் இடமில்லை."

தற்காலத்தில் பள்ளிவாசல்களில் அனுசரிக்கவேண்டிய ஒழுக்கம் மரியாதைகளையும் அதற்குச் செய்யவேண்டிய கடமைகளையும் ஒருபுரம் ஒதுக்கி வைத்துவிட்டு பல பெரியார்களையும் பீர்களையும் துதி செய்துகொண்டிருப்பதற்காக பள்ளியை உபயோகிக்கின்றனர். பள்ளி வாசல்களில் இருந்து கொண்டு.

உதவிசெய்புங்கள், உதவி செய்யுங்கள். துன்பத்தினையிலிருந்து விடுதலை செய்யுங்கள். தீனிலும் துன்யாவிலும் அரசனைச் செய்யுங்கள் யாஷெய்கு அப்துல் காதிறே.

எனவும் இன்னும் இவைபோன்ற பற்பல கவிகளைப் படித்துக்கொண்டு மிருக்கின்றர். இவ்வாறு கூறுவதினால் அவர்கள் ஆண்டவனுக்கு இணைவைத்த பாவத்திற்கு ஆளாக மாட்டார்களோ? குத்துபுல் அக்தாப் ஹஸ்ரத் அப்துல்காதிர் ஜீலானி அவர்கள், "ஹிருதயத்தை தௌஹீதின்மீது நிலை நாட்டும்படிக்கு எவ்வளவோ போதனைகள் செய்

திருக்கின்றூர்கள். "ஏ! மகனே உன் காலிலுள்ள மிதியடியின் வார் அறுந்து போயினுங் கூட ஆண்டவனிடத்திலேயே அதைப்பற்றி நீ கேட்கவேண்டும். நம்முரீதின்களில் அநேகர் தகாதகாரியங்களை எல்லாம் தலைமேல் போட்டு இறைவனின் கோபத்திற்காளாகி இருக்கின்றனர். என்று அம்மகான் அவர்களே கூறியிருக்கின்றூர்கள். வேண்டுகோளை நிறைவேற்றும்படி ஆண்டவனிடத்திலேயேயன்றி வேறு யாரிடத்திலும் முகம் நோக்குவது ஷிர்க்காகும்.

"நகரங்களிலுள்ள வீடுகளில் ஆண்டவனுக்கு அதிகப் பிரியமான வீடானது அவர்களின் பள்ளிவாசலாக இருக்கும்" என்று நாயகம் (ஸல்) அவர்கள் கூறி இருக்கின்றூர்கள். ஆகவே உத்தமர்காள்! அல்லாஹ்வின் பள்ளி வாசல்களில் செய்யவேண்டிய கடமைகளை சரிவரச் செய்து வருவதில் மிக்க கவனம் வைக்கவேண்டியது. அவற்றின் மீதே உங்களுக்கு அதிக விருப்பமும் அன்பும் பக்தியும் இருக்கவேண்டும். பள்ளியானது மூமின்களுக்கு அமைதியும் சாந்தியும் அளிக்கக்கூடியதாய் இருப்பதினல், அப்பள்ளியை ஆண்டவனது தியானங்களாலும் தொழுகையாலும் அலங்கரித்து சிறந்து விளங்குமாறு முயற்சி செய்வீர்களாக.

பெண் கல்வி.

உலகத்தின் கண்காணப்படும் மனிதசமூகம் நாளுக்குநாள் முன்னேற்ற மடைந்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு சமூகமும் படிப்படியாக சீர்திருத்தம் பெற்று உயர்ந்த நிலைமைக்குச் சென்று புகழுடன் விளங்குகின்றது. தம் உண்மை நிலையினைப்பற்றி எழுதியும், பிரசாரஞ்செய்தும், முன்னேற்றத்திற்கு அவசியமான திட்டங்களையும் முறைகளையும் தீவிரமாகக் கையாண்டு வருகின்றது. அன்றியும் கல்வி ஞானத்தாலும் ஆராய்ச்சியாலும், உயர்ந்த நோக்கங்களாலும் பல துறைகளில் முன்னணிக்கு வந்து தம்மினும் கீழ்தரத்திலுள்ள சமூகத்தை அடிமைப் படுத்தி அதன் வீழ்ச்சிக்கும் அழிவுக்கும் வேலைசெய்துக்கொண்டிருப்பதை நாம் காண்கின்றோம். ஆகவே கல்வியின் பல்வேறு துறைகளிலும் மிகுந்த சிரத்தை எடுத்து அறிவை விசாலமாக்கி கைத்தொழிலையும் பொருளாதாரத்தையும் அபிவிருத்திசெய்வதின்காரணமாகவே ஒரு சமூகம் முன்னேற்ற மடையக்கூடும் என்பதை கூரிய யோசனையும் நிதானபுத்தியும் உடைய எந்த மனிதனும் எளிதில் அறியக் கிடக்கின்றது.

ஆனல் நம் முஸ்லிம் சமூகம்மட்டும் இதற்கு நேர் விரோதமாக யிருப்பதைக் காணலாம். இஸ்லாமிய சகோதிரர்களின் நிலைமையானது எடுத்துக் கூறவியலாத அத்துணை தாழ்ந்த ஸ்திதிக்கு வந்திருக்கிறது. மற்ற சமூகங்கள் தங்கள் முன்னேற்றத்திற்காகவேண்டி தற்கால நாகரீகத்திற் கேற்ப நவீனமுறைகளையும் கொள்கைகளையும் கையாளும்விஷயத்தில் எத்துணைக் கெத்துணை முயற்சிசெய்து முன்னேறிக் கொண்டிருக்கின்றனவோ அத்துணைக்கத்துணை நம் சமூகம் மூடநம்பிக்கையையும் பிற்போக்கையும் விசாலப்படுத்தும் விஷயத்தில்மட்டும் முயற்சி செய்து பின்னிடைந்துங்கொண்டிருக்கிறது. உண்மையில் நம் முஸ்லிம் நண்பர்கள் நம் சமூகம் சீர்திருத்தமுற்று நன்னிலைமைக்கு வர என்னென்ன முறைகளையும் திட்டங்களையும் மேற்கொள்ள வேண்டுமென யோசனை செய்ய முடியாமலே இருக்கின்றனர். இல்லை, தம் சமூகத்தைப்பற்றிய கவலையே இல்லை என்று தான் சொல்லவேண்டும். மற்ற சமூகங்கள் நாளுக்குநாள் முன்னேறிக்கொண்டு போவதை நேரிற் கண்டுங்கூட இஸ்லாமிய சகோதரர்களுக்கு உணர்வு வராமலிருப்பதைக் கொண்டு யார்தான் வருந்தாமலிருக்க முடியும். ஒவ்வொரு பிற சமூகமும் நம் சமூகத்தை மிக இகழ்ச்சியாகப் பாவித்து எள்ளி நகையாடுவதுடன் நம் சமூக வீழ்ச்சிக்கும் இடைவிடாது பாடுபட்டுவருகின்றன. காரணம் யாதெனில் பிறசமூகத்தவருள் காணப்படுகிற ஆணும் பெண்ணும் 100-க்கு 90 வீதம் கல்விகற்றவர்களாய்க் காணப்படுகின்றனர். ஆனல் நம்முஸ்லிம் சகோதரர்களில் 100-க்கு

95 விகிதம் கல்வி வாசனை யற்றவர்களாய் இருக்கின்றனர். போதுமான கல்வி இல்லாக் குறையினாலேயே ஒவ்வொரு நேரமும் நாம் க்ஷீண திசையைநோக்கிச் சென்று கொண்டிருக்கின்றோம்.

எனவே நம்மவருள் கல்வி கற்கும் பேர் வழிகளின் தொகையை அதிகப்படுத்துவதற்கு நாம் முக்கியமாக உழைத்து வரவேண்டும். பின்னர் கல்வியில் வெவ்வேறு ஸ்தாபனங்களிலும் நம் முஸ்லிம்கள் கல்வி பயின்று தேர்ச்சியுறும்படிக்கு உதவியும் வசதியும் செய்வதில் மிகுந்த அக்கரையும் ஊக்கமும் காட்டவேண்டும். ஏனெனில் மனிதனுக்கு ஊண் உடை எவ்வளவு அவசியமோ அவ்வண்ணம் கல்வியும் அறிவும் இன்றியமையாததாய் இருக்கின்றது. கல்வி இல்லை எனில் இக்காலத்தில் முன்னேறும் மார்க்கம் ஒருக்காலும் உண்டாகப் போவதில்லை. சீர்திருத்தமும் முன்னேற்றமும் பெற யோக்யதையுள்ள எந்த மதமும் சமூகமும் கல்வி அபிவிருத்தி செய்யவேண்டிய கடமை உடையதாய் இருக்கின்றது. நம் சமூகத்தின் நலனையும் முன்னேற்றத்தையுங் கருதி நம் முழு நம்பிக்கையும் எண்ணமும் பூரணமாக நிறைவேறுதற்கு நாம் கல்வியை எதிர்பார்க்க வேண்டியவர்களாகவே இருக்கின்றோம். கல்வியை அபிவிருத்திக்குக் கொண்டுவருவோமாகில் நம்மின் முன்னேற்றத்திற்குரிய வாசல் தானாகவே திறக்கப்பட்டுப் போம் என்பது திண்ணம்.

ஆண் பெண் ஒவ்வொருவர்மீதும் கல்வி கற்கவேண்டியது கடமையாகும். நம் முஸ்லிம் சமூகத்தில் ஆண்வகுப்பார் சிறிது கல்வி கற்றவர்களாய்க் காணப்பட்ட போதிலும் கல்வி கற்றுள்ள மாதர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருக்கிறது. ஆனதால் முஸ்லிம் சகோதரர்கள் பெண்களுக்குக் கல்வி அளிக்கும் விஷயத்தில் மிகுந்த கவனஞ்செலுத்தவேண்டும். மாதர்கள் மார்க்கத்தின் சட்ட திட்டங்களை நன்கு அறியவேண்டியும் மதவிஷயமாக ஏற்படும் எவ்வித சந்தேகங்களையும் இலகுவில் தெரிந்து கொள்வதற்கும் அவர்கட்கு போதிய கல்வி புகட்டவேண்டும். பெற்றோர்கள் தங்கள் பெண் குழந்தைகளுக்கு குர்ஆன் ஷரீபும் மார்க்கத்தை விளங்கிக் கொள்வதற்குள்ள கல்வி போதனையும் செய்வதற்குக் கடமைப் பட்டிருக்கின்றார்கள். பெற்றோருக்கு தகுந்த மார்க்க ஞானம் இல்லை எனின் கல்வி கற்றுள்ள பெண்களைக் கொண்டோ அல்லது ஆண்களைக் கொண்டோ கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்யவேண்டும். பெண்களுக்கு குர்ஆன் ஷரீப், மார்க்க சம்மந்தமான கல்வி முதலியவைகளை போதித்து அறிவு வளரும் விஷயத்தில் தாய்தந்தையர் தடைசெய்யவோ அல்லது அலக்ஷியமாக இருக்கவோ செய்தால், அவர்கள் ஆண்டவனின் கோபத்திற் காளாவார்கள் என்பதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை. அப்பெண்களின் ஜவாப்தாரித்துவம் பெற்றோர்களையே சாரும்.

ஆகவே பெற்றோர்கள் தங்கள் பெண்குழந்தைகள் கல்விகற்பதைத்தடுக்கவோ அல்லது அசிரத்தையோ டிருக்கவோ கூடாது. சிறுமிகள் படிக்கும் விஷயத்தில் சோம்பலுடையவர்களாய்க் காணப்பட்டால் அடித்து புத்தி கற்பித்து கல்வி புகட்டுதற்கு பெற்றோருக்கு முழு சுதந்திரமுண்டு. இக்காலத்தில் தொழுகையைக்கூட சரியாக நிறைவேற்றத் தெரியாத அநேக மாதர்கள் காணப்படுகின்றனர். இவர்களின் நிலைமையைப்பார்த்து யார்தான் கவலைகொள்ளாமல் இருக்கமுடியும். எவ்விதமாகத் தொழவேண்டும்? தொழுகையின் மற்ற கடமைகள் யாது? தொழுவதால் ஏற்படும் பலன்கள் என்ன? என்பனபோன்ற விபரங்கள் ஒன்றும் தெரியாத அநேக பெண்மணிகள் இக்காலத்தில் காணப்படுகின்றனர். இஸ்லாம் மதத்தில் பிறந்து இஸ்லாத்தைப் பற்றி யாதொன்றும் தெரியாதிருந்தால் இதைப்போல் வெட்கக்கேடு வேறொன்றுங் கிடையாது. "என்னை வணங்குவதற் கன்றி எந்த மனுவையும் ஜின்னையும் யான் படைக்கவில்லை." என்று ஆண்டவன் கூறியதை நாம் மறந்தவர்களாய் இருக்கின்றோம். ஆகையால் இந்த நிமிஷத்திலிருந்தே நாம் அனைவரும் மறதியையும் அசிரத்தையையும் விடுத்துப் பெண்மணிகளுக்கு தக்க முறையில் கல்வி கற்பிக்க முன்வருவோமாக.

இஸ்லாத்தின் மேன்மை.

இத்தரணியின்கண் இதுகாலே நிலவியுள்ள சகல மதங்களிலும் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டதும், மனித கோடிகளின் இயற்கைக்கும் செயற்கைக்கும் ஒத்தமைந்ததுமான சன்மார்க்கம் நந்தீனுல் இஸ்லாமே யாகும். "இஸ்லாம் என்ருல் இறைவனுக்கு முற்றும் அடிபணிந்து சிரம்பணிந்தொழுகல் என்பது கருத்தாகும். சன்மார்க்க ஷரீஅத்தாசாரப்படி "இஸ்லாம்" என்ருல், (1) வணக்கத்துக் குரியவன் அல்லாஹ்வைத் தவிர்த்து வேறுயாருமில்லை-முஹம்மத்(ஸல்) அல்லாஉடைய திருத் தூதராவார்கள்" என்று நிர்ணயங்கொள்ளல், (2) தொழுகையை தவருதுநிறைவேற்றிவருதல், (3) ஜக்காத் கொடுத்தல், (4) றமலான் மாதம் நோன்பு நோற்றல்; (5) சக்தியாற்றலுடையவர் மக்காவுக்குச் சென்று ஹஜ்ஜு நிறைவேற்றல் ஆகிய இவ்வைம்பெருங்காரியங்களை அனுஷ்டித்து வருவதாகும்.

மேற்கூறப் பெற்றுள்ள மார்க்கக்கடமைமைகளை அனுஷ்டித்து வருபவனே உண்மை முஸ்லிமாவான். இஸ்லாம் என்னும் பதத்தின் அருத்தம் சாதாரணமாயிருப்பினும் அது ஆழ்ந்த கருத்தமைந்த உயர்நலம் பெற்றதாகும்.

இஸ்லாம் என்பது மனிதகோடிகளின் கதிமோக்ஷத்திற்காகவென்று இறைவனலருளிப் பெற்ற மாபெரும் பாக்கியமெனலாம். அது செழித்து வளர்ந்துப் பூத்துக்காய்த்துப் பழுத்து பரிபூர்ண நிலையிலுள்ள ஒரு விருக்ஷத்துக்கு ஒப்பானதாகும். இவ்விருக்ஷத்தின் படர்ந்தடர்ந்த அருள் நிழலானது சர்வ லோகமாந்தருக்கும் ஆன்மார்த்த சுகக்ஷேம வாழ்வினை யளிப்பனவாகும். எனவே இஸ்லாத்தின் அரும்பெரும் நிழலிற்ருன் மனித வாழ்விற்கு விமோசனமிருக்கின்றது.

இத்தரணியின்கண் உண்மையாக சத்தியம் நிலவிய சன்மார்க்கமாயிருப்பது இஸ்லாமே யாமென்பதில் ஐயமில்லை. மனிதகோடிகள் இத்தரணியில் பரிபக்குவம்பெற்று பரத்தில் விமோசனமெய்தற்குரிய சீரானபாதை இஸ்லாமேயாகும். மனிதனின் முன்னேற்ற நலத்துக்குரிய உண்மையான சாதனம் இஸ்லாத்தில்தானிருக்கிறது. இவ்வுலகில் சீரிய ஒழுக்கங்களையும், அழகிய நற்குணங்களையும் போதிக்கும் பரிபூரண மாண்பு மிக்கமதம் இஸ்லாமேயாகும். மனிதகோடிகள்வதியும் இவ் வகிலத்தின்கண் நாகரிகம், நல்லொழுக்கம், அறிவுஞானம், உலகவியல், சமுதாயவாழ்வு முதலிய சகலவித உண்மையருட் பாக்கியங்களை முதன் முதலாய் தோற்றுவித்த மதம் இஸ்லாமேயாகும்

இஸ்லாமெனும் நம்முயர் திருமதம் இத்தாரணியோர்க்கு இனிதுபோதித்துள்ள தூய பரிசுத்த சட்டதிட்ட நல்லாசாரங்களில் பத்தில் ஒருபங்கு சிறப்புக்கூட வேறெப் பிற சமயங்களிலும் காணக்கிடைக்கவே மாட்டாது. இவ்வுலகின்கண் சீரிய சுபாவத்திற்கும், மானுஷ்ய இயற்கைக்கும் மிக மிக ஒத்தமைந்ததாயிருப்பது இஸ்லாமதம் ஒன்றேயல்லாது வேறெதுவும் நிகராகமாட்டாதென்பது திண்ணம். மேலும் உலக சிருஷ்டி கர்த்தனுகிய ஆண்டவன் தனது அடியார்களின் விமோசனத்துக்கும் நல்வழிக்குமென்று அருளிச்செய்துள்ள அனுகூலமான சட்ட திட்டங்களாய் சென்ற பதின் மூன்றரை நூற்றுண்டுகளாக இத் தரணியில் இனிது ஓங்கிவளர்ந்து யாண்டும் வியாபித்து சிரந்துள்ள சத்திய சன்மார்க்காசாரமானது இஸ்லாமேயாகும். இவ்விஸ்லாத்தின் சட்ட திட்டங்கள் தூய்மையும் விழுமியதத்துவமும் நிலவியதாயிருப்பதோடு, இஸ்லாத்தின் கண் மிகப்பிரயோஜனமான கலைஞானங்கள் மிக மிக மலிந்து சிறந்து நிலவியிருக்கின்றன. இதற்கு இணைவேறெம்மார்க்கத்திலுங் கிடையாதென்பது திண்ணமாகும்.

இஸ்லாமியத் தன்மையில் அமைந் திருப்பது போன்ற உயர்வு சிறப்பு அனுகூல நலன் ஆகியவற்றிற்கு நிகர் வேறு எம்மதத்தின் தன்மையிலும் எடுத்துக் காட்டுதற்கியலாதென்பது உறுதி. இஸ்லாம் மதம் இவ்வுலகின்கண் தோன்றிய சிறிது காலத்துக்குள் மிகமிகத் துரிதமாய்ப் பரவி வியாபித்து, சர்வலோகத்திலும் தனதருளாதீனத்தை

நிலைநிறுத்திக்கொண்டதுபோல் வேறெம்மதமும் இத்தரணியில் அத்துணை துரிதமான ஜயம் பெற்றது கிடையாது.

இஸ்லாம் மதம் உண்மையும் சத்தியமுமான தென்பதற்கு இத்தரணியில் மிகப் பிரசித்தமாயுள்ள இருபெரும் ஆதாரங்கள் கூறலாம். ஒன்று இஸ்லாத்திற் பலதேயங்களிலும் கிடைத்த வெற்றி, மற்றொன்று இஸ்லாம் மதம் சுயமே பரவி வியாபித்த மாண்பு. எனவே நியாய சுபாவமும், நல்லறிவுமுள்ள ஒருவர் மேற்கூறிய இருசான்று களைப் பற்றி சிறிது சிந்தித்துப்பார்ப்பாராயின் இஸ்லாத்தின் சத்தியத்தையும், உண்மையையும் அன்னவர் ஒப்புக்கொள்ளா திருக்கமுடியாது.

இரு ஆதாரங்கள்

1. இஸ்லாத்துக்குக் கிடைத்த தேசவெற்றிகள் பண்டைப்போது சில ஆண்டுகளுக்குள் வெகு துரிதத்தில் கிடைத்தனவாம். இந்த வெற்றிகளின் காரணமாய் இஸ்லாமானது தனது சீர்பெரும் ஆசாரம், கல்வி, நாகரிகம் ஆகியவற்றினை உலகின் நாலுபக்கலும் இனி பரவச் செய்துவிட்டது.

2. இஸ்லாம் பரவிய வரலாற்றினை கூறுமிடத்து அது சூரியனுக்கொப்ப மிகமிக துரிதத்தில் கதிரொளிபரப்பி அஞ்ஞான அந்தகாரங்களைப் போக்கி உலகில் யாண்டும் சன்மார்க்க சத்தியப்பிரகாசத்தை நிலவச்செய்த தெனக் கூறலாம். இஸ்லாத்தில் நிரம்பியுள்ள தெய்வீக சக்தியின் காரணமாய் அதன் சத்தியமும் நேர்மையும் இத்தரணியின்கண் மின்சாரசக்தியேபோன்று அத்துணை வேகமாய்ப் பரவி, ஒளிபரப்பி, வியாபித்து, மனிதகோடிகளின் உள்ளங்களை ஈர்ந்துகொண்டன. எனவேதான் புராதன அஞ்ஞானத்தால் கருகி இறுகிப் போயிருந்த காபிர்களின் உள்ளங்கள்கூட இஸ்லாத்தினல் மெஞ்ஞானம்பெற்று இளகி ஈமான்மயமாய் விளங்கிற்று.

இஸ்லாமும் விஞ்ஞானமும்.

தற்கால உலகில் நவீன நாகரிக "ஸைன்ஸ்" எனப்படும் விஞ்ஞானமானது பெரியதோர் மாறுதலை யுண்டு பண்ணியிருக்கின்றது. விஞ்ஞான ஆராய்ச்சியினல் கண்டு பிடிக்கப்படும் விந்தையான பொருட்களும், ஆச்சரியகரமானமுறைகளும் மனிதர்களின் உள்ளம் நேத்திரம் இவைகளை கவர்கின்றன. அறிவிற்குப் பேராச்சரியத்தை விளைவிக்கும் விஞ்ஞான சக்தியானது அனுதினமும் முன்னேற்றமடைந்து உலகத்தோரை பற்பல துறையிலும் மாறுதலடையச் செய்கின்றது. அப்படிப்பட்ட "சைன்ஸ்" ஆதிக்கத்தின் காரணமாக உலகின் பல மதங்கள் அசைவுற்றுநலிந்து வீழ்ச்சியடைகின்றன.

உலக நிலைகளையும் இதர மதாசார வாழ்க்கைகளையும் மாறுதல்களுக்குட் படுத்திவந்த "சைன்ஸ்" என்னும் விஞ்ஞான ஆதிக்கமானது இஸ்லாமிய சன்மார்க்கத்தின் முன் பணிந்து தாழ்ந்துவிட நேரிட்டு விட்டது. சுருங்கக் கூறுமிடத்து அந்த சைன்ஸ் ஞானமே இஸ்லாத்தைப் பரிசீலனை செய்து இது சத்தியமும் உண்மையும் நிறைந்த தெய்வீக மதம் என்று சாக்ஷியம் அளித்து விட்டதெனலாம். ஏனெனின் இஸ்லாம் மதமானது யுக்திக்கும் புத்திக்கும், இயற்கைக்கும் இனிது ஒத்தமைந்த பரிபூரண சன்மார்க்கமாகும். ஆகவே தான் இஸ்லாம் மதமானது இந் நாகரிக காலத்திலும் "சைன்ஸ்" என்னும் புத்தி இயக்கத்தையும் மிகைத்து மேன்மை பெற்று நிலவி ஓங்கி வளர்ந்து கொண்டேயிருக்கின்றது. எனவே இஸ்லாமே சத்திய சன்மார்க்கமாகும்.

இந் நவீன கால "சைன்ஸ்" ஞானமானது உலகில் பல மாறுதல்களை உண்டு பண்ணியதோடு இஸ்லாம் ஒன்றைத் தவிர்த்து ஏனைய எல்லா பிறமதங்களையும் நிலைகுலையச் செய்து வீணுக்கிவிட்டது என்று கூறுவது மிகையாகா. (இதற்குதாரணம், தற்கால இஸ்லாம் மட்டும் உலக முற்றும் ஓங்கி வளர்ந்து வியாபிப்பதையும், இதர மதங்கள் மக்களால் கைவிடப்பட்டு நலிந்தொழிந்து வருவதையும் கொள்ளலாம்.) மேலும் இஸ்லாம் மதமானது தனது அரிய வசீகரண சக்தியிலும், திவ்வியத்தன்மையினுலும் நூற்றுக்கணக்கான சைன்ஸுக்கலாவல்லுனர்களையும், இயற்கைக் கலாசாஸ்திரிகளையும், நாகரிக வாதிகளையும் தன் பக்கல் ஈர்ந்து கொண்டதுடன், தனதினிய போதனைத் தத்துவார்த்தங்களினுல் பற்பல விஞ்ஞானிகளை இஸ்லாத்தைத் தழுவி முஸ்லிமாகத்திகழவும் செய்து விட்டது. உதாரணமாய், இக் காலை நாகரீக சாலிகளெனவும் சைன்ஸுக் காரர்களெனவுங் கூறப்படும் ஐரோப்பிய நாட்டார் பல்லோர் இஸ்லாத்

தைத் தழுவி முஸ்லிம்களாகி வருவதைக் காணலாம்.

அங்ஙனம் மேனாட்டினர் இஸ்லாம் மதத்தைத் தழுவிக்கொண்டமை, பிரசாரகர்களின் பிரயத்தினத்தாலோ, போதகர்களின் தந்திரத்தாலோ வன்று. ஆனால், இஸ்லாத்தில் சிறந்து விளங்கும் அந்தரங்க பகிரங் நற்போதங்களும், தத்துவங்களும், புனித ஆசாரங்களும், தெய்வீக நலன்களுமே அந்நாகரிக மேனாட்டாரை வசியப்படுத்தி இஸ்லாமிய மக்களாய் செய்தன.

இயற்கைத் தத்துவசாஸ்திர அறிஞர்களிற் பல்லோர் இஸ்லாத்திற் சேர்ந்து பக்தர்களானதற்கு இச்சன்மார்க்கத்திலுள்ள சீரிய தத்துவங்களும், அவ்வறிஞர்களுடைய புத்திக்கும் யுத்திக்கும் இஸ்லாத்தின் ஒவ்வோர் அம்சமும் ஒத்தமைந்து நிலவியுள்ள சிறப்புக்களுமே காரணங்களாகும். அங்ஙனம் தம் வாணாள் முழுமையும் இயற்கைத்தத்துவ ஆராய்ச்சிகளிலேயே கழித்து மகா ஆராய்ச்சி புரிந்துள்ள அறிஞர்கள் நன்கு ஆராய்ந்து பரிசீலனைசெய்து பரிசுத்த இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டிருப்பதை நோக்குமிடத்து, இஸ்லாத்தின் சத்தியமும், அதன் ஆழ்ந்த அருந்தத்துவங்களும், தெய்வீகத்தன்மையும் இஸ்லாமே உண்மை மதம் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கச்செய்துவிட்டது. இஸ்லாமே சத்தியமதம், இதுவே இறைவனால் ஒப்புக்கொள்ளப்பட்ட சன்மார்க்கம், இதுவே புத்திசாலிகளின் புத்திக்குவந்த மதம், இதுவே இயற்கையோடியைந்த நன்மதம் என்பன நன்கு விளங்கி விட்டதன்றோ?

இஸ்லாத்தின் ஜோதி.

இத்தரணியின்கண் பல திறப்பட்ட மதங்களிருந்தபோதிலும் எல்லாவிதப் பெருமையும் மாண்பும் வாய்ந்தது இஸ்லாமேயாகும். இஸ்லாம் மதப்போதனைச் சட்டதிட்டங்கள் தூயதாயும் அனுகூலமானதாயு மிருப்பதனாற்றான் அதன் ஞானப்பிரகாசம் இத்தரணி யெங்கும் ஜ்வலித்துக்கொண்டிருக்கின்றது. இவ்வுலகின்கன் பண்டைப்போது மக்கள் மனத்தே சூழ்ந்திருந்த அஞ்ஞான இருளைப்போக்கி மெஞ்ஞான போதனையால் பிரகாசிக்கச்செய்தது இஸ்லாத்தின் அரும் ஜோதியேயாகும்.

இக்காலை இவ்வுலகின்பால் இஸ்லாத்தின் ஒளிப்பரவாத (அதாவது முஸ்லிம்களில்லாத) ஏதாவது ஒரு நாட்டைக்காண முடியாது. சர்வதேசங்களின் சகல நாடுகளின் மூலை முடுக்குகளிலெல்லாம் இஸ்லாம் மதஜோதி நிலவி சுடர்வீசி வருவதைக் காணலாம். இஸ்லாமிய திருமொழிகளாகிய தவ்ஹீதுக் கலிமாவும், பாங்கும் முழங்காத நாடோ நகரமோ இத்தரணியில் ஒன்றுங்கிடையாதென்பது திண்ணம். யாண்டு நோக்கினும் இஸ்லாமியஜோதி இலங்குவதையும், ஏகத்துவவோசை எதிரொலிப் புரிவதையும் இற்றைநாளில் நாம் இனிது தெரிந்து கொள்கின்றோம். இதற்காக நாம் ஆண்டவனைத் துதிப்போக.

இஸ்லாத்தின் தவ்ஹீது.

இஸ்லாமியத் தூயகொள்கைகளில் தவ்ஹீது (ஏகதெய்வத்துவம்) தலை சிறந்ததொன்றாகும். இது இஸ்லாத்தின் முதல் சிந்தாந்தமும், அவசியக் கொள்கையுமாகும். உண்மையில் தவ்ஹீதே இஸ்லாத்தின் உயிர் எனலாம். இஸ்லாத்தின் இம் முக்கியக்கொள்கை இறைவனை ஒர்மைப்படுத்துவதாகும். ஏக பரம்பொருளாகிய ஆண்டவன் ஒரே ஒருவனவன். இச்சிந்தாந்தமே புத்திக்கும் யுக்திக்கும் மிகப் பொருந்தியதாகும். தவ்ஹீதுக் கொள்கையானது இஸ்லாம் மதம் ஒன்றில் மட்டுந்தான் தனிச்சிறப்புடையதாயிருந்து வருகின்றது. இவ்வரும் பெருஞ்சித்தாந்தம் வேறெம் மதத்திலுங் கிடையாதெனலாம். ஹிந்துமத பல தெய்வவணக்கமும், கிறிஸ்துவ மார்க்கத்து "திரியேகத்துவ" விதண்டா வாதமும் நிராகரித்துத் தள்ளத்தக்கனவாகும்.

இஸ்லாத்தின் போதகர்

ஏக தெய்வத்துவ பிரசாரத்துக்காகவென்று லோக சிருஷ்டிகர்த்தனை இறைவன் அவ்வப்போது தம் அடியார்களில் சிரேஷ்டர்களான நபிமார்களையும், ரஸூல்மார்களையும் அனுப்பிவைத்து வந்தான். அங்ஙனம் தோன்றிய திருத்தூதர்கள் தீர்க்கதரிசிகள் முதலானோர் ஏக தெய்வ வணக்கத்தையே உலக மக்களுக்கு எடுத்துப் போதித்துச் சென்றார்கள்.

ஏக தெய்வத்துவ நன்னம்பிக்கையாகிய ஈமானும் நற்குண நல்லொழுக்க கட்டுப்பா

டாகிய இஸ்லாமிய ஷரீஅத்தும் நம் சன்மார்க்கத்தின் இருபெரும் அடிப்படைகளாகும். இவ்விரு அரிய அம்சங்கள் அமைந்தில்லாத மார்க்கம் எத்தகையதாயிருப்பினும் அது உண்மை மதமாகாது. அப்படிப்பட்ட நிறை பூர்ணமில்லா மதங்களைப் பின்பற்றுவது மனிதர்களுடைய கடமையாகா. எனவே தான், உலகத்து ஏனைய மதங்களைவிட மேற்கூறிய முக்கிய அம்சங்கள் நிரப்பூர்ணமாக அமைந்துள்ள இஸ்லாம் மதம் மிகச் சிறந்ததாய் விளங்குகின்றது.

(இஸ்லாத்தின் சர்வபோதனைகளும் நிரம்பப்பெற்ற பரிபூரண கிரந்தம் குர்ஆன் ஷரீபாகும். அந்த குர்ஆன் ஷரீபே மனிதவாழ்க்கைக்குரிய சகல போதனைகளையும் தன்னகத்தே நிரம்பப்பெற்றதாய் நிலவுகிறது.)

எல்லாவிதச் சிறப்புகளும் நிரைந்ததாய் விளங்கும் இஸ்லாம் மதாசாரமே மனித வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும். இஸ்லாத்தையே அங்கீகரித்து முஸ்லிம்களாகயிருக்கவேண்டியதே மனிதர்கட்கு ஆண்டவனிட்ட கட்டளையாகும். அங்ஙனமிருக்க இஸ்லாத்தைக் கைவிட்டு மனம்போனவாறு இதர சமயங்களைப் பின்பற்றி யொழுகல் ஏக பராபரனாகிய ஆண்டவனுக்கு மாறுசெய்வதும், அவனளித்த அருட்பாக்கியத்தை உதாசீனஞ் செய்வது மாகின்றது.

"எவனொருவன் இஸ்லாமல்லாத (ஏனைய) மார்க்கத்தைப் பின்பற்றுவானாயின் அது அவனிடமிருந்து (இறைவனால்) ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது; அப்படிப்பட்டவன் இறுதி (கியாமத்) நாளில் மிக நஷ்டவாளிகளில் சேர்ந்தவனாவான்."

ஆகவே இஸ்லாத்தின் மாபெருஞ் சிறந்த அம்சமாகிய தவ்ஹீதை மனத்தில் திடமாய் நிர்ணயங்கொண்டு அதன் முறைமைப்படி நடப்பதே பிரிதொருவர் கடமை யாகும். இஸ்லாத்தைச் சேர்ந்துள்ள நல்லடியார்கள் ஆன்மார்த்த பரி பக்குவமும், மனத்தூய்மையும், வாழ்க்கைச் சுத்தமும் பூண்டு உத்தமர்களாய் விளங்கச்செய்ய அருஞ்சாதனமாயிருப்பது ஏக ஆண்டவன்மீது கொள்ளும் திட நம்பிக்கையாகிய தவ்ஹீதேயாகும். எனவே தவ்ஹீதையே நாம் மனத்தில் உறுதியாய்க் கொண்டு, அவ்வாறே ஆண்டவனுக்கு முழுதுங் கட்டுப்பட்டு வணங்கி நல்வழிப் பெறுவோமாக.

நிரூபம்.

தர்பியத்துல் அத்பால் பீரஸதில் அஃமால்.

இச்சங்கத்தின் பொது மீட்டிங்கொன்று 12—12—31 சனிக்கிழமை மாலை 4-மணிக்கு சென்னை அங்கப்பன் தெருவு 239-வது நெம்பர் கட்டிடத்தில் கூடிற்று. ஆலீஜனாப் அல்ஹாஜ் வீ. ஹுசேன் சாஹிப் அவர்கள் தலைமை வகித்தார்கள். ஜனாப்களான C. H. ஷேக்முஹம்மத் சாஹிப், S M. செய்யித் முஹம்மத் ஆலிம்புலவர், M. முஹம்மத் இஸ்மாயில் சாஹிப், ஹாஜீ S. M. மௌலா முஹையித்தீன் ஆலிம் சாஹிப், ஹாஜீ. M. அப்துற்றஜாக் சாஹிப், ஹாஜீ M. அப்துற்றஹ்மான் சாஹிப், மௌலவீ A. R. அப்துர்றஹீம் சாஹிப், M. K. அஹ்மத் சாலிஹ் ஆலிம், பிரபு முஹம்மது மொய்தீன் தம்பி, C. A. அப்துஷ்ஷுகூர் சாஹிப் முதலியோர் விஜயஞ் செய்திருந்தனர்.

அடியிற்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறின:—

(1) இச்சங்கத்தின் ஸ்தாபகர் மகாகனம் மௌலானா மௌலவீ அல்ஹாஜ் கொளும்பு செய்யித் முஹம்மத் ஆலிம் அவர்களால் டிரஸ்ட்டிகளாக நியமிக்கப்பட்டிருந்த மகாகனம் ஹாஜீ M. ஜமால் முஹையித்தீன் ருவுத்தர், ஹாஜீ சி. கா. கோதர்முஹையித்தீன் ருவுத்தர், ஹாஜி C. ஹுசேன் சாஹிப், ஈ. அஹ்மத்மொய்தீன் மரைக்காயர், S. M. செய்யித் முஹம்மத் ஆலிம்புலவர் ஆகிய ஐவர்களில் காலஞ்சென்ற ஹாஜீ ஜமால் முஹையித்தீன் ருவுத்தர், ஹாஜீ சி. கா.

கோதர் முஹையித்தீன் ரூவுத்தர் இவ்விருவர்களுக்கு பதிலாக ஜனுப் M. முஹம்மத் இஸ்மாயீல் சாஹிப், ஜனுப் C. H. ஷேக் முஹம்மத் சாஹிப் இவ்விருவரும் டிரஸ்டிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

(2) மேலே குறிப்பிட்டுள்ள ஐந்து டிரஸ்டிகளில் ஜனுப் அல்ஹாஜ் C. ஹுசேன் சாஹிப் அவர்கள் சபாநாயகராகவும் ஜனுப் C. H. ஷேக் முஹம்மத் சாஹிப் காரியதரிசி & பொக்கிஷதாரராகவும் அடியிற் குறிப்பிட்டுள்ள 11 அங்கத்தினர்கள் ஆலோசனை சபை மெம்பர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

ஆலோசனை சபை அங்கத்தினர்கள்.

ஜனுப்களான (1) அல்ஹாஜ் S. M. மௌலானு முஹையித்தீன் ஆலிம் சாஹிப் (2) அல்ஹாஜ் M. அப்துற்றஜாக் சாஹிப் (3) அல்ஹாஜ் மௌலவீ S. A. முஹம்மத் அலீ சாஹிப், (4) அல்ஹாஜ், M. அப்துற்றஹ்மான் சாஹிப், (5) S. K. அஹ்மத் மீரான் சாஹிப் M.A. B.L., (6) மௌலவீ, A. R. அப்துற்றஹீம் சாஹிப், (7) M. S. முஹம்மத் களஞ்சியம் மரைக்காயர் லாண்டு லார்டு & ஹானரரி மாஜிஸ்டிரேட், (8) பிரபு முஹம்மத்மொய்தீன் தம்பீ, (9) M. K. அஹ்மத் சாலிஹ ஆலிம், (10) A. S. அமீர்பாக்ஷா சாஹிப், (11) C. A. அப்துஷ்ஷுகூர் சாஹிப்.

(3) சங்கத்தை இனி நடத்தவேண்டியதற்காக தயாரிக்கப்பெற்றுள்ள சட்டதிட்டங்கள் வாசிக்கப்பட்டு அங்கீகாரமாயின.

(4) சங்கத்தை 1860-ம் வருஷத்திய 21-வது ஆக்ட்படி ரிஜிஸ்டர் செய்து சட்டதிட்டங்களை அச்சிட்டு புஸ்தக ரூபமாக வெளிப்படுத்த வேண்டுமெனவும் முடிவுசெய்யப்பட்டது. தீர்மானத்திற்கேற்ப ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

ஹாஸ்யங்கள்.

(1) கப்பல் மாலுமி ஒருவன் சில சாராயப் புட்டிகளை சுங்கவரிகொடாமல் நகரத்திற்குக் கொண்டுபோக ஆவல்கொண்டான். அதற்காக கப்பலிலிருந்த மூர்க்கக்குணமுடைய ஒரு கொழுத்த பூனையைப்பிடித்து ஒருகைப்பெட்டிக்குள் அடைத்துமூடி கையில் எடுத்துக்கொண்டு கப்பலைவிட்டு இறங்கி நேரே வீதியை நோக்கிச்சென்றான். உடனே வாயலிலிருந்த சுங்க ஆபீஸர் அவனை நிற்கச்செய்த போது அவன் ஒரே பிடிவாதமாக விரைந்து சென்றுக்கொண்டிருந்தான். ஆபீஸர் அவனெதிற்சென்று கையைப் பிடித்துக்கொண்டு பெட்டியில் என்ன இருக்கிறதென சோதனை செய்ய வேண்டுமென்று பயமுறுத்தினர். “உன்னால் முடியாது; நான் பெட்டியை திறக்கமாட்டேன்; இதனுள் பெரிய கப்பல் பூனை ஒன்று இருக்கிறது; திறந்தால் அது தப்பியோடிவிடும்” என்றான் மாலுமி. “பெட்டியைத் திறக்கின்றாயா என்ன?” என்று ஆபீஸர் கோபாவேசத்தோடு கர்ஜித்தார்.

மாலுமி உடனே பெட்டியைத் திறந்து காட்டவேண்டியதாயிற்று. திறந்ததும் பூனை திடீரென வெளியே தாவிக்குதித்து ஒரே பாய்ச்சலாக கப்பலை நோக்கி ஓடிற்று. மாலுமி அதை மறுபடியும் பிடிப்பதற்காக துரத்திக்கொண்டு கப்பலுக்குள்வந்து சேர்ந்தான். இதுபொழுது பெட்டிக்குள் சாராயப்புட்டிகளை வைத்துக்கொள்ள மாலுமிக்கு சௌகரியம் வாய்த்தது. அவன் மறுபடியும் பெட்டியை எடுத்துக்கொண்டு வெளியே சென்றான். சுங்கத்தைக் கடந்து செல்லும்போது ஆபீஸரைப்பார்த்து வெகு சாமர்த்தியமாக “மிஸ்டர்! ஒரு பீரங்கி குண்டாலும் இனி என் கையிலிருந்து தப்பிப்போக முடியாது” என்று சொல்லிக்கொண்டே அவ்விடத்தை தாண்டிச்சென்றான்.

(2) ஒருவாலிபர் வியாபாரத்தினிமித்தம் ஆர்டர் வாங்குவதற்கு முதன்முதல் வெளியூருக்குச்சென்றிருந்தார். அவர்பல ஊர்களிலும் அதுவிஷயமாக முயற்சித்துக்கொண்டிருக்கும்போது ஒருநாள் நெடுங்காலமாக அதே தொழிலினிமித்தம் யாத்திரை செய்துக்கொண்டிருந்த ஒரு பழைய பெயர்வழியை சந்தித்தார்.

பழைய பெயர்வழி:—தம்பீ! வியாபாரம் சரியாக நடக்கிறதா! ஆர்டர்கள் நிறையக் கிடைத்ததா?

புதிய பெயர்வழி:—ரொம்பமோஸம் பெரியவரே! நான்போகிற எந்த ஊரிலும் என்னை அவமதிக்கவும் நிந்திக்கவுமே செய்கின்றனர்.

பழைய பெயர்வழி:—அதுமிக்க அதிசயந் தான். நான் நாற்பத்தைந்து வருடகாலம் இவ்வேலையாக வீதிகளில் அலைந்து திரிந்துளேன். எனது "சாப்பிள்" சரக்குகளெல்லாம் வாரி தெருவில் வீசி எறியப்பட்டன; எத்தனையோ தடவைகள் என்னை மெத்தையிலிருந்து 'கெல்த்தா' கொடுத்து கீழே தள்ளப்பட்டது. நான் உருண்டு சுருண்டு சாக்கடைக்கு வந்து சேரும்படி நேரிட்டிருக்கிறது. என்பதை மறுக்கமாட்டேன். ஆனால் ஒருபொழுதும் நான் "அவமதிக்கப்படவில்லை" என்று நிச்சயமாய்ச் சொல்வேன்.

(3) இரண்டு நடிகர்கள் வீதியிற் சந்தித்தனர்.

"நண்பா! இவ்வூரில் புதிதாக வந்திருக்கும் ஆட்டத்தில் உன்னை ஏதாது வேடம் பூண்டு நடிப்பதற்கு வேண்டிக் கொண்டார்களா?" என்று ஒருவர் கேட்டார்.

"இல்லை உனக்கு அதில் ஏதேனும் வேலை கிடைத்ததா?" என்றார் மற்றவர்.

"ஆம்! எனக்கொரு வேலை கிடைத்தது. ஜமீன்தார் வேடத்தில் நான் ஆடவேண்டுமாம். இவ்வேடத்தில் நான் மிக்க திறமையாக நடிப்பேன் என்று நீ நினைக்கின்றாயா?" என்று கேட்டார்.

"ஏன்? நீ நன்கு நடித்தால் என்ன, நடியாதிருந்தாலென்ன! நீ உன் காலத்தில் ஒரு மிராசுதாரராக இருந்திருக்கின்றாய் என்னும் பெயர் வகித்தால் போதாதா?"

(4) ஒரு கனவான் சுற்றுப்பிரயாணஞ்செய்யும்போது நாட்டுப்புறத்திலுள்ள ஒருநாவிதனிடம் க்ஷவரம் செய்துக் கொள்ளச்சென்றார். நாவிதன் அவர் தலையில் காயங்களை உண்டு பண்ணுவதும் அதிலிருந்து இரத்தம் வடியாம லிருப்பதற்காக உடனுக்குடன் காகிதத்துண்டை வைத்து ஒட்டுவதுமாக இருந்து வேலை செய்து முடித்தான். கனவான் கூலி கொடுக்கும்போது இரண்டணாவிற்குப் பகரம் 4-அணாவை அவன் கையில் கொடுத்து, "மீதியை நீயே வைத்துக்கொள். நீ பல வேலையும் தெரிந்த கைதேர்ந்த தொழிலாளியாய் இருக்கின்றாய். அம்மட்டன் தொழில், கசாப்புத் தொழில், ரண சிகிச்சை வேலை முதலிய சகலமும் நீ ஒருவனே செய்யக்கூடிய சாமர்த்தியசாலியாக இருப்பதால் உனக்கு 4-அணா கொடுப்பது தகும்" என்று கூறினார்.

(5) ஒருவர் கடைக்குச்சென்று நல்ல மாதிரியான மூக்குக்கண்ணாடி ஒன்றைத் தெரிந்தெடுத்து விலைகொடுத்து வாங்கிவந்தார். அதனை மூக்கில் மாட்டிக்கொண்டு மனைவியினிடத்தில் காண்பித்து அக்கண்ணாடியைப்பற்றி மிக சிலாகித்துப் பேசினார். ஆஹா! என்ன அருமையான கண்ணாடி. நான் இதற்குக் கொடுத்தவிலை மிகச்சொற்பம் என்றே நினைக்கின்றேன். என்ன அதிசயம்! நான் பார்க்கின்ற எந்த வஸ்துவும் அதன் உருவத்தில் கிட்டத்தட்டமும் மடங்கு அதிகமாகவே காண்கின்றது" என்று வர்ணித்தார்.

மனைவி:—அப்படியா! இக் கண்ணாடியை ஏன் வாங்கினீர்கள்? இதனால் எனக்கல்லவோ அதிகத் தொந்தரவு ஏற்படும். வேண்டாம், இதைக்கொடுத்துவிட்டு பெரிய உருவத்தை சிறிதாகக் காட்டக்கூடிய வேறொரு கண்ணாடியை வாங்கிவைத்துக் கொள்ளுங்கள்."

கணவர்:—"என்ன? இப்படிச் சொல்கின்றாய். என் உபயோகத்திற்குத்தானே வைத்திருக்கின்றேன்; உனக்கு என்ன கெடுதி வந்துவிடப்போகிறது?"

மனைவி:—"எடுத்ததெல்லாம் உங்கள் கண்ணிற்குப் பெரிதாகத்தெரிவதால், இப்போது நான் உங்களிடத்தில் செலவுக்காக ஏதாவது கேட்டால் கால்ரூபாவை "இந்தா முக்கால் ரூபாய்" என்று தருவீர்களே. அது கால் ரூபாய்தான் என்று என்னால் உங்களை எவ்வாறு திருப்திபடுத்த முடியும்?"

(6) பளபளப்பான புது ஷில்லிங் (12-பென்ஸ் மதிப்புள்ளது) ஒன்றை கையில் வைத்துக்கொண்டு ஒருவன் கூட்டத்தின் மத்தியில் ஏலம் கூறினான்.

"கனவான்களே! நல்ல நாணயம்! தவறினால் கிடைக்காது. உங்கள் ஆயுளில் இதைப் போல் கண்டிருக்கமாட்டீர்கள். நல்லசமயம்,